28°C
32 C
26 C
தெளிவான
காலநிலை
காணப்படும்

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம்
24


22 MAY 2014
பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

விலை: யாழ். – 20/= வன்னி – 20/= கொழும்பு – 30/=
சுடர்: 29 ■ கதிர்: 175 ■ வள்ளுவர் ஆண்டு: 2045 | வைகாசி 06, செவ்வாய் 20.05.2014

# ஈழத்தமிழர் விடயத்தில் கவனம் செலுத்துவேன்

## வைகோவிடம் உறுதியளித்தார் நரேந்திர மோடி

சென்னை, மே 20
ஈழத்தமிழர்களின் பாதுகாப்புத் தொடர்பில் உரிய கவனம் செலுத்துவேன் என்று உறுதியளித்துள்ளார் நாளை இந்தியாவின் பிரதமராகப் பதவியேற்கவுள்ள நரேந்திரமோடி. ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோவுடன் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு உறுதி வழங்கியுள்ளார்.
இந்தியாவில் கடந்த பத்தாண்டுகளாக ஆட்சி நடத்திய காங்கிரஸ் கட்சி, அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் மண்கௌவியது. அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்ற பாரதீய ஜனதாக் கட்சி மோடி தலைமையில் புதிய அரசு அமைக்கவுள்ளது.
பாரதீய ஜனதாக் கட்சியுடன், தமிழகத்தில் கூட்டணி அமைத்து ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ போட்டியிட்டிருந்தார். ஆயினும் அவர் தோல்வியடைந்திருந்தார். இந்த நிலையில் வெற்றி பெற்று புதிய பிரதமராக பதவியேற்கவுள்ள நரேந்திர மோடியை நேற்று நேரில் சென்று சந்தித்தார் வைகோ.
இந்தச் சந்திப்பின்போது, இந்திய மத்திய அரசு, ஈழத் தமிழர்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்றும் வெளிவிவகாரக் கொள்கை வகுப்பிலுள்ள சோனியாவின் (முன்னைய ஆட்சி நடத்திய காங்கிரஸ் கட்சியின் தலைவி) கைக் கூலிகளை வெளியேற்ற



21ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி சீனா பயணம்

கொழும்பு, மே 20
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று திங்கட்கிழமை சீனாவுக்குப் பயணமானார். இந்தத் தகவலை ஜனாதிபதியின் பேச்சாளர் மொஹான் சமரநாயக உறுதிப்படுத்தியுள்ளார்.
அங்கு நடைபெறவுள்ள "ஆசியாவின் அனைத்து நடவடிக்

— 21ஆம் பக்கம் பார்க்க

## போதையில் அட்டகாசம்: கிடைத்தது சிறைவாசம்

யாழ்ப்பாணம், மே 20
மதுபோதையில் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்திய ஒருவருக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றம் ஒருமாத கால சிறைத் தண்டனை விதித்துள்ளது.
கரம்பொன் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த குறித்த நபர் மதுபோதையில் அட்டகாசம் புரிந்துள்ளார். அதையடுத்து அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.


— 21ஆம் பக்கம் பார்க்க

## படை அதிகாரி சடலமாக மீட்பு

தென்மராட்சி, மே 20
மிருசுவில் பழைய வாய்க்கால் 52ஆவது படையணியின் தலைமை அலுவலகத்தில் படை அதிகாரி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இரவு படுக்கைக்குச் சென்ற குறித்த அதிகாரியே காலையில் சடலமாகக் காணப்பட்டார்.
குறித்த அதிகாரி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பகல் ரோந்து நடவடிக்கைக்குப்பின்னர் இரவு உணவருந்தி

— 21ஆம் பக்கம் பார்க்க

## இராணுவத்துக்கு ஆள்சேர்த்தல் யாழ்ப்பாணத்தில் நேற்று மும்முரம்



யாழ்ப்பாணம், மே 20
இராணுவத்தின் மகளிர் படையணிக்கு ஆள்களை இணைப்பதற்கான நேர்முகத் தேர்வு நேற்று யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது. அதில் 30 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர்களுக்கான பயிற்சிகள் விரைவில் காங்கேசன்துறையில் ஆரம்பிக்கப்படவுள்ளது என்றும் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.
இலங்கை இராணுவத்திற்கு தமிழ்ப் பெண்களை இணைப்பதற்காக கடந்த இரண்டு

21ஆம் பக்கம் பார்க்க

## வலி.வடக்கில் தொடர்கின்றது காணி சுவீகரிப்பு நடவடிக்கை

### புதிய அறிவித்தல்களும் ஒட்டப்பட்டன

யாழ்ப்பாணம், மே 20
வலி.வடக்குப் பகுதிகளில் பொது மக்களின் காணிகளை இராணுவத்தின் தேவைகளுக்காகச் சுவீகரிக்கும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. கீரிமலை நகுலேஸ்வரம் பகுதியில் கடற்படையினரின் தேவைகளுக்காக மேலும் காணிகள் சுவீகரிப்பதற்காக அறிவிப்புகள் தற்போது ஒட்டப்பட்டுள்ளன.
வலி. வடக்கில் உயர் பாதுகாப்பு வலயமாக அரசினால் பிரகடனப்படுத்தப்பட்டு 6 ஆயிரத்து 384 ஏக்கர் காணி சுவீகரிப்பதற்கான அறிவித்தல் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி ஒட்டப்பட்டது. அதன்பின்னர் குறித்த காணிக்

21ஆம் பக்கம் பார்க்க

## 13 பிரேரணைகள் இம்முறை

வடமாகாண சபையின் அடுத்த அமர்வில் விவாதத்துக்கு தயார் நிலையில்

பக்கம் 2

## இந்தியாவின் உளவாளி இலங்கையில் கைதாம்

### 19 ஆண்டுகள் பதுங்கியிருந்தாராம்

யாழ்ப்பாணம், மே 20
இலங்கையில் 19 ஆண்டுகளாக தங்கியிருந்த இந்திய புலனாய்வு முகவர் நிலையத்தின் (றோ) அதிகாரி என்று சந்தேகிக்கப்படும் ஒருவர் அநுராதபுரம், பரசங்கஸ்வெள என்னுமிடத்தில் வைத்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
வட மத்திய மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ரவி விஜயகுணவர்தனவுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில்,'விசேட துப்பறியும் பிரிவினர் இவரைக் கைது

21ஆம் பக்கம் பார்க்க

## வடமாகாணக் கல்விக்கு 310 மில்லியன் ரூபா நிதி

### வழங்கியது உலகவங்கி

யாழ்ப்பாணம், மே 20
வடக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளின் அபிவிருத்திக்கென உலகவங்கி 310 மில்லியன் ரூபா நிதி வழங்கியுள்ளது என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.
வடக்கு மாகாணத்தில் கல்வி அபிவிருத்திகென ஆண்டுதோறும் உலக வங்கி நிதி ஒதுக்கி வருகின்றது. பாடசாலைகளுக்கான கட்டடம் அமைத்தல்,

21ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சியில் ரயில் மோதி 'ஹன்ரர்' வாகனம் சேதம்

கிளிநொச்சி, மே 20
கிளிநொச்சி உதயநகர் பாதுகாப்பற்ற ரயில் கடவையை கடக்க முற்பட்ட ஹன்ரர் வாகனம் ஒன்று பளையிலிருந்து கொழும்புக்குச் சென்ற ரயிலுடன் மோதிக் கொண்டது. நேற்றிரவு 8.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. எனினும் 'ஹன்ர'ரில் இருந்தவர்கள்

21ஆம் பக்கம் பார்க்க

## நிதி நியதிச் சட்டத்தின் மீது நாளை மறுதினம் வாசிப்பு


### வடமாகாண சபையில் நடைபெறும்

யாழ்ப்பாணம், மே 20
வடக்கு மாகாணசபையினால் உருவாக்கப்பட்டுள்ள நிதி நியதிச் சட்டத்தின் மீதான இரண்டாம் வாசிப்பு நாளை மறுதினம் வியாழக்கிழமை இடம்பெறவுள்ள சபை அமர்வில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது என்று நிகழ்ச்சி நிரலில் அறிவிக் கப்பட்டுள்ளது.

21ஆம் பக்கம் பார்க்க

## இசைப்பிரியாவுக்கு அருகே உள்ளவர் மல்லாவியைச் சேர்ந்த உஷாளினி

### ஊடகங்களில் வெளியான படத்தில் உறுதிப்படுத்தினர் உறவினர்



யாழ்ப்பாணம், மே 20
நேற்றுமுன்தினம் ஊடகங்களில் வெளியாகிய ஒளிப்படங்களில், இறுதிப்போரில் இராணுவத்தினரால் உயிருடன் பிடிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடகமான தமிழீழ தேசிய தொலைக்காட்சியின் பணியாளர் இசைப்பிரியாவுக்கு அருகில் இருப்

21ஆம் பக்கம் பார்க்க

# வளலாயில் உள்ள காணிகளை பார்வையிட அனுமதியில்லை

## இராணுவப் பேச்சாளர் கூறுகின்றார்

யாழ்ப்பாணம், மே 20

அதி உயர் பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட வளலாய் பகுதியில் தெரிவு செய்யப்பட்டு சுவீகரிக்கப்பட்ட காணிகளை அளவிடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எனவே அந்தப் பகுதியைச் சென்று பார்வையிடுவதற்கு மக்களை அனுமதிக்க முடியாது - இவ் வாறு தெரிவித்துள்ளார் இராணுவப் பேச்சாளர் ருவான் வணிக சூரிய.

இதேவேளை, யாழ்.மாவட்டச் செயலகத்தினால் கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக்கு கடிதம் மூலம் அனுப்பப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமையவே மக்கள் தமது காணிகளைச் சென்று பார்வையிடுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மாவட்டச் செயலகத்தினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின் பிரகாரம் இன்று முதல் 24 ஆம் திகதி வரையில் கட்டம் கட்டமாக காணிகளை அடையாளயப்படுத்த ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்த நிலையிலேயே, இராணுவப் பேச்சாளர் இவ்வாறானதொரு அறிவித்தலை விடுத்துள்ளார்.

வளலாய் மேற்கு மற்றும் வடக்கில் இராணுவத்தினரின் உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள பகுதிகளில் 224 குடும்பங்கள் மீளக் குடியேறுவதற்காக பதிவுகள் மேற்கொண்டுள்ளன. இந்தக் குடும்பங்களின் காணிகள் உள்ளடங்கலாக குறித்த வளலாய் வடக்குப் பிரதேசத்தில் சுமார் 230 ஏக்கர் காணி சுவீகரிக்கப்பட்டு அந்தக் காணிகளில் வலி. வடக்கு மக்களை குடியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வலி.வடக்கிலிருந்த இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களிலுள்ள குடும்பங்களுக்கு தலா 2 பரப்பு வீதம் வழங்கி மாதிரிக் கிராமத்தில் குடியேற்ற நடவடிக்கை முடுக்கி விடப்பட்டுள்ளது.

"பலாலி இராணுவ முகாமிற்கு சமீபமாகவுள்ள வளலாய்ப் பகுதியில் சுமார் 230 ஏக்கருக்கும் அதிகமானநிலப்பரப்புகாணியை இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கை சில மாதங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டது. இருந்த போதிலும் இந்த பகுதி காடாகி காணப்பட்டமையால் அதனை உரிய முறையில் அளவீடு செய்ய முடியாமல் போயிருந்தது.

இராணுவப் பொறியியல் பிரிவினரால் குறித்த காணி சுத்தம் செய்யப்பட்டு தற்போ[illegible] காணி அளவிடும் நட[illegible]கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்[illegible]. காணி அளவிடும் நடவடி[illegible]க நிறைவடைந்த பின்னர் இடம்பெயர்ந்துள்ளவர்களில் தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களை மீள் குடியேற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்' என்று இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

வளலாய் மக்கள் இன்று முதல் தமது காணிகளைப் பார்வையிடலாம் என்று யாழ்.மாவட்டச் செயலகத்தினால் கோப்பாய் பிரதேச செயலாளர் ஊடாக வழங்கப்பட்ட அறிவித்தலை இராணுவப் பேச்சாளர் முற்றாக நிராகரித்துள்ளார்.

"வளலாய்ப் பகுதிகளைப் பார்வையிடுவதற்கு யாருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. காணியை பார்வையிடுவதற்கு ஏற்கனவே சந்தர்ப்பம் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டது. இருப்பினும் தற்போது காணி அளவிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் அதற்கு பாதிப்புகள் ஏற்படக் கூடும் என்பதால் காணிகளை பார்வையிட முடியாது. காணி அளவிடும் பணிகள் நிறைவடைந்ததன் பின்னரே அதற்கான வாய்ப்பு கிட்டும்" என்று ருவான் வணிக சூர்ய குறிப்பிட்டுள்ளார். (ற-5)

## வடமாகாண சபை அமர்வில் இம்முறை 13 பிரேரணைகள்




யாழ்ப்பாணம், மே 20

வடக்கு மாகாணசபையின் ஒன்பதாவது அமர்வு எதிர் வரும் 22 ஆம் திகதி வியாழக்கிழமை கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களால் சமர்பிக்கப்பட்ட 13 பிரேரணைகள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

அவை வருமாறு-

அவைத் தலைவர் சீ.வி.கே. சிவஞானம் - 2012 ஆம் ஆண்டு பட்டப்படிப்பை முடித்தவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதைப் போல 2013 ஆம் ஆண்டு பட்டப்படிப்பை முடித்தவர்களுக்கும் அரச நியமனம் வழங்கப்பட வேண்டும் என்று பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சை இந்தச் சபை கோருகின்றது என்ற பிரேரணை முன்வைத்தார்.

கிளிநொச்சி மாவட்ட உறுப்பினர் பசுபதிப்பிள்ளை- போரினால் பாதிக்கப்பட்ட, பிறப்பினால் அங்கவீனமானவர்களைப் பாராமரிக்க வடக்கு மாகாணசபை முழுமையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

கிளிநொச்சியின் தேசிய பாடசாலையாகவுள்ள கிளிநொச்சி மத்திய கல்லூரி விளையாட்டு மைதானம் வெளியாரின் தேவைக்காகப் பயன்படுத்தப்படுவதை நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

வடக்கு மாகாண கமக்காரர் அமைப்புக்களும், நீர்ப்பாசனத் திணைக்களமும் இணைந்து உருவாக்கிய திட்ட முகாமைத்துவக் குழுக்களை, வடக்கு மாகாண விவசாய அமைச்சின் கீழ் கொண்டு வருதல். வடக்கு மாகாணத்தில் கமநல சேவைத் திணைக்களத்தின் கீழ் வரும் சிறிய குளங்களை வடக்கு விவசாய அமைச்சின் கீழ் கொண்டு வருதல்.

முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர் து.ரவிகரன்- ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் அனுமதியற்ற கருங்கல் அகழ்வுக்கான முறையற்ற அனுமதி வழங்கியவர்களுக்கு எதிராக வடக்கு மாகாண விவசாய மற்றும் சுற்றுச் சூழல் அமைச்சு நடவடிக்கை எடுத்தல்.

முல்லைத்தீவு நகரில் புதிய பேரூந்து நிலையம் அமைத்தல்.

வடக்கின் முல்லைத்தீவு மாவட்டத்தையும், கிழக்கின் திருகோணமலை மாவட்டத்தையும் இணைக்கும் வகையில், கொக்கிளாய் ஆற்றின் மேலாக கொக்கிளாய் - புல்மோட்டையை இணைத்து புதிய பாலம் அமைத்தல்.

ச.சுகிர்தன்- வடமராட்சி கிழக்கின் தனி நபர் மண் அகழ்வை நிறுத்தி, வடக்கு மாகாண விவசாய மற்றும் சுற்றுச் சூழல் அமைச்சின் மேற்பார்வையில் பிரதேச செயலகம் அல்லது பிரதேச சபையினூடாக மேற்கொள்ளல்.

மன்னார் மாவட்ட உறுப்பினர் அ.அஸ்மின்- மன்னார் மாவட்டத்தில் பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளை இராணுவத்தினரிடமிருந்து பெற்று பொதுமக்களிடம் மீளகையளித்தல்.

மன்னார் தீவுப் பகுதியில் மேற்கொள்ளப்படும் சட்ட விரோத மணல் அகழ்வை நிறுத்துதல்.

க.சிவாஜிலிங்கம்- வடக்கு - கிழக்கில் நிலவும் விஞ்ஞான, ஆங்கில பாட மற்றும் தொழில்நுட்ப பாட ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய இந்தியாவிலிருந்து அதனது [illegible]வில் 2 ஆண்டுகளுக்கு தேவையான ஆசிரியர்களைத் தருவித்தல் வேண்டும். க.பரஞ்சோதி- வலி.கிழக்கில் பொதுமக்களின் காணிகளை இராணுவத்தினர் சுவீகரிப்பதை தடுத்து நிறுத்தல் வேண்டும். (ற-5)

## அடுத்த மாதம் யாழ். வரும் ரயில்

யாழ்ப்பாணம், மே 20

அடுத்த மாதம் யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவை ஆரம்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது என்று தெரிவித்துள்ளார் இந்தியத் துணைத் தூதுவர் வி.மகாலிங்கம்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

"யாழ்ப்பாணத்தில் பல அபிவிருத்திப் பணிகளுக்கு இந்தியா உதவிகள் வழங்கி வருகின்றது. தற்போது ரயில் புனரமைப்பும் நிறைவுறும் தருவாயில் உள்ளது. அடுத்த மாதமளவில் யாழ்ப்பாணத்துக்கு ரயில் சேவை இடம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது"- என்று தெரிவித்தார். (ற-14)

# இன்று அரசியல் பேசினால் நாளை இருக்க முடியாது

## இந்தியத் துணைத் தூதுவர் கூறுகின்றார்

யாழ்ப்பாணம்.மே 20

நான் அரசியல் பற்றி எதுவும் பேச விரும்பவில்லை. இன்று பேசினால் நாளை இருக்க மாட்டேன். அதனால் அந்த விடயத்தை பற்றி பேச வேண்டாம் - இவ்வாறு தெரிவித்துள்ளார் இந்தியத் துணைத் தூதுவர் வி.மகாலிங்கம்.

கடந்த 4 ஆண்டுகளுக்கு மேலாக யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் தூதுவராகக் கடமையாற்றிய வி.மகாலிங்கம், மாற்றலாகி வேறு பணியிடம் செல்லவுள்ளார். இந்தநிலையில் அவர் நேற்று தனது அலுவலத்தில் ஊடக சந்திப்பு ஒன்றை நடத்தியிருந்தார். அந்தச் சந்திப்பின்போது ஊடவியலாளர்கள் யாழ்ப்பாண அரசியல் நிலைவரம் வடக்கு மாகாண சபை போன்றவை குறித்து கேள்வி எழுப்பினர். அதற்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அரசியல் தொடர்பாக நான் இந்த இடத்தில் பேச விரும்பவில்லை. நான் இருக்கப்போவது இன்னும் சிறிது நாள்களே. அதில் அரசியலைப் பற்றி பேசி தேவையற்ற பிரச்சினைகளைக் கொண்டு வர விரும்பவில்லை. நான் சந்தர்ப்பம் கிடைக்கும் போது அரசியல் பற்றி பேசி இருக்கிறேன்.

இன்று நான் அரசியல் பற்றி பேசினால் நான் இருப்பது கடினம். நான இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். அரசியல் வேண்டாம். அதுகுறித்துப் பேசுவது தப்பான அபிப்பிராயத்தை ஏற்படுத்தும். அதனால் அவற்றைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்"- என்று தெரிவித்துள்ளார். (ற-14)

## ஆளும் கட்சியில் இருந்து விமல் விலகுகிறார்?

கொழும்பு, மே 20

தமது கட்சியினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளை அரசு ஏற்றுக்கொள்ளத் தவறினால், ஆளும் கட்சியிலிருந்து விலகத் தயார் என வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ஸ அறிவித்துள்ளார்.

கார்தினல் மல்கம் ரஞ்சித்தை சந்தித்தன் பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட போதே அமைச்சர் விமல் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஜே.என்.பி. பொதுச் சபைக் கூட்டத்தில் 12 அம்ச திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதாகவும், அவற்றை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்க உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள அவர், அந்த சந்திப்பின் பின்னர், முடிவு அறிவிக்கப்படும் என தெரிவித்துள்ளார். (ற)

## சுத்தமான தமிழ் மொழியை கற்றுத்தந்தது யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம்.மே.20

"யாழ்ப்பாணம் தான் எனக்கு சுத்தமான தமிழைக்கற்றுத் தந்தது. இங்குள்ள கலாச்சாரமும் மிகவும் தனித்துவமானது எனக்கு பல சுவையான அனுபவங்களையும் தந்த யாழ்ப்பாணத்துக்கு எனது நன்றிகள்" என்று தெரிவித்துள்ளார் இந்தியத்துணைத்தூதுவர் வி.மகாலிங்கம்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"என்னுடைய பதவிக் காலத்தில் யாழ்ப்பாணத்துக்கு வரும் போது தமிழில் எழுதி வாசிக்கக் கூடிய நிலையில்தான் இங்கு வந்தேன். ஆயினும் இப்போது சுத்தமான தமிழில் பேசக் கற்றுக் கொண்டேன். மேடையில் ஏறி துணிவாகப் பேசும் பழக்கத்தையும் யாழ்ப்பாணம் எனக்கு கற்றுத்தந்துள்ளது.

இங்குள்ள கலாச்சாரங்கள் இந்தியாவுடன் ஒப்பிடுகையில் வித்தியாசமாக இருந்தாலும் கலாச்சாரம் மிகவும் தனித்துவமானது குறிப்பாக இந்து ஆலயங்களிலுள்ள வழிபாட்டு முறைகள் சிறப்பானது. யாழ்ப்பாணம் எனக்கு பல வித்தியாசமான அனுபவங்களை பெற்றுத்தந்துள்ளது. 2009 ஆம் ஆண்டு நான் யாழ்ப்பாணம் வரும் போது இருந்ததை விட தற்போது அதிக மாற்றம் ஏற்பட்டுள்ளது.

வீதி, போக்குவரத்து, தொடர்பாடல் எல்லாமே மாற்றம் பெற்றுள்ளது. கடந்த காலங்களை விட யாழ்ப்பாணம் பொருளாதாரரீதியாக அபிவிருத்தி அடைந்து வருவதாகவே கருதுகிறேன்"- என்று தெரிவித்துள்ளார். (ற-14)

# இந்திய அரசின் நிதியுதவியுடன் 11 ஆயிரம் வீடுகள் கட்டி முடிப்பு

## இந்தியத் துணைத் தூதுவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 20

இந்திய அரசின் நிதியுதவியுடன் வடக்கு மாகாணத்தில் இரண்டாம் கட்டமாக 11 ஆயிரத்து 871 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன என்று இந்தியத் துணைத் தூதுவர் வி.மகாலிங்கம் தெரிவித்தார்.

இந்திய வீட்டுத் திட்டம் தொடர்பில் ஊடகங்களில் வெளியான தகவல்கள் தொடர்பில் விளக்கமளிக்கும்போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் குறிப் பிடுகையில்,

"இந்திய அரசின் நிதியுதவியுடன் முதல் கட்டமாக வடமாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் 25 இடங்களில் ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இரண்டாம் கட்டமாக 43 ஆயிரம் வீடுகள் வடக்கிலும் கிழக்கிலும் கட்டுவதற்காக 2012 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்டது.

இன்றைய நிலையில் 26 ஆயிரத்து 931 பயனாளிகள் வீட்டுத் திட்டத்துக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இவற்றில் 11 ஆயிரத்து 871 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தில் 550 சதுர அடியில் வீடு கட்டுவதற்கு ஐந்தரை இலட்சம் ரூபா வழங்கப்படுகின்றது.

இந்திய வீட்டுத்திட்டம் பயனாளிகளைக் கடனாளிகளாக மாற்றியுள்ளது என்ற தப்பான அபிப்பிரயாயம் உள்ளது. இந்திய வீட்டுத்திட்டம் 'வீட்டுக்கு வீடு' என்ற திட்டத்தில், வீடு இருந்தவர்களுக்கு போரால் அழிந்த வீடுகளுக்கு பதிலாகக் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. முன்னைய வீடு இருந்த மாதிரியே கட்ட வேண்டும் என்று நினைக்கிறார்கள். வீடு கட்டும் போது மாபிள் வீடுகள் கட்டி இருக்கிறார்கள்.

இந்திய வீட்டுத்திட்டத்துக்கு இரு நாட்டு அரசுகளும் ஒருமித்துத் தான் முடிவு எடுக்கப்பட்டது. அரச அதிபரின் முடிவில் பயனாளிகள் தெரிவு இடம்பெற்றது. போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மட்டும்தான் இது வழங்கப்பட்டுள்ளது.

அடுத்த வீட்டுத்திட்டம் தொடர்பில் புதிய அரசு தான் முடிவெடுக்க வேண்டும். ஏற்கனவே எடுத்த திட்டத்தை தடை போட முடியாது.

குறிக்கப்பட்ட காலத்தில் இந்தத் திட்டம் பயனாளிகளுக்கு வழங்கப்படும்"- என்று தெரிவித்தார். (ற-14)

## சிறுவர் மீதான குற்றங்கள் இலங்கையில் அதிகரிப்பு

இலங்கையில் சிறுவர்கள் மீதான துன்புறுத்தல் தொடர்பான சம்பவங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. பாடசாலை ஆசிரியர்களால் மாணவர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள், துன்புறுத்தல் சம்பவங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. எனினும், இந்த நிலைமை ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலைமையல்ல என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## கடமையேற்றுள்ள கலாசாலை ஆசிரியருக்கு மே-19- ஜூன்-8 வரை படிப்பு லீவு

அச்சுவேலி, மே 20
கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சியை முடித்துக்கொண்டு பாடசாலைகளில் கடமையேற்றுள்ள ஆசிரியர்களுக்கு இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வசதியாக மே- 19ஆம் திகதியில் இருந்து ஜூன்-8 ஆம் திகதிவரை படிப்பு விடுமுறை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் வழங்கப்படுகின்றது.

குறித்த காலப் பகுதிக்கான படிப்பு விடுமுறை அனுமதி தொடர்பாக சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் தமது பாடசாலை அதிபர் ஊடாக வலயக் கல்விப் பணிப்பாளருக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

ஆசிரிய கலாசாலையில் இருந்து இரண்டு வருட பயிற்சியை முடித்த ஆசிரியர்களுக்கு இறுதிப் பரீட்சை ஜூன் -2ஆம் திகதியில் இருந்து 8ஆம் திகதிவரை நடைபெற இருக்கின்றது. இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படும் இறுதிப் பரீட்சைக் குத் தோற்றுவதற்கு வசதியாக ஆசிரியர்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைய மே-19 இல் இருந்து ஜூன்-8 வரை படிப்பு விடுமுறைக்கான அனுமதியை வடக்கு மாகாண கல்வி அமைச்சு வழங்கியுள்ளது.

படிப்பு விடுமுறை அனுமதி தொடர்பாக வடக்கு மாகாணத்தில் உள்ள வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கும் வடக்கு மாகாண கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (வ-11)

# வலுமிக்க மோடி அரசு இலங்கைக்கே சாதகம்

### தனிப்பெரும்பான்மை பெற்றிருப்பதால் தமிழகத்துக்கு பணியாது என்கிறது அரசு

கொழும்பு, மே 20
இந்தியாவில் தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சியமைப்பதற்குரிய பலத்தை பாரதீய ஜனதாக் கட்சி பெற்றிருப்பது இலங்கைக்குச் சாதகமான விடயமாகும் என்றும், தமிழ் நாடு போன்ற மாநில அரசுகளுக்குப் பணிய வேண்டிய சூழ்நிலை மத்திய அரசுக்கு ஏற்படாது என் றும் அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல்ல நேற்று தெரிவித்தார்.

மஹிந்தவுக்கும் மோடிக்குமிடையில் பல ஒற்றுமைகள் இருப்பதால் மஹிந்த - மோடி கூட்டு எதிர்காலத்தில் சிறந்த உறவுகளைப் பேணும் என்றும் அவர் கூறினார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாடு ஊடகத்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்றது. அமைச்சரவையில் எடுக்கப்பட்ட முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னர் கேள்வி நேரம் ஆரம்பமானது.

இதன்போது, இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் மோடி தலைமையில் களமிறங்கிய பாரதீய ஜனதாக் கட்சி தலைமையிலான ஜனநாயக தேசியக் கூட்டணி வெற்றிபெற்றுள்ள விவகாரம் தொடர்பில் ஊடகவியலாளர்கள் பல கோணங்களில் கேள்விக் கணைகளைத் தொடுத்தனர்.

இவற்றுக்கு பதில் வழங்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

#### இந்தியப் பொருள்களை வாங்கினால் கை வெட்டப்பட்ட யுகம்

"இலங்கை அரசுக்கும் காங்கிரஸ் அரசுக்குமிடையில் கடந்த காலங்களில் சிறந்த உறவுகள் இருக்கவில்லை. ஒரு முறுகல் நிலையே ஏற்பட்டிருந்தது. இந் நிலையில், இந்திய மத்தியில் புதிய ஆட்சியொன்று மலர்ந்துள்ளது இதனுடன் இலங்கையின் உறவுகள் எவ் வாறு அமையும்" என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அமைச்சர்,

வரலாற்றை எடுத்துக்கொண்டால், ஒரு கால கட்டத்தில் இலங்கையில் இந்திய விரோத புத்தகங்கள் வெளியிடப்பட்டன. மற்றுமொரு காலப்பகுதியில் இந்தியப் பொருள்களைக் கொள்வனவு செய்தால் கை வெட்டப்படும் சூழ்நிலை இருந்தது. அதன் பின்னர் டில்லியுடன் சிறந்த முறையில் உறவுகள் பேணப்பட்டன. எனவே, பிரதமர் மோடி தலைமையில் அமையவுள்ள இந்திய அரசுடனும் சுமுகமான முறையில் உறவு பேணப்படும் என்று குறிப்பிட்டார்.

#### தனித்து முடிவெடுக்கும் அதிகாரம் மோடியிடம்

அதேவேளை, "தமிழக அரசுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று இந்தியாவின் புதிய பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். இதை எந்தக் கோணத்தில் இலங்கை அரசு உற்று நோக்குகின்றது" என எழுப்பப்பட்ட கேள்விக்கு,

மத்தியில் வலுவானதொரு ஆட்சி அமையவுள்ளது. தனித்து ஆட்சிய மைப்பதற்குரிய பலத்தை பா.ஜ.க. பெற்றிருப்பதால், மாநில அரசுகளின் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படாது. சரி யான முடிவோ, தவறான முடிவோ அதைத் தனித்து எடுப்பதற்குரிய பலம்-சக்தி மோடிக்கு கிடைத்துள்ளது. மத்தியில் இவ்வாறு வலுவானதொரு ஆட் சியமைவது இலங்கைக்கு சாதகமான விடயமாகும்.

#### மஹிந்த- மோடி கூட்டு எப்படி?


"மத்தியில் அமையவுள்ள புதிய அரசுடன் இலங்கையின் அணுகுமுறைகள் எவ்வாறு அமையும்" என்ற கேள்விக்கு, மஹிந்தவுக்கும் மோடிக்குமிடையில் ஒற்றுமையான பல விடயங்கள் இருக்கின்றன. எனவே, சிறந்த முறையில் உறவுகள் அமையும் என்று பதில் வழங்கினார் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல.

"இந்தியாவுக்கு வெளியில் வாழும் தமிழர் தொடர்பிலும் கவனம் செலுத்துவார் என்று மோடி அறிவித்துள்ளார். இது இலங்கை விடயத்தில் எவ் வாறு தாக்கம் செலுத்தும்?" என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அமைச்சர்,அது ஒரு நற்சிந்தனையாகும். இந்தியர் என்று அவர் பொதுவாகத் தான் குறிப்பிட்டிருந்தார் போலும் - என்றார்.

#### மஹிந்த சீனா விரைந்தது ஏன்?

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சீனாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். இந்தியத் தேர்தல் முடிவடைந்த கையோடு இந்தப் பயணம் அமைந்துள்ளது. இது தொடர்பில் உங்கள் கருத்து என்ற வினாவுக்கு விடையளித்த அமைச்சர் கெஹலிய, இது முன்கூட்டியே திட்ட மிடப்பட்ட பயணம். அதற்கும் இதற்கும் தொடர்பில்லை. பயணத்தை நிறுத்தினார், சில வேளை, மோடி கோபப்படலாம் அல்லவா என்று சிரித் தப்படியே கூறினார்.

அத்துடன், மோடிக்கு வாழ்த்து தெரிவித்துள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இலங்கை வருமாறு மோடிக்கு அழைப்பு விடுத்துள்ளார் என்றும் குறிப்பிட்டார். (ஜ-சி)



தமது பகுதிக்கு மின்சாரம் வழங்கக்கோரி ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்ட மாங்குளம் பனிச்சங்குளம் பகுதி கிராம மக்கள் வவுனியாவில் அமைந்துள்ள இலங்கை மின்சார சபையின் வடக்கின் வசந்தம் கருத்திட்ட அலுவலகத்துக்கு ஊர்வலமாகச் செல்வதுடன் பொறியியலாளர் திருமதி தயாபரனிடம் மனுவொன்றையும் கையளிக்கின்றனர். (க-421)

## உலக சுகாதார ஸ்தாபனத்தின் உப தலைவராக மைத்திரிபால

### 67 ஆவது வருடாந்த மாநாடு ஜெனிவாவில் நேற்று ஆரம்பம்

கொழும்பு, மே 20
உலக சுகாதார ஸ்தாபனத்தின் உப தலைவராக இலங்கை சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நியமிக்கப்பட்டுள்ளார். உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறுபத்து ஏழாவது அமர்வு இன்று ஜெனீவாவில் தொடங்கியுள்ளது. எதிர்வரும் 24 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ளனர். இதில் முன்னதாக நிர்வாக குழு உறுப்பினர் தெரிவு இடம் பெற்றது. இதில் இலங்கை சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவுசெய்யப்பட்டார். இந்த மாநாட்டில் நிதிக் கொள்கைகளை மேற்பார்வை செய்தல், ஆய்வு மற்றும் உத்தேச பட்ஜெட் ஒப்புதல் உள்ளிட்ட விடயங்கள் ஆராயப்படவுள்ளதாக அந்த அமைப்பு அறிவித்துள்ளது. 3000 க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் பங்கேற்கின்றனர்.

அமர்வு நடைபெறும் 6 நாள்களிலும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் 194 உறுப்பு நாடுகளின் உயர் மட்ட பிரதிநிதிகள் சேர்ந்து உலக சுகாதார நெருக்கடிகள் குறித்து ஆராயவுள்ளனர். நீரிழிவு நோய், இதய நோய், புற்றுநோய் மற்றும் நுரையீரல் நோய் எனத் தொற்றா நோய்களைத் தடுக்க மற்றும் கட்டுப்படுத்த முயற்சிகளை மேற்கொள்ளல். காச நோயைத் தடுக்க மற்றும் கட்டுப்படுத்த ஒரு புதிய உலக மூலோபாயத்தை எட்டுதல். வைரஸ், கல்லீரல் அழற்சி நோயாளிகளுக்கு சுகாதார மேம்படுத்தல் திட்டங்கள். தாய், சேய் ஊட்டச்சத்து தொடர்பான உலக சுகாதார ஸ்தாபனத்தின் உலக மூலோபாயம் முன்னேற்றம். போன்ற முக்கிய திட்டங்கள் குறித்தும் இந்த மாநாட்டில் விவாதிக்கப்படவுள்ளது. (ஐ)

# நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றத்தில் விவாதம்

### அரச பங்காளிகள், கூட்டமைப்பு முடிவு இன்று

கொழும்பு, மே 20
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி அரசுக்கு எதிராக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்றும் நாளையும் நாடாளுமன்றில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

கூட்டணிஅரசுக்குள்தற்போது உட்கட்சிப்பூசல்வலுத்துள்ளதால் நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் பங்காளிக் கட்சிகள் எத்த கைய முடிவை எடுக்கும் என்பது தொடர்பில் பரபரப்பாக பேசப்படு கின்றது.

இந்நிலையில், இது தொடர்பில் தமதுக் கட்சிகளின் நிலைப்பாட்டை ஜாதிக ஹெல உறுமய, அமைச்சர் விமலின் தேசிய சுதந்திர முன்னணி ஆகிய கட்சிகள் இன்று அறிவிக்கவுள்ளன.

எனினும், கூட்டணி அரசின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் சபைக்கு வந்து எதிராக வாக்களிக்க வேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்றும், அவர்களின் உண்மையான நிலைப்பாடு வாக்கெடுப்பின் போது தெரியவரும் என்றும் அமைச்சரவைப்பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல்ல நேற்று தெரிவித்தார்.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. ஆகிய கட்சிகள் இன்று நடைபெறும் அக்கட்சிகளின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தின் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் இறுதி முடிவை எடுக்கவுள்ளன. மேற்படி கட்சிகள் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கும்என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன், ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணி ஆகிய அரச பங்காளிக் கட்சிகளும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கும் என எதிர் பார்க்கப்படுகின்றது.அரசிலுள்ள இடதுசாரிக் கட்சிகள் இதை எதிர்க்கவுள்ளன. போதைப் பொருள் குற்றச்சாட்டு கள் தொடர்பில் அரசு உரிய நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டது என்றும் அதனால் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய சிக்கல்களைச் சுட்டிக்காட்டியுமே அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் 31 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டுள்ள இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்க்கட்சிப் பிரதம கொறடாவான ஜோன் அமரதுங்க, நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் கடந்த பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதி ஒப்படைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

# சுவிஸில் எழுச்சியுடன் நடைபெற்ற மே-18 தமிழ் இன அழிப்பு நாள்



ஈழத்தமிழர் வரலாற்றில் மறக்கமுடியாத வலியான முள்ளிவாய்க்கால் படுகொலையின் கவனவீர்ப்பு நிகழ்வான, மே 18 - தமிழ் இன அழிப்பு நாள் சுவிஸில் எழுச்சியுடன் நடைபெற்றது.

சுவிஸ், பேர்ண் நாடாளுமன்றம் அருகில் சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ் வில் சுவிஸ் வாழ் தமிழ் மக்கள் மிகவும் உணர்வு பூர்வமாகக் கலந்து கொண்டி ருந்தனர்.

சுவிஸ் தமிழர் ஒருங் கிணைப் புக் குழுவினரின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

நிகழ்வில் சிறப்பு வெளியீடாக விடுதலைப் புலிகளின் தலைவர், தமிழீழம், தமிழ் இன அழிப்பை வெளிப்படுத்தும் வகையிலான தபாற்தலைகள் வெளியிட்டு வைக்கப்பட்டன.

நிகழ்வில் சமகால அரசியல் தொடர்பான எழுச்சியுரைகளுடன், இளையோர்களால் வேற்றின மக்களும் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் ஜேர்மன், பிரெஞ்ச், இத்தாலி மொழிகளில் பேச்சுக்கள் இடம்பெற்றிருந்ததுடன் இன அழிப்பு சார்ந்த துண்டுப் பிரசுரங்களும் வழங்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன் தொடர்ச்சியாக வலே தமிழ் சங்கத்தினரின் ஏற் பாட்டில் சியோன் பெரிய தேவாலயத்தில் அன்றைய தினம் காலை 10.30 மணிய ளவில் நடைபெற்ற சிறப்பு வழிபாட்டில் பெருமளவிலான தமிழ் மக்களோடு, பல நூற்றுக் கணக்கான வேற்றினத்தவர்களும் உணர்வு பூர்வமாக கலந்து கொண்டனர். அத்துடன் பிரெஞ்ச் மொழியிலான துண்டுப் பிரசு ரங்களும் விநியோகிக்கப்பட்டன. (வ)

தென் இந்தியக் கலைஞர்களினால் பாராட்டப்பட்ட
முன்னணி இசையமைப்பாளர்



**ஸ்ரீ குகனின் இசையில்**

வட புலத்தின் முதல் தர இசைக்குழுவான

யாழ் **ஸப்தஸ்வரா இசைக்குழு**

* முன்னணிக் கலைஞர்கள்
* ஜெயா சுகுமாருடன் பிரபல பாடகர்களின் சங்கமம்...

- அழைத்து மகிழுங்கள் -

தொடர்பு: ஸ்ரீ குகன் 0776980573

பக்திப் பாடல் இசை நிகழ்வும் ஒழுங்குபடுத்தித்தரப்படும்

(48262)

## அனுமதியின்றி பனை மரம் வெட்டியோர் கைது

தென்மராட்சி, மே 20

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் சட்ட விரோதமாக பனைமரங்கள் வெட்டிய மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அனுமதிப் பத்திரமின்றி பனை மரங்கள் தறிப்பதாக பொது மக்கள் கொடுத்த இரக சியத் தகவலை அடுத்து அந்தப் பகுதிக்கு விரைந்த பொலிஸார் மூவரையும் கைது செய்து சாவகச்சேரி நீதி மன்றில் முற்படுத்தினர். இதன்போது தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள் பிணையில் செல்ல நீதிவான் உத்தரவிட்டார். (வ-9)

## வீதியில் சென்றவர்களை மறித்து தாக்கிய இருவர் கைது

கொழும்பு, மே. 20

பாணந்துறையில் முஸ்லிம்கள் இருவரை இடை மறித்த நபர்கள் கடுமையாகத் தாக்கினர். சம்பவம் அறிந்து வந்த பொலிஸார் தாக்குதல்தாரிகளை கைது செய்தனர். இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக் கிழமை அதிகாலை இரண்டு மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் பாணந்துறை தொட்டவத்தையைச் சேர்ந்தவர்களான இலியாஸ் காசீம், (வயது - 46) எம்.எச்.எம். அத்தாஸ், (வயது - 51) ஆகிய இருவருமே காயமடைந்துள்ளனர்.

உணவகம் ஒன்றில் பணியாற்றும் இருவரும் பணி முடித்து வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது பாணந்துறைவத்தல்பொல வெள்ளைக் கோயில் முச்சந்தி பகுதியில் இடை மறித்த இனந்தெரியாத நபர்கள் அவர்களை கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

சம்பவம் குறித்து பாணந்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை யடுத்து, பொலிஸார் சம்பவ இடத்துக்கு சிவில் உடையில் சென்றுள்ளனர். அவர்களையும் இனந்தெரியாத நபர்கள் தாக்கமுற்பட்டுள்ளனர். இதனை யடுத்து பொலிஸார் அந்த இரண்டு நபர்களையும் கைது செய்தனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-10)

# இனவாதத்துக்கு எதிராக களமிறங்கும் அரசியல் வாதிகளைப் பாராட்ட வேண்டும்

### வடமாகாண சபை உறுப்பினர் அஸ்மின் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 20

நாட்டில் அரங்கேறும் திட்ட மிட்ட இனவாத முன்னெடுப்பு களுக்கு எதிராக களமிறங்கியுள்ள பெரும்பான்மை முற் போக்கு அரசியல் தலைவர்கள் பாராட்டப்பட வேண்டிய வர்கள்.

இந்த நாட்டில் இனவாதத்தை தூண்டிவிட்டு அதனடிப்படையில் ஆயுத கலாசாரத்தையும் இராணுவ நடவடிக்கைகளை யும் அவசரகால பயங்கரவாத தடைச் சட்டங்களையும் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கச் செய்து அப்பாவி சிங்கள மக்களின் உள்ளங் களில் ஏனைய இனத்துவங் கள் குறித்த ஐயப்பாட்டைத் தொடர்ந்தும் தக்க வைப்பதன் மூலம் தம்முடைய குடும்ப சர்வாதிகார ஆட்சியை தக்க வைக்க முடியும் என ஒரு சிலர் கணக்குப்போட்டு செயற் படுவது வெள்ளிடைமலையாகப் புலப்படுவதாக வட மாகாண சபை உறுப்பினர் அஸ்மின் அய்யூப் தெரிவித் தார்.

அண்மைக் காலமாக இலங் கையில் இடம்பெற்றுவரும் இன முரண்பாட்டு நடவடிக்கைகள் குறித்து வெளியிட் டுள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது:-

அநியாயக்காரர்கள் தேசப் பற்று , பௌத்தத்தின் எழுச்சி என்றெல்லாம் மாயைகளை உருவாக்கி மக்களையும் தேசத் தையும் பலிக்கடாவாக்குகின் றார்கள். இத்தகைய மிக மோசமான அதிகார வெறி பிடித்த அரசியல் தலைவர்களால் இந்த நாட்டுக்கும் மக் களுக்கும் எந்த வித நன்மைகளும் ஏற்பட்டுவிடமாட்டா.

அடாவடித்தனங்கள், அச்சுறுத்தல்கள், அடக்குமுறை களை மேற்கொள்ளும் குறித்த குழுவினருக்கு அஞ்சாமல் இந்த நாட்டில் ஏற்பட்டு வரும் இன முரண்பாட்டு செயற் பாடுகளுக்கு எதிராக பல சிங்களத் தலைவர்கள் செயற்படுவது நாட்டில் இன்னமும் மனிதம் வாழ்ந்து கொண்டி ருக்கின்றது என்பதற்கு அடை யாளமாக இருக்கின்றது.

இந்த நாட்டின் பிரதமர் தி.மு.ஜயரத்ன ,மக்கள் விடு தலை முன்னணியின் தலை வர் அநுரகுமார திசாநாயக்க, அவரது கட்சியின் முக்கிய அரசியல் தலைவர்கள் , ஐக் கிய தேசியக் கட்சியின் சஜித் பிரேமதாஸ, தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, ஆளும்தரப்பைச்சேர்ந்த டிலான் பெரேரா, நிமல்சிறிபாலடிசில்வா, ராஜித சேனரத்னா போன்ற முக்கிய அரசியல் தலைவர்கள் இந்த நாட்டில் நிலவும் இனவாத நடவ டிக்கைகளுக்கு தங்களு டைய எதிர்ப்புக் களை வெளிப் படுத்தியிருக்கின்றார்கள். இத்தகைய தலைவர்களின் செயற்பாடு களை நாம் வர வேற் கின்றோம் என்றுள்ளது. (வ-10)

**1 ஆம் ஆண்டு நீங்கா நினைவுகள்**



தோற்றம் 26.06.1962 மறைவு 31.05.2013

**அமரர் விசுவலிங்கம் சண்முகநாதன் (அத்தான்)**

அன்போடு அரவணைத்து அமுத மொழி பேசி - எமை
தோள் மீதும் மார்மீதும் சுமந்த அப்பாவே
எம்மைத் தவிக்க விட்டு காத தூரம் சென்றதேனோ
கண் தூங்க மறுக்குதையா உங்கள் நினைவலைகள்
படைத்தவன் அழைத்ததனால் எமைப் பிரிந்து சென்றீரோ
மறைந்தாலும் எம்முடன் வாழ்கின்றீர் என்னும் - இறை
நம்பிக்கை எம்மை தேற்றுதல் செய்ய
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

*"செல்வபதி", பாப்பா தோட்ட வீதி, இணுவில் மேற்கு, இணுவில்.*

மனைவி, மகன், மகள் மற்றும் குடும்பத்தினர்

**கண்ணீர் அஞ்சலி**

எமது பாடசாலை ஆசிரியரான பா.அருள்ராஜ்
அவர்களின் அன்புத் தாயார்

**அமரர் புஸ்பராணி பாலசுந்தரம்**

அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திபெறவும் பிரார்த்திக்கின்றோம் .

ஆசிரியர் கழகம்,
யா/ கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தியாலயம்.

**மரண அறிவித்தல்**

**சுவாம்பிள்ளை பங்கிராஸ் (செல்வராசா)**



நல்லாயன் வீதி, சில்லாலையைப் பிறப்பிடமாகவும், 50/6, பலாலி வீதி, கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சுவாம்பிள்ளை பங்கிராஸ் நேற்று (19.5. 2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுவாம்பிள்ளை-றோசமுத்து தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான பற்றிக், மேரி இமெல்டா மற்றும் அத்தனாசியார், பெலிஸ்ராஸ், எட்வேட், பிரான்சீஸ், ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.05.2014) செவ்வாய்க் கிழமை பி.ப. 3 மணிக்கு அவரது சில்லாலை இல்லத்தில் இருந்து சில் லாலை கதிரைமாதா ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக் கப்பட்டு பின் சில்லாலை கதிரைமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நல்லாயன் வீதி, சில்லாலை.* (48276)

தகவல்: S.B.றமேஷ்குமார் (மருமகன்)

**தேவை**

சகலவிதமான நெல் வகைகளும் கொள்முதல் செய்யப்படும்.
தொடர்பு : 077 772 2215 (48220) (7.6.3)

**தேவை**

யாழ்ப்பாணத்திற்குள் பொருட்களை விநியோகம் செய்வதற்கு சிறிய வடி (Budi) ரக பொடியுடன் கூடிய மூடிய வாகனம் மாதாந்த வாடகைக்கு தேவை.

தொடர்பு நேரம்: காலை 9.00 தொடக்கம் மாலை 5.00 மணிவரை
தொ.பே.: 071 431 2730

**கண்ணீர் அஞ்சலி**



அமரர்
**கதிரிப்பிள்ளை ஸ்ரீஸ்கந்தராஜா**

நேற்று (19.05.2014) திங்கட் கிழமை சிவபதமடைந்த கதிரிப்பிள்ளை ஸ்ரீஸ்கந்தராசா அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பூரணி நகை மாடம்
1/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

கன்னிஹா ஜுவல்ஸ்,
99சி, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**மரண அறிவித்தல்**



**சத்தியானந்தம் பதூஷன்**

புன்னாலைக்கட்டுவன் தெற்கு, உண்டியலடியைப் பிறப்பிடமாகவும், சூராவத்தை சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சத்தியானந்தம் பதூஷன் (பதுக்குட்டி) (18.05.2014) அன்று அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் சத்தியானந்தம் (றஞ்சன்), சுதர்சினி (சுதா) தம்பதியரின் பாசமிகு மகனும், மிதுசாளி யின் அன்புச் சகோதரனும், காலஞ் சென்ற சீனியர் மற்றும் பூமணி, மகேந்திரம் - திரவியபுஸ்பம் ஆகியோரின் பாசமிகு பேரனும், றஞ்சினி, சாந்தி, வனிதா, கவிதா, கிருபன் ஆகியோரின் மருமகனும், ஆனந்தன், ஈசன், ஞானேஸ்வரன், மைதிலி, மீரா, யசோ (சுவிஸ்) ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் (20.05.2014) செவ்வாய்க்கிழமை நடைபெற்று தகனக்கிரியைக்காக பி.ப. 2 மணியளவில் சுன்னாகம் கொத்தியாலடி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சூராவத்தை, சுன்னாகம்.*

தகவல்: குடும்பத்தினர்.

# டெங்கால் பாதிக்கப்படுவோர் தென்மராட்சியில் அதிகரிப்பு

## கடந்த 15 தினங்களில் 15 பேர் வரை பாதிப்பு


கோப்புப்படம்

தென்மராட்சி, மே 20
சுகாதாரப் பரிசோதகர்கள் கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக வேலை நிறுத்தத்தில் குதித்துள்ள நிலையில் தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்கு நோயால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதி கரித்துக் காணப்படுகிறது.
கடந்த 15 தினங்களில் 15 பேர் வரை டெங்கால் பாதிக்கப்பட்டுள்ளதாகச் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்களில் பெரும் பாலானோர் கொழும்பில் தங்கியுள்ள பல்கலைக்கழக மாணவர்களும் கொழும்புக்குச் சுற்றுலா சென்றவர்களும் எனத் தெரிவிக்கப்பட்டது.
சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு, பொது சுகாதார பரிசோதகர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்ட போதிலும் டெங்கால் பாதிக்கப்பட்டவர்களின் விவரங்கள் கிடைத்ததும் பிரிவு மலேரியா தடுப்பு உத்தியோகத்தர்கள் மூலம் ஆரம்பக் கட்ட தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில்லை.
இதேவேளை- சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்டவர்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ள போதிலும், பிரதேச சபையினர் டெங்கைக் கட்டுப்படுத்துவதற்கான வளங்கள் வழங்குவதில் இழுத் தடிப்புச் செய்வதால் சிரமங்களை நோயாளர்கள் எதிர்நோக்க வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ-9)

## சகோதரிகள் விபத்தில் காயம்


தென்மராட்சி, மே 20
பாடசாலைக்குச் சைக்கிளில் சென்ற சகோதரிகள் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை சாவகச்சேரி சந்தியில் இடம்பெற்றது. சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவிகளான அவர்கள் சாவகச்சேரி ஏ-9 வீதியில் டச்சு வீதிக்குச் செல்வதற்காக திரும்பிய வேளையில் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் சைக்கிளுடன் மோதியதில் தூக்கி வீசப்பட்டு காயமடைந்தனர்.
சாவகச்சேரி கச்சாய் வீதியைச் சேர்ந்த கனிஸ்ரன் கலிஸ்டா (வயது-16) என்பவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு வீடு திரும்பியுள்ளார். (வ-9)

## உரிமையாளர் வருகைக்காக காத்திருக்கும் 6 சைக்கிள்கள்

தென்மராட்சி, மே 11
உரிமையாளர்களின் வரவுக்காக வருடக்கணக்கில் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றப் பாதுகாப்பு நிலையத்தில் ஆறு சைக்கிள்கள் காத்திருக்கின்றன.
சாவகச்சேரி நகர்ப் பகுதியில் அநாதரவாகக் காணப்பட்ட சைக்கிள்கள் மன்றப் பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் மீட்கப்பட்டு மன்ற அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்ட ஆறு சைக்கிள்களே உரிமையாளர்களிடம் கையளிக்கப்படாத நிலையில் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன.
கடந்த இரண்டு வருட காலத்தில் சாவகச்சேரி நகர்ப் பகுதியில் கைவிடப்பட்ட சைக்கிள்களின் உரிமையாளர்கள் மன்ற அலுவலகத்தில் உரிய ஆதாரங்களைச் சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## 60 பேர் கொண்ட சர்வ மதக் குழு இவ்வாரம் யாழ்ப்பாணம் வருகை

யாழ்ப்பாணம், மே 20
சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான நல்லிணக்க நிறுவனத்தின் ஏற்பாட்டில் தென்னிலங்கை சர்வமதக் குழுவினர் இவ்வாரம் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர்.
யாழ்.சர்வமதத் தலைவர்களுடன் புரிந்துணர்வையும் மக்களுடன் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தும் நோக்கில் இடம்பெறும் 60 பேர் கொண்ட இந்தக் குழுவினர் எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் பல இடங்களிலும் கலந்துரையாடல்கள் கருத்துப் பகிர்வில் ஈடுபடவுள்ளனர். 24 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் யாழ். சர்வமதப் பேரவையினருடன் சந்திப்பு இடம்பெறும்.
25 ஆம், 26 ஆம் திகதிகளில் நல்லூர் துர்க்கா மணி மண்டபம், யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி, கொழும்புத்துறை செபமாலை அன்னை மண்டபம் ஆகியவற்றில் மேற்குறித்த இடங்கள் சார்ந்த கிராம மக்களுடன் 3 குழுக்களாகப் பிரிந்து கருத்துப் பரிமாற்றக் கலந்துரையாடல்கள் இடம்பெறும்.
முன்னதாக கொழும்புத்துறை, நாவாந் துறை, நல்லூர் கிராமங்களில் தெரிவு செய்யப்பட்ட வீட்டு உறுப்பினர்களுடன் ஒவ்வொரு உறுப்பினர் பகல் பொழுதில் தங்கியிருந்து உரையாடல்களை மேற்கொள்வர் என தெரிவிக்கப்படுகிறது. (ஓ-135)


இலங்கை மின்சார சபையின் யாழ்.மாவட்ட தலைமை அலுவலகத்துக்கான 5மாடிக் கட்டடம் யாழ்.பழைய பூங்கா வளாகத்தினுள் அமைக்கப்பட்டு வருகிறது. கட்டட நிர்மாணப் பணிகள் பெரும் பகுதி முடிவுறும் நிலையில் காணப்படுகிறது. (ஓ-135)

## வன்னிவிளாங்குளம் அம்பாள் ஆலய விழாவுக்கு ஏற்பாடு

பூநகரி, மே 20
மாந்தை கிழக்கு வன்னி விளாங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் அடுத்த மாதம் 6 ஆம் திகதி சிறப்பாக நடைபெறவுள்ளது. இதற்கான சகல ஒழுங்குகளையும் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் மேற்கொண்டுள்ளார்.
பிரசித்தி பெற்ற ஆலயத்தின் வருடாந்த பொங்கலை முன்னிட்டு கடந்த வாரம் முல்லை மாவட்ட அரச அதிபர் தலைமையில் ஆலய மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ஆலயத்துக்கு வருடம் அடியார்களின் வசதி கருதி மேற்கொள்ள வேண்டிய வேலைத் திட்டங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.
அந்தக் கூட்டத்தில் மாவட்டக் கலாசார உத்தியோகத்தர், சுகாதார உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், பொலிஸார் உட்படப் பலர் கலந்துகொண்டனர். அடியார்களின் நலன்கருதி விசேட போக்குவரத்து வசதிகளும் மற்றும் சுகாதாரம், குடிதண்ணீர் போன்ற வசதிகளும் மேற்கொள்ளப்படவுள்ளது. (வ-115)

# சட்ட உதவி ஆணைக்குழுவின் நடமாடும் சேவை நேற்று

## வலி.கிழக்குப் பிரதேச சபையின் ஏற்பாட்டில்

அச்சுவேலி, மே 20
இலங்கை சட்ட உதவி ஆணைக் குழுவின் நடமாடும் சேவை நீர்வேலி வடக்கு மகளிர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.
வலி.கிழக்குப் பிரதேச சபையின் நீர்வேலி உபஅலுவலகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற சட்ட உதவி நடமாடும் சேவையில் சட்டத்தரணிகள் ஆ.கோகுலன், எஸ்.சர்மா, டி.சியாமினி, எஸ்.சிவரஞ்சினி ஆகியோர் கலந்து கொண்டு சட்டஉதவி ஆலோசனைகளை வழங்கினர்.
நிகழ்வுக்கு ஓய்வுநிலை அதிபர் எஸ்.பகவத்சிங் தலைமை தாங்கினார்.
காணிப்பிரச்சினை, சிறுவர் பாதுகாப்பு, காணிச் சுவீகரிப்பு, குடும்பப் பிரச்சினை, பெண் ஒடுக்குமுறை தொடர்பான பிரச்சினைகள் தனித்தனியாக ஆய்வு செய்யப்பட்டு ஆலோசனைகள் வழங்கப்பட்டன. பெருமளவில் காணிப் பிரச்சினையும் காணி சுவீகரிப்பு தொடர்பான பிரச்சினையும் முன்வைக்கப்பட்டிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.
சட்ட உதவி நடமாடும் சேவைகள் முற்பகல் 10.30 மணியில் இருந்து பிற்பகல் 2 மணி வரையும் நடைபெற்றது.
காணிச் சுவீகரிப்பு தொடர்பாக சட்ட உதவியாளர்களிடம் பொதுமக்கள் தமது சந்தேகங்கள் தொடர்பில் கருத்துக் கேட்டபோது, சட்ட உதவியாளர் தரப்பில் இருந்த காணிச் சுவீகரிப்பு தொடர்பாக அரசு புதிய சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் குறிப்பிட்டுள்ள பிரகாரம் பல்வேறு நடைமுறைகள் வெளிப்படுத்தல்களை மேற்கொள்ள வேண்டும்.
அது தொடர்பாகக் காணி உரிமையாளர்கள் உரிய வேளையில் தமது ஆட்சேபனைகளை முன்வைக்க முடியும். தற்போது காணி சுவீகரிப்பு தொடர்பான பிரச்சினை பெரிய அளவில் பேசப்படுகின்றது.
இரவோடு இரவாகக் காணி சுவீகரிப்பை அரசு மேற்கொள்ள முடியாது.
உரிய சட்ட ரீதியிலான அணுகு முறைகளைப் பின்பற்றியே காணிகளை சுவீகரிக்க வேண்டும். இது வரையில் யாழ். மாவட்டத்தில் எந்தக் காணியும் சுவீகரித்து முடிக்கப்பட்டதாக அறிவிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (வ-11)

# ஜி.சீ.ஈ. உயர்தர மாணவர்களுக்கு தொழில் வழிகாட்டல் செயலமர்வு

தென்மராட்சி கல்வி வலய தொழில் வழிகாட்டல் அலகினரின் ஏற்பாட்டில் 'வேள்ட் விஷன்' நிறுவன அனுசரணையுடன் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் 2015 ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ. உயர்தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு 14 தினங்கள் தொழில்வழிகாட்டல் செயலமர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.
இது தொடர்பான செயலமர்வின் ஆரம்பநிகழ்வுகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 8 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும்.
தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ண குமார் தலைமையில் நடைபெறும் ஆரம்ப நாள் செயலமர்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜாவும் சிறப்பு விருந்தினராக 'வேள்ட் விஷன்' நிறுவன யாழ்.மாவட்ட இணைப்பாளர் ஏ.ஜீ.ரொரைரோவும் கலந்துகொள்வர்.
கல்வி வலயத்தில் 11 பாடசாலைகளில் அடுத்துவருடம் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம், தொழில்நுட்பம் ஆகிய பாடப் பிரிவுகளைச் சேர்ந்த 700 மாணவர்கள் 14 தினங்கள் நடைபெறும் குறித்த பயிற்சிகளில் கலந்துகொள்கின்றனர்.
"மூன்றாம் நிலைக் கல்வி உலகில் பிரகாசிப்போம்" என்னும் தொனிப் பொருளில் நடத்தப்படும் பயிற்சிகளில் உயிர் முறைமைகள் தொழில் நுட்பம் தொடர்பாக நான்கு தினங்களும் பொறியியல் தொழில்நுட்பம் தொடர்பாக எட்டுத் தினங்களும் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. பயிற்சிகள் தொடர்பான செய்முறைகள் கைதடியில் உள்ள தொழில் பயிற்சி நிலையத்திலும் கைதடி, மீசாலை விவசாய போதனா நிலையங்களிலும் நடைபெற்று வருகின்றன. மேலும் நாளை மறுதினம் தொடக்கம் மூன்று தினங்கள் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் செயலமர்வுகள் இடம்பெறும். பல்கலைக்கழக தெரிவு 'இஸற்' புள்ளி கணிப்பும் பரீட்சைப் பெறுபேறுகளும் இந்தியாவில் உயர் கல்வி, கல்வியியற் கல்லூரியில் அனுமதியும் பாடங்களின் தெரிவு, உயர் தொழில்நுட்ப நிறுவனங்களில் கல்வி வாய்ப்பு, திறந்த பல்கலைக்கழகத்துக்கான வாய்ப்பு, வாழ்க்கைத் தேர்ச்சிகளை மேம்படுத்தல், சமூக இசைவாக்கம், உயர் கல்வி வாய்ப்புகளில் ஆங்கிலமொழித் தேர்ச்சி, தகவல் தொழில்நுட்பம் சார் விடயங்கள் ஆகிய பத்து விடயங்களில் பயிற்சி செயலமர்வுகளில் மாவட்டத்தைச் சேர்ந்த துறைசார் வளவாளர்களால் போதிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

இது தொடர்பான செயலமர் வின் ஆரம்ப நிகழ்வுகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 8 மணிக்கு சாவகச் சேரி இந்துக் கல்லூரி மண்ட பத்தில் இடம்பெறும்.

# தமிழ் மக்களையும் தமிழர் பிரதேசங்களையும் கிழக்கு மாகாண சபை திட்டமிட்டு புறக்கணிப்பு

## கூட்டமைப்பு உறுப்பினர்களை ஒன்றுதிரட்டி போராட்டம் ஒன்றை முன்னெடுக்க உள்ளதாக கட்சியின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் துரைரட்ணம் தெரிவிப்பு

அம்பாறை, மே 20

தமிழ் மக்களையும் தமிழர் பிரதேசங்களையும் கிழக்கு மாகாண சபை திட்டமிட்டு புறக்கணித்து- **இன ரீதியாக** செயற்படுகின்றது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரட்ணம் குற்றஞ் சுமத்தியுள்ளார்.

இன ரீதியான இத்தகைய செயற்பாடுகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் வகையில் கூட்டமைப்பு உறுப்பினர்களை ஒன்று திரட்டி போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கிழக்கு மாகாண சபை இவ்வாண்டு தெரிவு செய்யப்பட்ட 10 கிராமங்களை 50 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்திச் செய்ய நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ.மஜீத் அறிவித்திருந்தார். கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 76 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் கடந்தாண்டு 20 மில்லியன் ரூபாவும், இவ்வாண்டு 50 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவு செய்யப்பட்ட 10 கிராமங்களுக்கும் தலா 50 லட்சம் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்படவிருப்பதாகவும் முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

அவற்றுள் 3 முஸ்லிம் கிராமங்களும் ஒரு சிங்கள கிராமமும் அடங்குகின்றன. இந்த நிலையில் அம்பாறை மாவட்டத்தில் ஒரு தமிழ்க் கிராமம் கூட தெரிவு செய்யப்படவில்லை. கடந்த ஆண்டும் இந்தத்திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்தில் ஒரு தமிழ்க் கிராமம் கூடத் தெரிவு செய்யப்படவில்லை.

அவ்வாறாயின் அம்பாறையில் தமிழர்கள் இல்லையா? ஏன் இந்த அநீதி? பாரபட்சம்? அந்த அரசு கூட கிராமத்துக்கு ஒரு வேலைத் திட்டத்தின் கீழ் இன மத பேதம் பாராது 10 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்துள்ளது.

> “ தமிழர்கள் இல்லையா? ஏனிந்த அநீதி? பாரபட்சம்? அந்த அரசு கூட கிராமத்திற்கு ஒரு வேலைத் திட்டத்தின் கீழ் இன மத பேதம் பாராது 10 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்துள்ளது.



இரா.துரைரட்ணம்

கடந்த ஆண்டு இந்தபாரபட்சம் இடம்பெற்றபோது நான் மட்டக்களப்பு மாநகர மண்டபத்தில் நடைபெற்ற கிழக்கு மாகாண அபிவிருத்தி கூட்டத்திலும் கிழக்கு மாகாண சபை அமர்விலும் கடும் ஆட்சேபனையை எழுத்து மூலம் தெரியப்படுத்தினேன். ஆனால் பயன் ஏதும் கிட்டவில்லை. ஆனால் இவ்வாண்டும் பாரபட்சம் அநீதி அரங்கேறியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் சதாம் ஹுசைன் மாதிரிக் கிராமம், வாழைச்சேனை, காவத்தைமுனை, முனைக்காடு மற்றும் கருங்காலிச்சோலை ஆகிய கிராமங்கள் அபிவிருத்திக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன. இதில் 2 தமிழ் கிராமங்களும் 2 முஸ்லிம் கிராமங்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அதாவது இங்கு தெரிவில் இனவிகிதாசாரம் பேணப்படவில்லை. இனவிகிதாசாரப் படி பார்த்தால் 3 தமிழ் கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் கிழக்கு மாகாண சபை இனவாதமாகச் செயற்பட்டு வருகின்றது.

மேடையில் மட்டும் இன ஐக்கியத்தை பேசும் இவர்கள் செயற்பாடுகளிலும் நிதி ஒதுக்கீடுகளிலும் முஸ்லிம்களை மையமாக வைத்தே செயற்படுகிறார்கள். உண்மையில் போராலும் சுனாமியாலும் கிழக்கு மாகாணத்தில் அதிகூடுதலாகப் பாதிக்கப்பட்டவை தமிழர் பிரதேசங்களாகும். எனவே அவர்களுக்கே கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

கிழக்கு மாகாண சபை என்பது மூவினங்களுக்கும் சொந்த மானது. ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி இரண்டையும் உள்ளடக்கியதே. இதனை முதலமைச்சரும் ஏனையோரும் புரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறே எதிர்வரும் சமச்சீரான பிராந்திய அபிவிருத்தித் திட்டத்தின் நிதியொதுக்கீடும் குறித்தவொரு இனத்துக்கு மாத்திரமே ஒதுக்கப்பட்டு விடுமோ என்ற நியாயமான அச்சமும் எழுந்துள்ளது.

இனியும் இதனை அனுமதிக்க முடியாது. சர்வாதிகார ஆட்சி செய்வதற்கு நாம் இடமளிக்க மாட்டோம்.

எனவே இதற்கு முடிவு கட்டும் முகமாக எதிர்வரும் சபை அமர்வில் கிழக்கு மாகாண சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சகல உறுப்பினர்களையும் ஒன்று திரட்டி பெரிய போராட்டத்தை நடத்த விருக்கின்றேன்- என்றுள்ளது. (வ)

## பாசிக்குடா கடலில் மூழ்கி இளைஞர் ஒருவர் சாவு

மட்டக்களப்பு, மே 20

பாசிக்குடா கடற்கரையில் குளித்துக் கொண்டிருந்த 2 நண்பர்கள் நீரில் மூழ்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மற்றுமொருவர் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

வந்தாறுமூலை, களுவன்கேணியைச் சேர்ந்த 12 நண்பர்கள் சைக்கிளில் விடுமுறையைக் கழிப்பதற்காக பாசிக்குடா கடற்கரைக்கு சென்று குளித்துள்ளனர்.

அதில் இரண்டு பேர் நீரில் மூழ்கிய நிலையில் பாசிக்குடா கடற்கரையில் உள்ள பொலிஸாரும், பொதுமக்களும் இருவரையும் மீட்டுள்ளனர்.

அவர்களை மீட்டு வாழைச்சேனை ஆதார மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்ட நிலையில் களுவன்கேணி சீநோர் வீதியைச் சேர்ந்த சித்திரவேல் ரமேஸ்கரன் (வயது - 19) என்ற இளைஞர் உயிரிழந்துள்ளார்.

மற்றைய நபரான ஜே.தனு (வயது - 18) மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். இந்தச்சம்பவம் தொடர்பாக கல்குடா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ)

## டெங்கு நுளம்பு பரவும் அபாயம்; 20 பேர் மீது வழக்கு தாக்கல்

காத்தான்குடி நகரசபைப் பிரிவில் டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய சூழலைப் பேணிய 20 வீட்டு உரிமையாளர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் யு.எல். நசிர்தீன் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறுகையில்:

காத்தான்குடி சுகாதார அலுவலகத்தின் ஏற்பாட்டில் காத்தான்குடி நகரசபை, காத்தான் குடி பொலிஸ் நிலையம், காத் தான்குடி பிரதேச செயலகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் காத்தான்குடி முதலாம் குறிச்சி, முதியோர் இல்ல வீதி, புதிய காத்தான்குடி போன்ற பகுதிகளிலுள்ள வீடுகளில் ஞாயிற்றுக்கிழமை டெங்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. சில இடங்களில் டெங்கு நுளம்புக் குடம்பிகள் கண்டெடுக்கப்பட்டன. வெற்று ரயர்கள் மற்றும் டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய பொருள்கள் அகற்றப்பட்டன" என்றார்.



டெங்குப் பரிசோதனையின் போது

காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் யு.எல். நசிர்தீன், காத்தான்குடி நகர சபைத் தலைவர் எஸ். எச். அஸ்பர் உட்பட பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொலிஸார், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் காத்தான்குடி பிரிவு தொண்டர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் டெங்கு பரிசோதனையிலும் விழிப்புணர்வூட்டும் நடவடிக்கையிலும் ஈடுபட்டனர். (வ)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**சிதம்பரப்பிள்ளை வரதராசா**

பிறப்பு 26★01★1956

இறப்பு 20★05★2013

திதி: 08.06.2014

வைகாசித் திங்கள்
இருபத்து ஒன்று எங்களுக்கு
வையகமெல்லாம் இருண்ட நாள்
ஆறு இரண்டு திங்கள் போனாலும்
ஆறவில்லை எம் மனது
உன் குடும்பத்தை உயர்த்த வேண்டும்
என்று எண்ணி உன் வீட்டையும்
சொந்த நாட்டையும் விட்டுச்சென்றாய்
இறுதியில் அதனாலேயே
இன்னல் பட்டுச் சென்று விட்டாய்
தனியாக நீ விடப்பட்டனியோ- காலன்

தன்னிச்சையாகக் கவர்ந்து செல்வதற்கு கண்ட கனவை நினைவாக்கு முன்
உன்னைக் கவர்ந்து சென்று விட்டான் மாலை போட்டு நாம் உன்னைப் பார்க்க
மனம் என்ன இரும்பு என்று நினைத்தாயோ-எம் மண்ணில் நிலவாக
வந்து-மின்னாமல் வந்த இடிபோல
விண்ணில் ஒளியாகத் தந்தை வழி ஏகிவிட்டாய்
கண்ணில் உன் உடம்பைக் கூடப் பார்த்து
அழ முடியாத பாவியானோம் கண்ணில் ஈரம் காயாமல் வாழ்கின்றோம்
உன் வழி நோக்கி உன் கருணை பொங்கும் உள்ளம்
இறைவனையடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறந்த செய்தி கேட்டு துடித்து நின்ற வேளையில் ஆறுதல் தெரிவித்த நண்பர்கள், உறவினர்கள் மற்றும் அன்பர்களுக்கும் அன்னாரின் 31 ஆம் நாள் நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது நன்றியைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தொ.பே. 024 222 0204

பத்தினிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை (தாயார்)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 07.06.1939 — மறைவு 21.04.2014

கடந்த 21.04.2014 திங்கட்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர்

அமரர்

**சதாசிவம்பிள்ளை குணரட்ணம்**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (21.05.2014) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச்செய்தி கேட்டு நேரில் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் தொலைபேசியூடாக அனுதாபம் தெரிவித்தோருக்கும் கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டோருக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் எமக்கு பலவழிகளில் உதவியவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

239/I, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.


நேற்றுமுன்தினம் மாத்தறையில் போர் வெற்றி விழா பெருமெடுப்பில் கொண்டாடப்பட்டது. அதன்போது இராணுவ மரியாதையை ஏற்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. (ச)

# தாக்க முயன்றோர் மீது பொலிஸ் துப்பாக்கிச் சூடு

### இருவர் காயம்

கொழும்பு, மே 20

நீர்கொழும்பு - விஜயசமருகம தெமன்ஹந்திய பகுதி வீடொன்றில் பொலிஸார் மீது தாக்குதல் நடத்த முயன்ற ஆயுதக் குழுவொன்றின் மீது பொலிஸார் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் இருவர் காயமடைந்துள்ளனர்.

முன்விரோதம் காரணமாக நேற்றுமுன்தினம் குறித்த வீட்டுக்குள் நுழைந்த 15 பேர் கொண்ட குழு வீட்டில் இருந்த இரு ஆண்கள் மற்றும் ஒரு பெண் மீது வாள் வெட்டு நடத்தியதுடன், வீட்டுக்கும் சேதம் ஏற்படுத்தியுள்ளனர். அது குறித்துக் கிடைத்த தகவலை அடுத்து இரு பொலிஸார் அங்கு சென்றுள்ளனர்.

அவர்கள் மீது குறித்த குழு தாக்குதல் நடத்த முயற்சித்ததை அடுத்தே பொலிஸார் அவர்களை நோக்கி துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர். சம்பவத்தில் காயமடைந்த சந்தேக நபர்கள் இருவர் உள்ளிட்ட ஐவர் நீர்கொழும்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் ஒருவரைக் கைது செய்துள்ளனர். (ற)

# பயங்கரவாதத்தின் முடிவு இலங்கையின் பெரு வெற்றி

### சஜித் பிரேமதாஸ கூறுகின்றார்

கொழும்பு, மே 20

பயங்கரவாதம் நிறைவு செய் ப்பட்டமை, நாட்டின் வெற்றி என்று தெரிவித்துள்ளார் ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ.

ஹம்பாந்தோட்டை பகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் அங்கு மேலும் குறிப்பிட்டதாவது:-

"பயங்கரவாதம் நிறைவு செய்யப்பட்டமை, முழு நாட்டுக்கும் கிடைத்த நன்மையாகவே அமைகின்றது. எம் அனைவருக்கும் கிடைத்த மிகவும் பெரிய வளமாக காணப்படுகின்றது. இந்த சந்தர்ப்பத்தை நாங் ள் ஏளனப்படுத்தக் கூடாது. பாராட்ட வேண்டும். போர் வெற்றியை ஏதேனும் ஒரு அரசியல் தரப்பினர் செயற்படுத்துவார்களாயின், அவர்களைப் பாராட்ட வேண்டும்.

போர் வெற்றிக்காக இந்த நாட்டின் மக்கள் பெரும் ஒத்துழைப்புக்களையும், அர்ப்பணிப்பையும் வழங்கினார்கள். போர் வெற்றியின் பின்னர், நிவாரண உதவிகள் மக்களுக்கு கிடைக்கும் என எண்ணினார்கள். ஆயினும் இந்த நாட்டிலுள்ள 200 லட்சம் பெரும்பான்மையினர், இந்த போர் வெற்றியின் பெறுபேறுகளை அனுபவிக்கவில்லை, சிறு தொகையினரே அனுபவிக்கின்றனர்."- என்று தெரிவித்துள்ளார். (ற)

**போர் வெற்றிக்காக இந்த நாட்டின் மக்கள் பெரும் ஒத்துழைப்பையும், அர்ப்பணிப்பையும் வழங்கினார்கள். ஆயினும் போர் வெற்றியின் பெறுபேறுகளை சிறு தொகையினரே அனுபவிக்கின்றனர்.**

# அரசை விரட்டியடிக்கும் காலம் கனிந்துவிட்டது

### சரத் பொன்சேகா கூறுகின்றார்

கொழும்பு, மே 20

அடக்க முடியாத இந்த அரசை விரட்டியடிக்கும் காலம் கனிந்து விட்டது என்று தெரிவித்துள்ளார் ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"அரசிலுள்ள அரசியல் தலைவர்கள் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர், மக்களை ஏமாற்றி, அவர்களைக் கொல்லாது கொன்று வருகின்றனர். தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கு முக்கியத்துவம் வழங்கும் இந்த தலைவர்களை விரட்டியடிக்கும் காலம் வந்துள்ளது. நேர்மையான அரசியல்வாதிகளே எமக்கு தேவை.

இந்து சமுத்திரத்தின் நித்திலம் என்ற எமது சிறிய தங்கமான இலங்கை என்ற நாடு, இன்று எவ்வித பயனும் கொடுக்காத நாடாக மாறியுள்ளது.

நாட்டை அழிக்கும் இரத்தத்தை உறிஞ்சும் நபர்களுடன் இந்தப் பயணத்தை மேற்கொண்டால், நாய்களுடன் உறங்கிச் ஷெல்களுடன் எழுந்திருக்க வேண்டிய நிலைமை ஏற்படும். அந்த நிலைமை உருவாகி விட்டது.

கெடுதியான வேலைகளைச் செய்யும் நபர்களுக்கு அரசியலில் இன்று முன்னுரிமை கிடைத்துள்ளது. வேட்பாளர்கள் சிறுவர் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுகின்றனர். கொள்ளையர்கள் இன்று அரசியலுக்குள் வந்துள்ளனர். நீதி, நியாயத்துக்கு இடமில்லை. நாட்டின் இன்றைய அரசியலுக்கு முடிவுக்கு கட்ட வேண்டிய தருணம் வந்துள்ளது"- என்று தெரிவித்துள்ளார். (ற)


## இலங்கை வங்கி

பின்வரும் கிளைகளை திறப்பதற்கு பொருத்தமான கட்டடம் குத்தகைக்கு தேவை

▸ சுன்னாகம் ▸ மானிப்பாய் ▸ சாவகச்சேரி

**உத்தேச கட்டடங்கள் கீழ் குறிப்பிடப்படும் வசதிகளை கொண்டவையாக இருத்தல் வேண்டும்.**

- தளப் பிரதேசம் 3500 சதுர அடி இட அளவினை கொண்டிருப்பதுடன் கீழ்த்தளமாக இருத்தல் வேண்டும் (குறுகியதாக இருத்தல் கூடாது)
- கட்டடத்தின் முகப்பானது குறைந்தபட்ச அகலம் 35 அடியுடன் பிரதான வீதிக்கு முகப்பாக நகர மத்தியில் அமைந்திருத்தல் வேண்டும்.
- வாகனங்களை நிறுத்தி வைப்பதற்குப் போதுமான அளவு இடவசதி காணப்படல் வேண்டும்.
- 60 அம்பியர் மூன்று கட்ட மின்சாரம், நீர் வசதி, இலங்கை ரெலிகொம் நிறுவனத்தின் தொலைபேசி சேவை மற்றும் ஆண் பெண் இருபாலாருக்கும் வெவ்வேறாக பாவிக்கக் கூடிய மலசலகூட வசதி அவசர நேரங்களில் வெளியேறக் கூடிய வாசல் மற்றும் ஏனைய அடிப்படை வசதிகளுடன் காணப்படல் வேண்டும்.
- கட்டடத்தின் தரைப் பகுதிக்கு தரை ஓடு (Tile) பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்
- மின் ஆக்கி இயந்திரத்துக்கு (ஜெனரேட்டர்) 10'X10' அளவிலான நல்ல காற்றோட்டம் உள்ள அறை கட்டடத்திற்கு பின்புறம் இருத்தல் வேண்டும். (அவ் அறையானது இரும்பு கம்பி போடப்பட்டு பாதுகாப்பானதாக இருத்தல் வேண்டும்.)
- நீரை சேமித்து வைக்க 1000 லீற்றர் கொள்ளளவு கொண்ட நீர்த்தாங்கி ஒன்று இருத்தல் வேண்டும்.

(C14341)(12.3.6)


இது தொடர்பான ஆர்வமுடைய கட்டட உரிமையாளர்கள் எதிர்பார்க்கப்படும் மாதாந்த வாடகை உட்பட கட்டடத்தின் வரைபடம், உறுதி விவர பிரித்தெடுப்புக்கள், மூல உறுதி, நில அளவை வரைபடம் ஆகியனவற்றின் பிரதிகளுடன் முழு விபரங்களை வழங்கி பின்வரும் விலாசத்திற்கு 14 நாள்களினுள் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். கடித உறையின் இடது மேல் மூலையில் "இலங்கை வங்கியின் சுன்னாகம், மானிப்பாய், சாவகச்சேரி கிளைகளுக்கு கட்டடம்" என தயவுசெய்து குறிப்பிடவும்.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

உதவிப் பொது முகாமையாளர் (வட மாகாணம்)
இலங்கை வங்கி,
வட மாகாண காரியாலயம்
இல 456 வைத்தியசாலை வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி : 021-2223985 / 3126


# நிறைவேற்று அதிகார முறையை ரத்துச் செய்ய ஜனாதிபதி மறுப்பு

### அதிருப்தியில் சிரேஷ்ட அமைச்சர்கள்


மகிந்த ராஜபக்ஷ

கொழும்பு, மே 20

நிறைவேற்றுஅதிகாரம்கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறைமையை இரத்துச் செய்யுமாறு அமைச்சர்கள் நிமால் சிறிபால டி சில்வா, மைத்திரிபால சிறிசேன, ஜோன் செனவிரட்ன ஆகியோர் விடுத்த கோரிக்கையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிராகரித்துள்ளார் என்று கூறப்படுகிறது.

நிறைவேற்றுஅதிகாரம்கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்க வேண்டும் என நாடு முழுவதும் குரல் எழுப்பப்பட்டு வரும்நிலையில், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளராக நிறுத்தப்பட உள்ள தற்போதைய ஜனாதிபதி, தேர்தலுக்கு முன்னர் அப்படியான யோசனை ஒன்றைக் கொண்டு வர வேண்டும் என்ற யோசனையை இந்த அமைச்சர்கள் முன்வைத்திருந்தனர்.

அத்துடன் புதிய தேர்தல் சட்டத்துக்கு அமைய தேர்தல் நடத்தப்பட வேண்டும் எனவும் இந்த அமைச்சர்கள் அலரி மாளிகையில் வைத்து இந்த மாத ஆரம்பத்தில் கோரியிருந்தனர்.

இதற்கு பதிலளித்துள்ள ஜனாதிபதி, ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பது பற்றி எந்த கருத்துக்களையும் வெளியிடவில்லை என்றும், புதிய தேர்தல் முறையில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தினால், அது ஐக்கிய தேசியக் கட்சிக்கு சாதகமாக அமையும் எனவும் பழைய தேர்தல் முறையின் கீழேயே ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

தற்போது நடைமுறையில் உள்ள ஜனாதிபதி ஆட்சி முறை குறித்து வெறுப்படைந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர்கள், ஜனாதிபதியுடனான சந்திப்பின் பின்னர், அதிருப்தியுடன் வெளியேறினர் என்றும் மேலும் கூறப்பட்டுள்ளது. (ற)

## திருமலை மருத்துவமனைக்கு மருத்துவர், தாதியர் நியமனம்

### மருத்துவமனை பணிப்பாளர் தெரிவிப்பு

திருகோணமலை, மே 20

திருகோணமலை பொது மருத்துவமனைக்கு புதிய மருத்துவர் மற்றும் தாதியர்கள் இன்று நியமிக்கப்பட்டுள்ளதாக மருத்துவமனை பணிப் பாளர் டாக்டர் மஞ்சுள கவிசேகர தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்:

"கிழக்கு மாகாண சபையின் கண்காணிப்பின் கீழ் இயங்கி வந்த பொது மருத்துவமனை கடந்த மாதம் மத்திய அரசுக்கு கீழ் கொண்டுவரப்பட்டது.

குறித்த மருத்துவமனைக்கு புல்மோட்டை- ஹொறபொத்தானை -மூதூர் -கிளிவெட்டி போன்ற தூர இடங்களில் இருந்துசிகிச்சைக்காகநோயாளர்கள் வருகை தருவதாகவும் அவர்களின் சிகிச்சை களை உரிய நேரத்தில் மேற்கொள்ள மருத்துவர் பற்றாக்குறை மற்றும்தாதியர் பற்றாக்குறைகாணப்பட்டதாகவும் தெரிவித்தார்.

புதிய மருத்துவர்களையும், தாதியர்களையும் நியமித்தமையால் நோயாளர்களின் சிகிச்சைகளை மிக விரைவாக பரிசோதிக்க முடியும்.

அத்துடன் திருகோணமலை பொது மருத்துவமனையில் அனைத்து சிகிச்சைகளையும் எதிர்வரும் காலங்களில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக நோயாளர்களின் விடயத்தில் அக்கறையின்றி செயற்படும் ஊழியர்கள் குறித்து அலுவலகத்துக்கு வந்து அறிவிக்க முடியும்"-என்றார்.

# தலைமுறை தலைமுறையாக உறவுகளைத் தொடருங்கள்

## முஸ்லிம் மக்கள் கட்சித் தலைவர் கருத்து

கல்முனை, மே 20

எமது சமூகத்தின் உறவுகளைப் பொதுவாகப் பார்க்கும் போது பெரும்பாலும் தந்தையுடன் அல்லது தாயின் உறவுடன் தொடர்பு துண்டிக்கப்பட்டு விடுகின்றன. பாட்டனின் உறவுகள் எமக்குத் தெரிவதில்லை என்று முபாறக் அப்துல் மஜீட் தெரிவித்தார்.

பிஸ்மில்லா நலன்புரி சங்கத்தின் அங்கத்தவர் கூட் டம் கல்முனை செயிலான் வீதியில் கடந்தவெள்ளிக்கிழமை மாலை நடைபெற்றது.

அங்கு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறுகையில்:

தற்போதுள்ள உறவு முறை நடைமுறையை மாற்றியமைத்து தலைமுறை தலைமுறையாக அனைத்து சொந்தங்களுக்கும் இடையில் உறவைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதே எமது இலட்சியமாகும்.

இந்தச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு இரண்டாவது தலை முறையில் நாம் வாழுகின்றோம். இந்தச் சங்கத்தை ஆரம்பிக்கும்போதுநாம்என்ன வயதில் இருந்தோமோ அந்த வயதில் எமது பிள்ளைகள் இதன் அங்கத்தவர்களாக தற்போது உள்ளனர். இறைவன் நாடினால் நமது பேரப்பிள்ளைகள் காலத்திலும் இது தொடர்ந்தால் நிச்சயம் எமது உறவுகள் மத்தியிலான ஒற்றுமைப் பாலம் தொடரும். இந்தச் சங்கத்தின் மூலம் அது ஓரளவு நிறைவேறுகின்றது.

**இறைவன் நாடினால் நமது பேரப்பிள்ளைகள் காலத்திலும் இது தொடர்ந்தால் நிச்சயம் எமது உறவுகள் மத்தியிலான ஒற்றுமைப்பாலம் தொடரும்.**

எமது ஊரைப் பொறுத்த வரை உறவுகளிடம் செல்லும் போது கூட செப்பு அதாவது ஏதாவது பொட்டலம் கட்டிக் கொண்டு தான் செல்வார்கள். செப்புப் பெட்டி கட்ட பணம் இல்லை யென்றால் உறவுகளுடன் தொடர்பும் இல்லை. இதனைப் போக்கி ஏழை எளியோர் என்ற பேதம் ஒழிக்கப்பட வேண்டும் என்ற பிஸ்மில்லா ஹாஜியாரின் சிந்தனையின்படி இந்தச் சங்கத்தைக் கொண்டு செல்லும் நாம் இதன் கூட்டங்களை ஒவ்வொருவரின் வீடுகளிலும் நடத்துவதால் அந்த வீட்டுக்கு அனைத்து உறவுகளும் எந்த செப்புப் பெட்டியும் இல்லாமல் அதாவது கூச்சமின்றிச் செல்லும் நிலையை உருவாக்கியுள்ளோம். இது எமக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றியும், மரபு வழிநடத்தை மாற்றமுமாகும்.

இந்தச் சங்கத்தைப் பொறுத்த வரை எமது சொந்தம் என்று வாசனை வீசினாலேயே போதும் அவரை நாம் உள் வாங்கிக்கொள்வோம். வாசம் என்பதன் பொருளை நீங்கள் விளங்கியிருப்பீர்கள். மனிதர்கள் பணத்துக்காகப் பதவிக்காக ஒன்றுபடுகிறார்கள். நாங்கள் அல்லாஹ்வுக்காகவே இங்கே ஒன்று சேர்ந்துள்ளோம். அல்லாஹ்வுக்காக ஒன்று சேரும் கூட்டத்துக்கு இறைவன் நன்மை அளிக்கிறான் என்பதை ஹதீதுகள் உறுதிப்படுத்துகின்றன.

இந்தக் குடும்பத்தில் நான் மௌலவியாக இருப்பதால் என்மீது இதன் தலைமைப் பொறுப்பை சாட்டிவிட்டார்கள். எனக்கு அடுத்ததாக ஹாறூன் மௌலவியே இருக்கின்றார். அதற்குப்பின் யாரையும் காணவில்லை. எனக்கும் வயதாகிறது. ஆதலால் உங்கள் குடும்பத்தில் ஒருவரையாவது மௌலவியாவதற்குப் படிப்பிக்க முயற்சி செய்யுங்கள். மௌலவிக்கு படிப்பவர் ஒரு போதும் வாழ்வில் சீரழியமாட்டார். நானும் ஹாறூனும் இறைவன் உதவியால் படிப்பிலும், பொருளாதாரத்திலும் நன்றாகத்தான் இருக்கிறோம். அதனால் இறைவனுக்காக உங்களின் ஒரு பிள்ளையையாயினும் அரபு மதுரசாவுக்கு அனுப்ப முயற்சி எடுங்கள்" என்றார். (வ-10)

## தொழில்நுட்பத் துறையில் ஆளணி வீதம் அதிகரிப்பு

கொழும்பு, மே 20

இலங்கையில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பத்துறையின் ஆளணித் தொகுதி 2013 ஆம் ஆண்டில் 50 வீத அதிகரிப்பைக் காட்டியுள்ளது.

இது 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 50 வீத அதிகரிப்பாகும். இந்த ஆய்வை தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப முகவரகம் நடத்தியுள்ளது.

இலங்கையில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பத் துறையில் 7,5107 பேர் தொழில் புரிகின்றனர். இது 50,159 பேராக 2010 ஆம் ஆண்டில் அமைந்திருந்தது. 40.8 வீதமானோர் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனங்களில் பணியாற்றுகின்றனர்.

தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம் சாராத தனியார் நிறுவனங்களில் 47.1 வீதமானோர் பணியாற்றுகின்றனர். அரச சார்பான நிறுவனங்களில் 7.8 வீதமானோரும், வர்த்தக நிறுவனங்களில் 4.2 வீதமானோரும் தொழில் புரிவதாகவும் ஆய்வில் தெரிய வந்துள்ளது. (வ)


**பதவி வெற்றிடம்**

**தொழில்நுட்ப அலுவலர் - பயிலுநர் (Civil) (ஆண்/பெண்)**

| | |
|---|---|
| கிளிநொச்சி | - 01 |
| யாழ்ப்பாணம் | - 03 |
| சாவகச்சேரி | - 01 |
| மூளாய் | - 01 |
| நெல்லியடி | - 01 |

தொழில்சார் தகைமை / Following

சனி, ஞாயிறு விடுமுறை.

திறமை அடிப்படையிலான கொடுப்பனவு.

முடிவு திகதி: 29.05.2014

**Green Asia Builder**
Annasilaiyady
Karanavai, Karaveddy.
Mail : aneethan@hotmail.com
web : www.greenasiabuilders.com
(48181) (7.6.3)





**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

கருமத்திருதி லயன்
Dr.வை.தியாகராஜா MJF
எமது கல்லூரியின் பழைய மாணவரும், கல்லூரி வளர்ச்சியில் அர்ப்பணிப்புடன் செயற்படுபவருமாகிய
லயன் Dr.வை.தியாகராஜா MJF
கொழும்பு, பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற
லயன்ஸ் கழகங்களில் மாவட்டம்
306 B1 இற்கான உப ஆளுநர்
தெரிவில் அமோக வாக்குகளைப் பெற்று
வெற்றியீட்டியமையையிட்டு எமது கல்லூரிச் சமூகம் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, மட்டற்ற மகிழ்ச்சியும், பெருமையும் அடைகின்றது.
கல்லூரிச் சமூகம்,
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.
(48164.12.3.6)





**வாழ்த்துகிறோம்**

புலமையாளன்
Dr.வை.தியாகராஜா MJF
அல்லும் பகலும் அயராது சமூகப்பணியாற்றி வரும் சகலகலா வல்லுநர், சர்வதேச லயன்ஸ் கழகங்களின் மாவட்டம் 306 B1 இற்கான உப ஆளுநர் தெரிவில் அமோக வெற்றி பெற்றமை குறித்து அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.
தொழிற்பயிற்சி நிலையம்,
லயன்ஸ் கழகம்,
மல்லாகம்,தெல்லிப்பழை.
(48250.12.3.6)



**விற்பனைக்கு**

அல்சேசன் ஆண், பெண் நாயும், பொமேரியன் ஆண், பெண் நாயும், டாசோன் ஆண், பெண் நாயும், 60 நாள் பூர்த்தியான பொமேரியன் ஆண், பெண் குட்டிகளும், வெள்ளடியன், வன்ரம், மணி தாரா.
தொடர்பு : வி.மயூரன்
(48250) (7.6.3)



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



எமது பாடசாலையின் முதலாவது பரிசளிப்பு விழாவினை நிதி தந்து தொடக்கி வைத்தவரும், சுற்றுமதில் கட்டுவதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொண்டவரும், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்களைப் பாராட்டி பரிசில் வழங்கி ஊக்குவித்தவரும், பாடசாலையின் கல்விச் செயற்பாடுகளுக்கு உதவிகளை வழங்கி மிகுந்த அக்கறையுடன் செயற்படுபவருமாகிய
கருமத்திருதி லயன் Dr.வை.தியாகராஜா MJF
அவர்கள் சர்வதேச லயன்ஸ் கழகங்களின் மாவட்டம் 306B1 இற்கான உப ஆளுநராக அமோக வாக்குகளால் வெற்றியீட்டியமைக்காக எமது பாடசாலைச் சமூகம் சார்பாக மனப்பூர்வமான பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு, இவர் மேன்மேலும் சாதனைகள் படைத்து மக்களுக்கு சேவை செய்ய எல்லாம் வல்ல வீத்தியா மஹா கணபதியின் அருளை வேண்டுகின்றோம்.
வாழ்த்துவோர்:
அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள்.
யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம், கோப்பாய்.
(48178) (3.6.4)



**உன்னத சேவை உயர்வடைக**



அகில இலங்கை சமாதான நீதிவான்
கல்வியியலாளன், சமய சமூக சேவையாளன்,
கருமத்திருதி வைத்திய கலாநிதி
லயன் Dr..வை.தியாகராஜா MJF
(உப தலைவர்-சைவசமய அருள்நெறிமன்றம்-வலிகிழக்கு)
அவர்கள் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற சர்வதேச லயன்ஸ் கழகங்களின் மாவட்டம் 306B1 இற்கான உப ஆளுநர் தெரிவில் அமோக வாக்குகளைப் பெற்று உயர் பதவியில் வெற்றியீட்டியமைக்காகப் பாராட்டுக்களைத் தெரிவித்து அவர்களது உயர்ந்த சிந்தனை, உன்னத இலட்சியம், சிறந்த பண்புகள் என்பவற்றை வாழ்த்துவதுடன், மேலும் அவரது பணிகள் வளர்ந்திட இறைவனைப் பிரார்த்தித்து மகிழ்வடைகின்றோம்.
"உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்திலெல்லாம் உளன்" [பொய்யாமொழி]
வலி-கிழக்கு சைவசமய அருள்நெறி மன்றம், கோப்பாய்.
(48182)(4.3.6)

# மருத்துவமனையில் அம்புலன்ஸை நிறுத்தி வைக்கவும்

## மூன்று கிராம மக்கள் அவசர கோரிக்கை

துணுக்காய், மே 20

துணுக்காய் ஐயன்கன்குளம் மருத்துவமனையில் எப்போதும் அம்புலன்ஸ் ஒன்றை நிறுத்தி வைக்குமாறு ஐயன்கன் குளம் புத்துவெட்டுவான், பழைய முறிகண்டி ஆகிய கிராமங் களைச் சேர்ந்த மக்கள் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஐயன்கன்குளம் மருத்துவமனைக்கு மருத்துவர் வருவதில்லை. இதனால் சுமார் 15 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள மல்லாவி ஆதார மருத்துவமனைக்கு இங்குள்ள மேற்படி மூன்று கிராமங்களைச் சேர்ந்த மக்கள் யானை போன்ற காட்டு விலங்குகளின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் சென்று வருகின்றனர்.

எனவே ஐயன்கன்குளம் மருத்துவமனையில் அம்புலன்ஸ் வண்டியை நிறுத்தி நோயாளர்கள் மல்லாவி மருத்துவமனைக்குச் சென்று வருவதற்கான வசதியை உருவாக்கித் தருமாறு இந்தக் கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஐயன்கன்குளம், பழைய முறிகண்டி, புத்துவெட்டுவான் ஆகியன போக்குவரத்து வசதியில்லாத கிராமங்களாகக் காணப்படுகின்றன. (க-18)



பழைய கட்டடத்தில் நிர்மாணப் பணிகள்.

# தொழில் இல்லாததால் வாழ்வாதாரம் பாதிப்பு

## தட்டுவன்கொட்டி மக்களின் அவலநிலை

கிளிநொச்சி, மே 20

ஆனையிறவு தட்டுவன் கொட்டி சிறு கடல் பகுதிகளில் தொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதால் இதனை நம்பி வாழ்கின்ற சுமார் 1,600 குடும்பங்களின் வாழ்வாதாரம் மோசமான நிலைக்குச் சென்றுள்ளது.

கண்ணகி நகர், புன்னை நீராவி, புளியம்பொக்கணை, தர்மபுரம், கல்லாறு, தட்டுவன்கொட்டி, உமையாள் புரம் ஆகிய பகுதிகளில் வாழ்ந்து வரும் மேற்படி குடும்பங்கள் சுண்டிக்குளம், ஆனையிறவு, சிறு கடல் பகுதியில் தமது வாழ்வாதாரத் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

> தற்போது நிலவுகின்ற வறட்சி, சீரற்ற கால நிலை என்பவற்றால் தொழில் நடவடிக்கைகள் பாதிப்பு.

இந் நிலையில் தற்போது நிலவுகின்ற வறட்சி, சீரற்ற கால நிலை என்பவற்றால் இந்தப் பகுதியின் தொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் இந்தப் பகுதியில் கடல் தொழிலில் ஈடுபட முடியாத நிலை காணப்படுகின்றது. இதனால் இவர்களது வாழ்வாதாரம் மோசமானதொரு நிலையை எட்டியுள்ளது. (க-55)

# தரமில்லாத மாட்டிறைச்சி சந்தையில் விற்பனை



கோப்புப்படம்

கிளிநொச்சி, மே 20

கிளிநொச்சிச் சந்தையில் மூன்று நாள்களுக்கும் மேலாக குளிரூட்டப்பட்ட நிலையில் வைக்கப்பட்ட மாட்டிறைச்சி விற்பனை செய்யப்படுவதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

சுகாதார பரிசோதகர்கள் தமது கடமைகளில் ஈடுபடாததால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மாட்டிறைச்சியை வாங்கும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை மீன்களும் ஐஸ் இடப்பட்டு 3 நாள்கள் வரை பாதுகாக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவதால் பழுதடைந்த மீன்களை வாங்க வேண்டியுள்ளதாகவும் மக்கள் கவலையுடன் தெரிவித்தனர். (க-18)

# அஞ்சல் நிலையக் கட்டடத்தை புதிதாக நிர்மாணிக்க வேண்டும்

## முல்லைத்தீவு மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, மே 20

முல்லைத்தீவு அஞ்சல் அலுவலகக் கட்டடத்தைப் புதிதாக நிர்மாணிக்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்த அஞ்சல் அலுவலகக் கட்டடம் கடந்த போரினாலும், 2004 ஆம் ஆண்டின் சுனாமித் தாக்கத்தினாலும் கடுமையாகச் சேதமடைந்தது. இதனால் கட்டடத்தின் பெரும்பாலான பகுதிகள் தகர்ந்தும், அத்திபாரம் உடைந்து வெடிப்புக்களும் ஏற்பட்டிருந்தன. இந்த நிலையில் தற்போது இந்தக் கட்டடத்தை இதே நிலையிலிருந்து புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புதிதாக மீள் நிர்மாணம் செய்யப்பட வேண்டிய கட்டடத்தை இவ்வாறு தரமற்ற எஞ்சிய அத்திபாரத்திலிருந்தும் சுவர்களிலிருந்தும் தொடர்ந்து கட்டுவது பொருத்த மற்றது என மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்தக் கட்டடத்தைப் புதி தாக மீள் நிர்மாணம் செய்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-102)

# வாய்க்கால் துப்புரவு இல்லை பொது மக்களுக்குப் பாதிப்பு



கழிவு நீர் வாய்க்கால்.

மன்னார், மே 20

மன்னார் நகர சபைக்குட்பட்ட சில கழிவு நீர் வாய்க்கால்கள் துப்புரவு செய்யப்படாததால் இவற்றிலிருந்து துர்நாற்றம் வீசிவருவதோடு நுளம்பின் பெருக்கமும் அதிகரித்துள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக பெரியகடை, உப்பள வீதி ஆகிய பகுதிகளில் உள்ள கழிவு நீர் வாய்க்கால்களே இவ்வாறு காணப்படுகின்றன.

இந்த வாய்க்கால்களில் நீருடன் குப்பைகளும் காணப்படுவதால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அத்துடன் பெருக்கம் அதிகரித்துள்ளமையால் அப்பகுதி மக்கள் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றனர்.

மன்னார் நகர்ப் பகுதியில் உள்ள கழிவு நீர் வாய்க்கால்கள் அடிக்கடி சுத்தம் செய்யப்படுகின்றன. ஆனால் எமது பகுதியில் அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

எனவே, மன்னார் நகர சபை இதில் தலையிட்டு இந்தப் பகுதிகளில் உள்ள கழிவு நீர் வாய்க் கால்களைச் சுத்தப்படுத்தி தொற்று நோய்களில் இருந்து பாதுகாக்குமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-56)

# அடிப்படை வசதி இல்லாத மாயவனூர் கிராம மக்கள்

கிளிநொச்சி மாயவனூர் கிராமத்தில் சுமார் 843 குடும்பங்கள் குடிதண்ணீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மாயவனூர் கிராமத்தில் கடந்த 1983 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட இனக் கலவரங்களில் பாதிக்கப்பட்ட சுமார் 843 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

> இங்குள்ள மக்கள் மருத்துவ வசதியைப் பெறுவதற்கு 15 கிலோ மீற்றருக்கும் அப்பால் உள்ள கிளிநொச்சிக்குச் செல்ல வேண்டும்.

இங்குள்ள மக்கள் மருத்துவ வசதியைப் பெறுவதற்கு 15 கிலோ மீற்றருக்கும் அப்பால் உள்ள கிளிநொச்சிக்குச் செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது.

அத்துடன் ஏனைய தேவைகளுக்கும் வேறு இடங்களுக்கே இவர்கள் செல்ல வேண்டியுள்ளது.

இவ்வாறு இருக்க தற்போது நிலவுகின்ற வறட்சி காரணமாகத் தமது குடிதண் ணீர் தேவைகளுக்கு நீண்ட தூரம் செல்ல வேண்டிய நிலை யில் உள்ளனர். இதனை நிவர்த்தி செய்து தருமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-55)

# பாண்டியன்குளம் பகுதியில் தொல்லை தரும் குரங்குகள்

முல்லைத்தீவு பாண்டியன் குளம் பகுதியில் குரங்குகளின் தொல்லை அதிகரித்துள்ளது. இங்கு முன்னர் எப்போதும் இல்லாத வகையில் தற்போது குரங்குகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது.

அதிகாலையில் கிராமங்களுக்குள் உட்புகும் குரங்குகள் பெருமளவான பயிர்ச் செய்கைகளையும் அழித்து வருகின்றன. அத்துடன் வீடுகளில் புகுந்து அங்கு வைக்கப்படும் உணவு மற்றும் ஏனைய பொருள்களையும் சேதப்படுத்தி வருகின்றன.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பாண்டியன் குளம் பகுதியிலுள்ள வீட்டு உரிமையாளர் ஒருவர் ஆலயத்துக்குச் சென்றபோது வீட்டினுள் புகுந்த குரங்குகள் உணவுப் பொருள்களையும் ஏனைய பொருள்களையும் சேதமாக்கியதுடன் உடுபுடைவைகளையும் சேதமாக்கிச் சென்றுள்ளன. (க-55)

# ரயில் இணைப்பு பஸ் சேவையை நடத்துமாறு பயணிகள் வேண்டுகோள்

முல்லைத்தீவு, மே 20

ரயில் இணைப்பு பஸ் சேவை இடம்பெறாததால் முல்லைத்தீவு ரயில் பயணிகள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

30 வருடங்களுக்கு முன்னர் இலங்கைப் போக்குவரத்துச் சபையால் மாலை வேளைகளில் முல்லைத்தீவிலிருந்து மாங்குளத்துக்கும், அதிகாலையில் மாங்குளத்திலிருந்து முல்லைத்தீவுக்குமாக தபால் ரயில் இணைப்பு பஸ் சேவைகள் நடத்தப்பட்டன. இதனால் பெரு மளவான ரயில் பயணிகள் நன்மை அடைந்தனர்.

ஆனால் தற்போது ரயில் பயணிகளின் போக்குவரத்துத் தேவை அதிகரித்துள்ள நிலையில் குறைந்தது ஒரு ரயில் இணைப்பு பஸ் சேவை கூட இடம்பெறாததையிட்டு ரயில் பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

தற்போது முல்லைத்தீவு மக்கள் ரயிலில் பயணிக்க வேண்டுமாயின் வவுனியாவுக்குச் சென்று அதிக நேரம் காத்து நிற்க வேண்டியுள்ளது.

எனவே முல்லைத்தீவு மாவட்ட ரயில் பயணிகளின் நலனைக் கருத்திற் கொண்டு முல்லைத்தீவிலிருந்து மாங்குளத்துக்கும், மாங்குளத்திலிருந்து முல்லைத்தீவுக்கும், அதேபோன்று மல்லாவியிலிருந்து மாங்குளத்துக்கும், மாங்குளத்திலிருந்து மல்லாவிக்குமாக ரயில் இணைப்பு பஸ் சேவையை நடத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ரயில் பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (க-102)

# புதிய அமைச்சர்கள் யார்?

## டில்லியில் மோடி ஆலோசனை

புதுடில்லி,மே 20

பிரதமராக பதவி ஏற்கவிருக்கும் நரேந்திரமோடி, புதிய அமைச்சரவையை அமைப்பது தொடர்பாக பாரதீய ஜனதா மற்றும் கூட்டணிக் கட்சிகளின் மூத்த தலைவர்களுடன் நேற்று முன் தினம் ஞாயிற்றுக் கிழமை ஆலோசனை நடத்தினார்.

கடந்த சனிக்கிழமை டில்லி சென்ற நரேந்திர மோடி, கவுடில்யா மார்கில் உள்ள குஜராத் மாநில அரசு மாளிகையில் தங்கியுள்ளார். இங்கிருந்தபடி, தாம் அமைக்க இருக்கும் புதிய அமைச்சரவையில் இடம் பெறும் அமைச்சர்கள் தொடர்பாக தனது நெருங்கிய சகாவான அமித் ஷா, பா.ஜ.க. தேசியத் தலைவர் ராஜ்நாத் சிங் ஆகியோருடன் ஆலோசனை நடத்தினார்.

பீஹாரில் முதல்வர் பதவியில் இருந்து நிதிஷ்குமார் விலகியதை அடுத்து, அந்த மாநிலத்தில் அரசியல் சூழ்நிலை பரபரப்படைந்துள்ளது. இதையடுத்து அந்த மாநில பா.ஜ.க. பொறுப்பாளர் தர்மேந்தர் பிரதானுடன் மோடி ஆலோசனை நடத்தினார்.

**அத்வானியுடன் சந்திப்பு**

ராஜஸ்தான் முதல்வர் வசுந்தரா ராஜே, கர்நாடக முன்னாள் முதல்வர் எடியூரப்பா ஆகியோர் மோடியை ஞாயிற்றுக்கிழமை சந்தித்தனர். இந்த சந்திப்புகளின்போது பா.ஜ.க. பொதுச் செயலாளர் ஜே.பி.நந்தா உடனிருந்தார்.

பிற்பகலில், பா.ஜ.க. மூத்த தலைவர் எல்.கே.அத்வானியின் வீட்டுக்குச் சென்ற மோடி, அவருடன் சுமார் 40 நிமிடங்கள் ஆலோசனை செய்தார். இதில், அத்வானி வகிக்க இருக்கும் பொறுப்பு குறித்து முடிவானதாகக் கூறப்படுகிறது.

**ராஜ்நாத்துக்கு உள்துறை?**

தற்போதைய சூழ்நிலையில், உள்துறை அமைச்சராக ராஜ்நாத் சிங், நிதி அல்லது சட்டத்துறை அமைச்சராக அருண் ஜேட்லி நியமிக்கப்பட வாய்ப்புள்ளது. அருண் ஜேட்லிக்கு சட்டத்துறை ஒதுக்கப்பட்டால், அருண் ஷோரிக்கு நிதி அமைச்சகத்தை அளிக்க வாய்ப்புள்ளது.



அத்வானியுடன் ஆலோசனை நடத்தும் மோடி

மூத்த தலைவர் அத்வானிக்கு மக்களவைத் தலைவர் பதவியை அளிக்க மோடி விரும்புகிறார். அதை அவர் மறுத்தால், அப்பதவி சுஷ்மா சுவராஜுக்கு அளிக்கப்படும். மக்களவைத் தலைவர் பதவியை அத்வானி ஏற்றுக் கொண்டால், வெளியுறவுத் துறை அமைச்சராக சுஷ்மா சுவராஜ் நியமிக்கப்படுவார். முரளி மனோகர் ஜோஷிக்கு கல்வித் துறை, உமா பாரதிக்கு விளையாட்டுத் துறையை ஒதுக்க மோடி திட்டமிட்டுள்ளார் என்று பா.ஜ.க. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

**30 அமைச்சர்கள்**

இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி மக்களவையின் மொத்த உறுப்பினர்கள் (543) எண்ணிக்கையில் 15 சதவீதம் பேர் மட்டுமே அமைச்சரவையில் பங்கேற்க வேண்டும். அதன்படி 81 பேர் வரை அமைச்சராக நியமிக்க வாய்ப்புள்ளது.

மோடி தலைமையிலான அமைச்சரவையில் முதல் கட்டமாக 30 பேர் அமைச்சராகப் பொறுப்பு ஏற்பார்கள் எனக் கூறப்படுகிறது.

உத்தரப் பிரதேசத்தில் பா.ஜ.கவின் 71 வேட்பாளர்கள் வெற்றி பெற்றுள்ளதால், அந்த மாநிலத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சரவையில் அதிக எண்ணிக்கையில் இடம்பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

**ராதாகிருஷ்ணனுக்கு முக்கிய பதவி?**

தமிழகத்தில் கன்னியாகுமரி தொகுதியில் மட்டுமே பா.ஜ.க. வெற்றி பெற்றது. இத்தொகுதியில் அக்கட்சியின் மாநிலத் தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன் வெற்றி பெற்றார். மோடி தலைமையிலான அமைச்சரவையில் இவருக்கு [illegible]னட் அந்தஸ்தில் முக்கியப் பொறுப்பு அளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (த)

# எதிர்க்கட்சியில் அமர்கிறது அ.தி.மு.க

சென்னை,மே 20

தமிழகத்தில் பல்வேறு கருத்துக் கணிப்புகளையும் மீறி 37 இடங்களில் அ.தி.மு.க. வரலாறு காணாத வெற்றியைப் பெற்றுள்ளது. இந்த வெற்றிக்கு அ.தி.மு.கவின் பரப்புரை உத்திகளும், இலவச திட்டங்களும் பெரிய அளவில் துணை புரிந்துள்ளன. மத்தியில் பா.ஜ.க. அமைச்சரவையில் இடம்பெற முடியாத நிலை உள்ளபோதிலும், நாடாளுமன்றத்தில் ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சியாகச் செயற்பட அ.தி.மு.க. முடிவு செய்துள்ளது.

அமைதி, வளம், வளர்ச்சி ஆகியவற்றை முன்னிறுத்தி ஜெயலலிதா மேற்கொண்ட பரப்புரை மக்களை வெகுவாகச் சென்றடைந்தமை அ.தி.மு.க. பெற்றிருக்கும் பெருவெற்றிக்கு முக்கிய காரணம் ஆகும்.



ஜெயலலிதா

தேர்தல் பரப்புரையின் இறுதிக் கட்டத்தில் தவிர்க்க முடியாமல் ஒருவரையொருவர் விமர்சித்துக் கொண்டாலும், மோடியும், ஜெயலலிதாவும் நீண்ட கால நண்பர்கள் என்பதால் அது ஒரு பிரச்சினையாக இருக்காது என்று கூறப்படுகிறது.

அதுபோல் மாநிலத்தின் உரிமையை விட்டுக் கொடுக்காத வகையில் பா.ஜ.க.வுடன் இணக்கமாக செயற்பட அ.தி.மு.க. முடிவெடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது. அதனால்தான் மோடிக்கு முதல்வர் ஜெயலலிதா உடனடியாக வாழ்த்துத் தெரிவித்தார். மத்தியில் இணக்கமான அரசு இல்லாததால் மாநிலங்கள் பாதிக்கப்படும் என்பதை இருவருமே நன்கு அறிவார்கள். மாநில அரசியலில் இருந்து சென்றவர் என்பதாலும் பல பிரச்சினைகளில் மத்திய அரசுக்கு எதிராக முதல்வருடன் இணைந்து குரல் கொடுத்தவர் என்பதாலும் நரேந்திர மோடியும் மாநில அரசுகளுடன், குறைந்தபட்சம் அ.தி.மு.கவுடன் இணக்கமாக இருப்பார் என்று அக்கட்சியினர் உறுதியாகக் கூறுகின்றனர். (த)

## பாகிஸ்தானை மோடி பகைத்துக் கொள்ளார்

### அந்நாட்டு நாளிதழ் கருத்து

*இஸ்லாமாபாத்,மே 20*

*முஸ்லிம்களையும், பக்கத்து நாடான பாகிஸ்தானையும் நரேந்திர மோடி பகைத்துக்கொள்ளமாட்டார். இணக்கமான முறையில் அனைவரையும் அரவணைத்துக் கொண்டு ஆட்சி நடத்துவார் என்று பாகிஸ்தானிலிருந்து வெளியாகும் டெய்லி ரைம்ஸ் பத்திரிகை கருத்துத் தெரிவித்துள்ளது.*

*இது தொடர்பாக அப்பத்திரிகையில் வெளியான செய்தி: முந்தைய பா.ஜ.க. கூட்டணியின் (வாஜ்பாய் தலைமை[illegible]லான) ஆட்சியில் பாகிஸ்தானுடன் இணக்கமான நல்லுறவைப் பேண நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதே வழிமுறையை மோடியும் பின்பற்றுவாரா என்ற கேள்விக்குக் காலம்தான் பதில் கூறும்.*

*அதேவேளை, பா.ஜ.கவின் இந்துத்துவக் கொள்கையால் இந்தியாவில் உள்ள முஸ்லிம்கள் கவலையடைந்துள்ளதும் உண்மையே. மத ரீதியான வன்முறை, மத அடிப்படைவாதம் ஆகியவை தொடர்பாக தன் மீது கூறப்பட்ட புகார்கள் அனைத்தையும் புறந்தள்ளி, தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கக் கூடிய நிலையை மோடி அடைந்துள்ளார். 1984 ஆம் ஆண்டு ராஜீவ் காந்தி தலைமையில் அமைந்த ஆட்சிக்குப் பின்பு, இந்தியாவில் இப்போதுதான் அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமையவுள்ளது.*

*மோடி, தன் மீது மக்களுக்கு நல்லெண்ணம் ஏற்பட திட்டமிட்டு உழைத்துள்ளார். கடந்த 13 ஆண்டுகளாக அதற்காக தீவிர பரப்புரை மேற்கொண்டார்.*

*கடந்த 10 ஆண்டுகளில் குஜராத் 8 சதவீத வளர்ச்சியை எட்டியுள்ளது. இதே காலகட்டத்தில் தமிழ்நாடு 8.6 சதவீதமும், பீஹார் 15 சதவீதமும் வளர்ச்சியை எட்டியுள்ளன. காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசுக்கு எதிராக மக்களுக்கு ஏற்பட்ட அதிருப்தி, வாரிசு அரசியல் போன்றவற்றால், அக்கட்சி படுதோல்வியைச் சந்தித்துள்ளது.* (த)

## இந்திய நாடாளுமன்றத்தில் இம்முறை அதிக பெண்கள்

இந்திய நாடாளுமன்றத்துக்கு நடைபெற்ற தேர்தலில் இதுவரை இல்லாத அளவுக்கு அதிக பெண்கள் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இம்முறை 60க்கும் அதிகமான பெண்கள் நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ளனர் என்று ஆய்வு மையம் ஒன்று கூறியுள்ளது.

எனினும் நாடாளுமன்ற மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையை ஒப்பிடும்போது இது 11 சதவீதமே என்றும் அந்த ஆய்வு மையம் சுட்டிக்காட்டியுள்ளது.

பி.ஆர்.எஸ் லெஜஸ்லேட்டிவ் ரிசேர்ச் எனும் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் சராசரி வயது, அவர்களின் சமூகப் பொருளாதாரப் பின்னணி உட்பட பல தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. (த)

## அ.தி.மு.க. நாடாளுமன்றக் குழு தலைவராக தம்பிதுரை தெரிவு

சென்னை,மே 20

அ.தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவராகத் தம்பிதுரை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக, அந்தக் கட்சியின் பொதுச் செயலரும், தமிழக முதல்வருமான ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அ.தி.மு.க. நாடாளுமன்ற மக்களவை, மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டம் எனது தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், கழக நாடாளுமன்றம், மக்களவை, மாநிலங்களவை ஆகிய குழுக்களின் நிர்வாகிகளாகக் கீழ்க் கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ஜெயலலிதா

அ.தி.மு.க. நாடாளுமன்றக் குழு நிர்வாகிகள்:

தலைவர்: எம்.தம்பிதுரை

துணைத் தலைவர்: வி.மைத்ரேயன்

அ.தி.மு.க. நாடாளுமன்ற மக்களவை குழு நிர்வாகிகள்:

தலைவர்: எம். தம்பிதுரை

துணைத் தலைவர்: பி.வேணுகோபால்

கொறடா: பி.குமார்

பொருளாளர்: கே.என். ராமச்சந்திரன்

செயலாளர்: ஆர். வனரோஜா

அ.தி.மு.க. நாடாளுமன்ற மாநிலங்களவை குழு நிர்வாகிகள்:

தலைவர்: வி.மைத்ரேயன்

துணைத் தலைவர்: எஸ். முத்துக்கருப்பன்

கொறடா: எல். சசிகலா புஷ்பா

பொருளாளர்: ஆர். லட்சுமணன்

செயலாளர்: டி.ரத்தினவேல். (த)

## கட்சியில் மாற்றம் இல்லையேல் கருணாநிதிக்கு ஏமாற்றம் தான்

### டி.ராஜேந்தர் கூறுகிறார்

சென்னை,மே 20

தி.மு.கவில் சில மாற்றங்களை செய்யாவிட்டால் கருணாநிதிக்கு தொடர்ந்து ஏமாற்றங்களே ஏற்படும் என ல.தி.மு.க தலைவர் டி.ராஜேந்தர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழகத்தில் தி.மு.க. ஏற்கெனவே எதிர்க்கட்சி அந்தஸ்தை இழந்துவிட்டது. இந்நிலையில் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலிலும் தி.மு.க. அனைத்து தொகுதிகளிலும் தோல்வியைச் சந்தித்துள்ளது.

ஒத்த கருத்து உள்ளவர்களை அரவணைத்துப்போகாத அணுகுமுறைக்கு கருணாநிதிக்குக் கடவுள் கொடுத்த கடைசி எச்சரிக்கையே இது. இனிமேலாவது கருணாநிதி கட்சிக்குள் சில மாற்றங்களைச் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் தொடர்ந்து ஏமாற்றங்கள் வந்து கொண்டேயிருக்கும் என்றார். (த)

# காணாமற்போன விமானத்தை சுட்டு வீழ்த்தியதா அமெரிக்கா?

## புதிய தகவலால் பரபரப்பு

கான்பரா,மே 20
அண்மையில் வான்பரப்பில் மாயமான மலேசிய விமானம், இராணுவப் பயிற்சியின் போது சுட்டு வீழ்த்தப்பட்டதாகப் புதிய தகவலொன்று வெளியாகியுள்ளது.
239 பேருடன் மலேசியாவின் கோலாலம்பூரில் இருந்து சீனாவின் பீஜிங்கிற்குப் புறப்பட்டுச் சென்ற மலேசிய எயார் லைன்ஸ் விமானம் கடந்த மார்ச் மாதம் 8 ஆம் திகதி நடுவானில் மாயமானது.
நடுவானில் 35 ஆயிரம் அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்தபோது மாயமான அந்த விமானத்தின் கதி குறித்து இதுவரை எந்த உறுதியான தகவலும் இல்லை.
இந்த விமானம் இந்திய பெருங்கடலின் தென்பகுதியில் விழுந்து நொருங்கி இருக்கக்கூடும் என்ற ஊகத்தின் பேரில், புளூபின்21 என்ற நீர்மூழ்கி ரோபோவைக் கொண்டு நடந்து வரும் தேடுதல் வேட்டையிலும் பயன் இல்லை. மலேசிய விமானம் மாயமான விவகாரத்தில் திடீர்த் திருப்பம் ஏற்பட்டது. இதில் அல்கொய்தா ஆதரவு தீவிரவாதிகள் 11 பேர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டனர். இந்நிலையில் தாய்லாந்து - அமெரிக்கா இராணுவக் கூட்டுப்பயிற்சியின் போது விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது என்றும் பின்னர் இந்த தகவல் மூடிமறைக்கப்பட்டுள்ளது என்றும் மாயமான விமானம் குறித்து எழுதப்பட்ட புத்தகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மாயமான மலேசிய விமானத்தில் பயணம் செய்த உறவினர்கள் மத்தியில் கோபத்தை ஏற்படுத்தியது குறித்துப் புத்தகம் வெளி வந்துள்ளது.
விமானம் எம்.எச் 370: மர்மம் என்ற புத்தகம் ஆஸ்திரேலியாவில் விற்பனைக்கு வருகிறது என்று இணையத்தளத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
லண்டனைச் சேர்ந்த அமெரிக்கப் பத்திரிகையாளர் மற்றும் எழுத்தாளர் நைஜல் கவ்தோர்னெ இந்த புத்தகத்தை எழுதியுள்ளார். மாயமான மலேசிய விமானத்தில் பயணம் செய்தவர்களுக்கு என்ன நடந்தது என்று அவர்களின் உறவினர்களுக்கு என்ன நடந்தது என்று கிட்டத்தட்ட நிச்சயமாக எதுவும் தெரிந்திருக்காது என்று கவ்தோர்னே தெரிவித்துள்ளார்.
நியூசிலாந்தைச் சேர்ந்த தொழிலாளி மைக் மெக்கே நேரடியாக நடந்த சம்பவத்தை பார்த்ததாகக் குறிப்பிட்டு இந்தப் புத்தகத்தில் நைஜல் புதிய தகவல்களை வெளியிட்டுள்ளார்.
மாயமான மலேசிய விமானம் கட்டுப்பாட்டு அறையின் தொடர்பை இழந்ததை அடுத்து சுட்டு வீழ்த்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. விமானம் மாயமானபோது தெற்கு சீன கடலில் தாய்லாந்து, அமெரிக்கா, சீனா, ஜப்பான், இந்தோனேஷியா மற்றும் மற்றபணியாளர்கள் இணைந்து போர் பயற்சி நடத்தினர். அப்போது விமானம் ஒன்று எரிந்து தாய்லாந்து வளைகுடா பகுதியில் விழுந்ததை மைக் மெக்கே பார்த்துள்ளார் என்று இரண்டையும் ஒப்பிட்டு கவ்தோர்னெ புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.
பயிற்சியின் துப்பாக்கி சூடு உள்ளிட்ட பல்வேறு பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அப்போது எதிர்பாராத விதமாக விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டிருக்கலாம் என்று புத்தகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)



வெளியிடப்பட்ட புத்தகம்

## பிரபல பாடகரை சிறைபிடித்த மது



மொன்றியல்,மே 20
கனடாவின் பிரபல பாடகர் அதிகமாகக் குடிப்பழக்கத்துக்கு ஆளாகி தற்போது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
டெரிக் விப்லி (34) என்ற பிரபல பாடகரான இவர், பெரும் குடிப் பழக்கத்துக்கு ஆளாகியதால் கல்லீரல் மற்றும் சிறுநீரகம் பாதிக்கப்பட்டுத் தற்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.
இந்த நிலையில் மருத்துவமனையில் இருக்கும் விப்லி, தனது சமூக வலைதளத்தில், தான் மருத்துவமனையில் இருப்பது போல் சில புகைப் படங்களை வெளியிட்டுள்ளார்.
மேலும், அவர் மிகவும் உடல் நிலை குன்றி மருத்துவமனையில் சுய நினைவு இழந்து படுக்கையில் இருப்பதாகவும், நீண்ட நாளாகப் பெரும் குடிப்பழக்கத்துக்கு ஆளானதால் இவ்வாறு நடந்தது எனக் குறிப்பிட்டுள்ளார்.
டெரிக் தனது ரசிகர்களை பொறுப்புடன் செயல்படும் படியும், கவனத்துடன் குறைவாகக் குடிக்கும் படியும் அறிவுறுத்தியுள்ளார்.
இது குறித்து மருத்துவர்கள் கூறுகையில், டெர்கின் உடலுறுப்புகள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன என்றும் இதேபோல் அவர் தொடர்ந்து குடித்து வந்தால், அவர் இறக்கும் அபாயம் நேரிடும் எனவும் தெரிவித்துள்ளார். (த)

## பொலிஸ் நிலையத்துக்குள் பெரியவரை சுட்ட பையன்

இஸ்லாமாபாத்,மே 20
பாகிஸ்தானில் மத நிந்தனைக் குற்றச்சாட்டுக்கு ஆளாகியிருந்த சிறுபான்மை மதப் பிரிவு ஒன்றைச் சேர்ந்த 65 வயது பெரியவர் ஒருவரை பதின்ம வயது பையன் ஒருவர் பொலிஸ் நிலையத்துக்குள் நுழைந்து சுட்டுக் கொன்றுள்ளார்.
பஞ்சாப் மாகாணத்திலுள்ள ஒரு கிராமத்தில் கலில் அகமது என்ற அந்த முதியவர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு பொலிஸ் நிலையத்தில் அறை ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது அந்தப் பையனால் சுடப்பட்டுள்ளார்.
இது குறித்து பாகிஸ்தான் பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர். (த)



இரு கொரியாக்களுக்கும் இடையேயான எல்லைப்பகுதியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டு வரும் வடகொரியப் படையினரை உற்சாகப்படுத்துவதற்காக வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் நேற்று அந்தப் பகுதிக்குத் திடீர்ப் பயணமொன்றை மேற்கொண்டார். இதன் போது அவர் அங்கு கடமையில் ஈடுபட்டிருக்கும் பாதுகாப்பு உயர் அதிகாரிகளுடன் அந்தப் பகுதியைச் சுற்றிப் பார்வையிட்டார். (த)

# போகோஹராம் தீவிரவாதிகளை விரைவில் ஒழிப்போம்

## 4 நாடுகளின் தலைவர்கள் போர் அறிவிப்பு

அபுஜா,மே 20
போகோ ஹராம் தீவிரவாதிகளை அழிப்பதற்காக நைஜீரியாவைச் சுற்றியுள்ள 4 நாடுகளின் தலைவர்கள் போர் அறிவிப்பை வெளியிட்டுள்ளனர்.
நைஜீரியாவில் கடந்த மாதம் 14ஆம் திகதி கடத்தப்பட்ட 276 மாணவிகள் இன்னும் மீட்கப்படாத நிலையில் உள்ளனர்.
இந்நிலையில் நைஜீரியாவின் அண்டை நாடான கமரூனில் சீனத்தொழிலாளர்கள் 10 பேரைத் தீவிரவாதிகள் கடத்திச் சென்றுள்ளனர்.
இதனால் மத்திய ஆபிரிக்காவில் தொடர்ந்து பதற்றம் நிலவி வருகின்றது.
எனவே ஆபிரிக்காவில் 'மினி அல்-கொய்தா' வாக செயல்பட்டு வரும் போகோ ஹராம் தீவிரவாத அமைப்பை கூண்டோடு அழிப்பது குறித்து ஆபிரிக்காவின் நைஜீரியா மற்றும் பிரான்ஸ் நாட்டின் ஜனாதிபதி, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியன் நாடுகளைச் சேர்ந்த முக்கிய தலைவர்கள் ஆராய்ந்துள்ளனர்.
தீவிரவாதிகளின் அட்டுழியங்களை ஒழிக்க பரீஸ் நகரத்திலுள்ள பில்ஸி மாளிகையில் நடந்த இந்த அவசர மாநாட்டில் தலைவர்கள் கூறியதாவது,
"கடத்தப்பட்ட பள்ளி மாணவிகளை மீட்க நைஜீரிய அரசு எல்லா முயற்சிகளையும் செய்து பார்த்துவிட்டது. போகோ ஹராம் தீவிரவாதிகள் நைஜீரியாவில் மட்டும் இல்லை. மத்திய ஆபிரிக்கா முழுவதும் ஒரு அல்-கொய்தா அமைப்பாகவே அவர்கள் உருவெடுத்துள்ளார்கள்.
போகோ ஹராம் தீவிரவாதிகள் இருக்கும் பகுதியில் புலனாய்வு வல்லுநர்கள், 20 ஆயிரம் ராணுவ வீரர்கள், கண்காணிப்பு விமானங்கள் நிறுவப்பட்டு, அவர்கள் தொடர்ந்து பணியாற்றிய போதிலும் தேடுதல் வேட்டை முடிவிற்கு வரவில்லை. இதற்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்றால் மேற்கு ஆபிரிக்க நாடுகளின் உதவிகள் தேவை என கூறியுள்ளனர்.
இந்த மாநாட்டுக்கு பிறகு செய்தியாளர்கள் சந்திப்பில் கமரூன் நாட்டு ஜனாதிபதி பேசுகையில் "போகோ ஹராம் தீவிரவாதிகளுக்கு எதிராக போர் அறிவிப்பு செய்வதற்காக நாங்கள் இங்கு கூடியிருக்கிறோம். ஏனெனில் தொடர்ச்சியான தீவிரவாத தாக்குதல்களை இனிமேலும் சகித்துக் கொள்ள முடியாததால் அவர்கள் மீது முழுமையான போரை தொடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது." என்றார். (த)


மாநாட்டில் 4 நாடுகளின் தலைவர்கள்

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழர் விரோதப் போக்கு மாற்றமடையவில்லை

போர் முடிந்த பின்னர், கடந்த சில ஆண்டுகளில் இலங்கை இராணுவம் தனது முகத்தை மாற்ற முயன்று வந்திருக்கிறது. தமிழர்களுக்குக் கடந்த 30 ஆண்டுகளாக அரச பயங்கர வாதத்தின் முன்னணி முகமாகவும் படுகொலையின் அடை யாளமாகவும் கொடூரங்களின் விளைநிலமாகவும் இருந்த தனது முகத்தை கொஞ்சம் கொஞ்சம் மாற்றி, தமிழர்களை நோக்கி ஒரு புன்னகைக் கீற்றை சிந்த இராணுவம் முயற் சித்தது.

அதற்காகச் சில நடவடிக்கைகளை அது முன்னெடுத்தது. இராணுவத்தில் தமிழ்ப் பெண்களைச் சேர்த்துக் கொண்டது (தமிழ் ஆண்களை ஏன் சேர்த்துக் கொள்ளவில்லை என்ற கேள்விக்கு அதனிடம் இருந்து பதில் இல்லை). வறுமையில் வாடிய மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுத்தது. நோயாளர்கள் சிலரின் சத்திர சிகிச்சைக்கு நிதி உதவிகள் செய்து கொடுத்தது. விளையாட்டு நிகழ்வுகளையும் களியாட்ட நிகழ்வுகளையும் ஏற்பாடு செய்து தந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக, ஹெலியில் இருந்து நல்லூர்க் கந்தன் தேர்த் திருவிழாவின்போது பூமாரி பொழிந்தது.

இவை எல்லாம் சிறப்பானவைதான். ஆயுதப் போர் ஒன்று முடிவுக்கு வந்த பின்னர் தன்னுடைய கொலை முகத்தைக் கழற்றி வைத்துவிட்டுத் தமிழ் மக்களுக்கு நேசக் கரம் நீட்டுவதற்கு இராணுவம் முயல்வதாகத்தான் இந்த நடவடிக்கைகள் தெரிந்தன. இதனை நம்பித்தான் அப்பாவித் தமிழ்ப் பெண்கள் சிலரும் இராணுவத்தில் இணைந்து கொண்டனர். ஆனால், கடந்த இரு தினங்களில் இராணுவம் பசுத்தோல் போர்த்துக் கொண்டிருந்தது வெளியே தெரிய வந்துவிட்டது. என்னதான் செய்தாலும் அது தன் இயல்பை மாற்றிக்கொள்ளாது என்பது உறுதியாகிவிட்டது.

மே-18 தமிழின ஒடுக்குமுறை நாளில், தமது உறவினர்களுக்காக அஞ்சலிக்க தமிழ் மக்களை அனுமதிக்கவே மாட்டேன் என்று பிடிவாதம் பிடித்து நின்றது இராணுவம்தான். பொது இடங்களில் அஞ்சலி செலுத்த இடமளிக்க முடியாது என்று பொலிஸாரும் அறிக்கைகள் விட்டாலும், அதனைச் சிரமேற்கொண்டு செயற்படுத்தியது என்னவோ இராணுவம்தான்.

அவர்கள் பாடசாலைகளில், பொது மண்டபங்களில், சனசமூக நிலையங்களில் எல்லாம் நிலைகொண்டிருந்தனர். அதற்கும் மேலாக கோயில்களில்கூட அச்சுறுத்தல் தொனியோடு நடந்து கொண்டனர். நல்லூர் ஆலயத்தில் வெளிப்படையாகவே இராணுவச் சீருடைக் காற்சட்டையுடன் (மேலங்கியைக் கழற்றிவிட்டு) பல டசின் கணக்கானவர்கள் உள்ளேயும் வெளியேயும் உலாவினர். அவர்கள் அனைவருக்கும் கொடுக்கப்பட்டிருந்த பணி ஒன்றுதான். உளவியல் ரீதியில் தமிழர்களை அச்சுறுத்துவது. கனகச்சிதமாக அவர்கள் அந்தப் பணியை நிறைவேற்றினர்.

இதுகூடப் பரவாயில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக அடக்குமுறையின் உச்சத்துக்குச் சென்று, உயிர் காக்கும் குருதிக் கொடையைக்கூட மே-18ஆம் நாளில் தடுத்து நிறுத்தினர். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை குருதி வங்கி, சிவில் உடையில் இருந்த இராணுவத்தினரால் முற்றுகையிடப்பட்டிருந்தது. வங்கிக்குப் போவோர் வருவோரைக் கண்காணிக்கவும் படம் எடுக்கவும் என மேலும் பலர் சிவில் உடையில் நிறுத்தப்பட்டிருந்தனர்.

ஆனால், இதே இராணுவத்தினர் யாழ். போதனா வைத்தியசாலையில் குருதிக் கொடையளித்துவிட்டு, தமிழ் மக்களுக்காகத் தாங்கள் உயர் தானம் அளித்துள்ளார்கள் என்று ஊடகங்களின் ஊடாக விளம்பரப்படுத்தியிருக்கிறார்கள். இருந்தாலும் மே 18 அன்று யாரும் குருதிக் கொடை கொடுக்கக்கூடாது என்று தடுத்திருக்கிறார்கள்.

ஆக மொத்தத்தில் கடந்த சில ஆண்டுகளாகக் தான் கட்டி எழுப்பி வந்த விம்பத்தை இரண்டே நாள்களில் இராணுவம் போட்டுடைத்துவிட்டது. இதற்கு தமிழ் மக்களின் மேல் பரிவோ, பாசமோ கிடையாது. அரசு இன்னமும் முழுக்க முழுக்க அரச பயங்கரவாதத்தின் முகமாகத்தான் இருக்கிறது. தமிழ் மக்களின் நண்பனாக, பாதுகாவலனாக அது ஒருபோதும் இருக்க முடியாது என்பதையும் நிரூபித்திருக்கிறது. இதுவரையில் போட்டவை எல்லாம் போலி வேசம் என்பதையும், வடித்தவை எல்லாம் நீலிக் கண்ணீர் என்பதையும் வெளிப்படுத்தி விட்டது.

பிதிர்க் கடன் நிறைவேற்றவும், ஆயலங்களில் வழிபாடியற்றவும், குருதிக் கொடை வழங்கவும்கூட தடைவிதிக்கும் ஓர் இராணுவம் ஒருபோதும் தமிழர்களுக்கு நண்பனாக ஆகவே முடியாது. ஆகவேண்டிய தேவையும் இல்லை அவர்களுக்கு.

# அலட்சியம் செய்கின்ற நிலையில் அரசு இல்லை

## செயற்பாடுகள் இதையே வெளிப்படுத்துகின்றன

சண்டே ரைம்ஸ் கட்டுரையிலிருந்து
கோகுலன்

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் இலங்கை தொடர்பான சர்வதேச விசாரணைகள் ஆரம்பிக்கப்படும்போது குற்றச்சாட்டுகளை மறுதலிப்பதற்கான பல்வேறு ராஜதந்திர முயற்சிகளில் அரசு அதிகார பூர்வமற்ற விதத்தில் ஈடுபட்டு வருகின்றது.

இந்த நடவடிக்கைகள் அரசின் அதிகார பூர்வமான நிலைப்பாடான எந்தவித சர்வதேச விசாரணைகளையும் அங்கீகரிக்கப் போவதில்லை, அவ்வாறு விசாரணைகளை நடத்துவதற்கென எவரும் நாட்டுக்குள் வருவதற்கு அனுமதிக்கப் போவதுமில்லை என்பதற்கு மாற்றீடாக இருப்பதாகவும் எடுத்துக் கொள்ள முடியாது.

அடுத்துவரும் இரண்டு வாரங்களுக்குள் விசாரணைகளை நடத்துவதற்கான நிபுணர்களின் பெயர்களையும் அவர்கள் விசாரணை நடத்த வேண்டிய விடயங்கள் மற்றும் அதற்கான கால அவகாசம் முதலியவற்றையும் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை அறிவிப்பார் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

இந்த விசாரணையானது அதிகார பூர்வமான விசாரணை ஆணைக்குழு அல்லது நிபுணர்களின் ஆய்ம் என்ற வகையில் இல்லாமல் மனித உரிமை ஆணையாளர்பணிமனையால் நடத்தப்படும் விசாரணைகள் என்ற வகையிலேயே அடையாளப்படுத்தப்படுவதாக இருக்கும்.

இந்த செயற்பாட்டின் அறிவித்தல் முதலில் ஜெனிவாவிலுள்ள இலங்கை நிரந்தர பிரதிநிதியின் அலுவலகம் மூலமாக இலங்கை அரசுக்கு அறிவிக்கப்படும். அதன் பின்னர் பகிரங்கப்படுத்தப்படும் என்று தெரிகின்றது. அதன் பின்னர் விவரங்கள் வெளிப்படுத்தப்படும்.

> மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை நிராகரித்து விட்டதாக அறிவித்திருந்த போதிலும் தீர்மானத்தில் காணப்படும் பிரச்சினைகள் ஒன்றைத் தவிர அனைத்தும் நிறைவேற்றப்படுகின்றன அல்லது நிறைவேற்றப்படப் போகின்றன என்பதற்கான ஆதாரமாக ஜனாதிபதியின் இந்த கூற்று பகிரங்கப்படுத்துவதாய் உள்ளது.

ஒரு வாரத்துக்கு முன்னர் பாகிஸ்தான் சட்ட வல்லுநர் ஒருவருடன் இலங்கை அரசு ஆலோசனைகள் நடத்தியிருந்தது. சவுத்ரி அயிட்சாஸ் அஹ்சன் என்ற அந்த சட்ட நிபுணர் அரசுக்கு வழங்கியிருந்த யோசனைகளில் மனித உரிமைகள் சபையில் அங்கம் வகிக்கும் மேலும் பல நாடுகளின் ஆதரவைப் பெற்றுக்கொண்டு மனித உரிமைகள் சபையின் சிறப்பு கூட்டமொன்றை நடத்துவதற்கு முயற்சி எடுக்க வேண்டும் என்பதும் ஒன்று. அவ்வாறான ஒரு சிறப்புக் கூட்டத்தை நடத்தும்படி கோருவதற்கு கடந்த மார்ச்சில் இலங்கைக்கு ஆதரவாக (அல்லது அமெரிக்க தீர்மானத்துக்கு எதிராக) வாக்களித்திருந்த பதினொரு நாடுகளுடன் மேலும் நான்கு நாடுகளின் ஆதரவுதான் தேவைப்படும் என்பது அவருடைய யோசனையாக இருந்துள்ளது. அவ்வாறான ஒரு கூட்டத்தில் இலங்கை தன் நிலைப்பாட்டை வலுவாக எடுத்து வைப்பதன் மூலம் மேலும் பல நாடுகளின் ஆதரவைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அவர் எடுத்துக் கூறியதாகவும் தெரிகின்றது.

உத்தேச ஐ.நா. மனித உரிமைகள் சபை விசாரணையைப் பொறுத்தவரை அதனை இல்லாமல் செய்து விடுவதற்கான வழிமுறை எதுவும் கிடையாது என்று தெரிவித்துள்ள பாகிஸ்தான் சட்ட நிபுணர் அது முழுமையும் சட்டபூர்வமான செயற்பாடாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் இப்பொழுது முன்னெடுக்கப்படும் உள்ளக விசாரணைகளில் சர்வதேச பார்வையாளர்களையும் பிரசன்னமாய் இருக்கச் செய்வது இலங்கை அரசுக்குப் பயனளிப்பதாகவிருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். அது விசாரணைகளுக்கு மேலும் நம்பகத்தன்மையை ஏற்படுத்துவதாக இருக்கும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

எதுவானாலும் பாகிஸ்தான் சட்ட நிபுணரின் ஆலோசனைகளை ஏற்று நடக்க இலங்கை அதிகாரிகள் விருப்பம் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. பல்வேறு சட்ட நிலைப்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்காக பாகிஸ்தான் நிபுணரின் ஆலோசனை பெறப்பட்டதென்று கூறியுள்ள வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இலங்கை அரசு என்ன செய்ய வேண்டும்என்பதைஅறிந்து கொள்வதற்காக அவருடன் ஆலோசனை நடத்தப்படவில்லையென்றும் தெரிவித்துள்ளார். கடந்த காலத்தில் மனித உரிமை சபையின்இலங்கை தொடர்பான பல விடயங்களையும் நேரடியாக முகம் கொடுத்து சமாளித்து வந்துள்ள அமைச்சர் பீரிஸ் எதிர்வரும்செப்ரெம்பர் மாதம் மனித உரிமைசபையிலும் பிரச்சினைகளைக் கிளப்பிதீர்வுகாணப்படும் என்று கூறியிருப்பதாக தெரிகின்றது. அவர் கூற்றுப்படி பார்த்தால் ஏற்கெனவே மூன்று சந்தர்ப்பங்கள் தீர்வு காண்பதற்காக இருந்துள்ளன. நான்காவது சந்தர்ப்பத்தில் எவ்வாறு தீர்வு காண்பதற்கு திட்டமிட்டுள்ளார் என்பது அங்கு பிரசன்னமாய் இருந்தவர்களுக்கும்கூட புரியவில்லை.

உண்மையில் பாகிஸ்தான் சட்ட நிபுணர் தெரிவித்த யோசனைகள் குறித்து பீரிஸ் அவ்வளவு மகிழ்ச்சியுடன் காணப்படவில்லை. இன்னொரு விடயம் என்னவென்றால் இராணுவ நிபுணத்துவ அபிப்பிராயங்களைப் பெற்றுக்கொள்வது அமெரிக்க மக்கள் பிரதிநிதிகளின் அதிகப்படியான ஆதரவைப் பெற்றுக் கொள்வதுமாகும். இதன் ஓர் அம்சமாக அரசின் முக்கிய பிரமுகர் ஒருவர் அமெரிக்காவில் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் ஓய்வுபெற்ற அமெரிக்க ஜெனரல் ஒருவருடன் சந்திப்புக்களை நடத்தியிருக்கிறார். 34 ஆண்டு காலம் அமெரிக்க இராணுவத்தில் பணியாற்றியுள்ள ஜெனரல் வெஸ்லிகிளார்க் என்ற அந்த ஜெனரல் விரைவில் இலங்கைக்கு வரவிருக்கிறார் என்றும் தெரிகின்றது.

கடந்த வாரம் அமெரிக்க ஆயுதப் படைகள் குழுவின் உறுப்பினர் செனட்டர் ஜேம்ஸ் எம்.இன்ஹோமே அதிபர் பராக் ஒபாமாவுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் தாம் இலங்கை தொடர்பாக செனட் சபையில் கொண்டுவந்துள்ள தீர்மானத்தை ஆதரிக்கும்படி கேட்டிருந்தார். இலங்கை தொடர்பான அமெரிக்க கொள்கையில் பயங்கரமாக சமாந்தர நிலைமை காணப்படவில்லையென்றும் தெரிவித்திருந்ததுடன் இலங்கை தொடர்பான அமெரிக்க கொள்கை மீளாய்வு செய்யப்பட வேண்டும் என்றும் அவர் கோரியிருந்தார்.

கடந்த வாரம் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜப்பானிய வெளியுறவுத்துறை நாடாளுமன்ற உதவி அமைச்சர் செய்ஜி கிஹாராவிடம் பேசியபோது தீர்மானத்தைக் கொண்டு வந்தவர்கள் விடுத்த கோரிக்கைகளில் சர்வதேச விசாரணையைத் தவிர மற்ற எல்லாவற்றையும் நிறைவேற்றும் செயற்பாட்டில் தாங்கள் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்திருந்தார்.

மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை நிராகரித்து விட்டதாக அறிவித்திருந்த போதிலும் தீர்மானத்தில் காணப்படும் பிரச்சினைகள் ஒன்றைத் தவிர அனைத்தும் நிறைவேற்றப்படுகின்றன அல்லது நிறைவேற்றப்படப் போகின்றன என்பதற்கான ஆதாரமாக ஜனாதிபதியின் இந்த கூற்று அமைந்துள்ளது.

இது என்னத்தைக் காட்டுகிறது என்றால், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி அரசானது ஐ.நா. மனித உரிமைகள் சபைத் தீர்மானத்தை அலட்சியம் செய்ய முடியாதது என்று கருதுவதையும் போர்க் குற்றச் சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகள் முடிவுற்றதன் பின்னர் எழக்கூடிய நிலைமைகளையும் எடுத்துக்காட்டுவதாய் இருக்கின்றது.

இந்த வகையில் அரசு எடுத்துள்ள இன்னொரு நடவடிக்கை குற்றங்களால் பாதிக்கப்படுபவர்கள் மற்றும் சாட்சியமளிப்பவர்களின் பாதுகாப்புத் தொடர்பான சட்ட முன் வரைவு ஒன்று அமைச்சரவையின் ஆலோசனைக்கு நீதியமைச்சரால் அவசரமாகத் தயாரித்து வழங்கப்பட்டிருப்பதாகும். இது தேசத்தின் நலன்சார்ந்த மிக முக்கிய விடயம் என்று தெரிவித்துள்ள அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு நாடாளுமன்றத்திலும் தாக்கல் செய்யப்படவிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் அமைச்சர் விமல் வீரவன்ஸவின் தேசிய சுதந்திர முன்னணி கட்சி அரசுக்குச் சமர்ப்பித்துள்ள 12 அம்சக் கோரிக்கையானது அரசின் பங்காளிக் கட்சிகள் மத்தியில் பல்வேறு கருத்துப் பரிமாற்றங்களை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிகின்றது. வீரவன்ஸவின் கட்சி சமர்ப்பித்துள்ள கோரிக்கைகளில், சர்வதேச செல்வாக்கின் மீது புலனாய்வுகளோ, விசாரணைகளோ ஏற்கெனவே அரசமைப்புக்கு அமைவாக ஆரம்பிக்கப்பட்டவை தவிர வேறு இடம்பெறலாகாது. அவ்வாறான உள்ளக விசாரணை நடத்தப்படுவதற்கு பல்வேறு அரசியல் சக்திகளால் அரசுக்கு அழுத்தம் கொடுக்க முற்படுவதை வன்மையாகக் கண்டிக்கின்றது.

மற்றும் இலங்கை மீது பலவந்தமாக திணிக் கப்பட்ட 13ஆவது திருத்தம் தொடர்பாக எந்த அரசுடனோ, கட்சிகளுடனோ அதிகார பூர்வமாகவோ அதிகார பூர்வமற்ற வகையிலோ பேச்சுவார்த்தைகள் நடத்தப்படலாகாது என்பவையும் அடங்கும்.

அரசின் முக்கிய பங்காளிக்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மிக முக்கிய அமைச்சர் ஒருவர் கருத்து வெளியிடுகையில் வால் தலையை ஆட்ட முயற்சி செய்வதற்கு இடம் தரலாகாது என்றார். சில அமைச்சர்கள் வீரவன்ஸவை அரசிலிருந்து வெளியேற்றி விடும்படி கோரியுள்ளனர். அவர்களுக்கெல்லாம் அந்தரப்பட வேண்டாம் என்று ஜனாதிபதி ஆறுதல் கூறி வைத்திருப்பதாகத் தெரிகின்றது.

அமரர் எஸ்.ஆர்.கனகநாயகத்தின்
25 ஆவது ஆண்டு நினைவுதினம்
கடந்த 15 ஆம் திகதியாகும்.



# உயர் தொழிலில் நிபுணர்

அன்னாரது நினைவு தினத்தை முன்னிட்டு அவரின் நினைவுகளை மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதியரசர் சிவா செல்லையா, முன்னாள் வவுனியா அரச அதிபர் எஸ்.சிவஞானம், சட்டத்தரணி நம.சிவப்பிரகாசம் ஆகியோர் மீட்டுள்ளனர்.

ஓய்வு பெற்ற நீதியரசர் சிவா செல்லையா அமரரின் நினைவுகளை மீட்கும்போது:-

உயர் தொழில் நிபுணர் எஸ்.ஆர்.கனகநாயகம் யாழ்ப்பாண வழக்கறிஞர் குழாத்தின் மிகப் பிரபல்யம் வாய்ந்த உறுப்பினர்களுள் ஒருவராவார். தொழிலில் வெற்றியடைந்த வழக்கறிஞராய் பிரகாசித்த போதிலும், எளிய படாடோபமற்ற வாழ்க்கை முறையைத் தேர்ந்தெடுத்த அவர் எல்லோரையும் மயக்கும் ஒரு வகையான புன் சிரிப்பை உதிர்த்த வண்ணமே காணப்பட்டார். அவரது உடனடி விகடமும் நகைச்சுவையும் சட்டக் குழாத்தின் மத்தியில் நட்புறவை வளர்க்கப் பெரிதும் உதவின.

அனைவரும் தேடியமர்த்தும் நிபுணத்துவம் வாய்ந்த சட்டவாதியென்ற முறையில் வட மாகாணத்தில் அனைத்து நீதி மன்றங்களிலும் சிறப்பு சேவை செய்ததோடு அல்லாமல் நீதி மன்ற சுவர்களுக்குள் மட்டும் நின்றுவிடாது பொது வாழ்வில் பெரிதும் பங்குபற்றிய எஸ்.ஆர். கனகநாயகம் அவர்கள் அந்தக் காலகட்டத்தில் மேல்சபை உறுப் பினராகவும் பதவி வகித்தார்.

வெற்றிகரமான சட்டவாதி என்ற வகையில் அவருக்கிருந்த வேலைப் பளுவை என்றுமே அவர் ஒரு சுமையாகக் கருதிய தில்லை. நான் 1974, 1975 காலப் பகுதி யில் யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி யாகப் பணியாற் றிய போது, வழக்குகளின் முக் கிய விவரங் களைக் கிரகிப்பது. ஆழ்ந்த ஆய்வு மனிதர்களை யும் விடயங்களையும் பற்றிய நுண் ணறிவு, விவேகமான குறுக்கு விசாரணை போன்றவை அவரிடம் குடிகொண் டிருந்தமையை நேரில் கண்டேன். எந்த வழக்கிலும், அது காணியோ, பிரிவிடலோ, நம்பிக்கைச் சொத்தோ, பங்குடைமையோ, தேச வழமையோ புராதனக் கோவிலொன்றின் நம்பிக்கைச் சொத்தோ அல்லது வேறெதுவாயினும், அவற்றை இலாவகமாகவும் தெளிவாகவும் கையாளும் வலிமைமிக்கவர்.

கனகநாயகத்தின் பெயரும் புகழும் யாழ்ப்பாண சட்டத் துறை வரலாற்றில் ஒரு நிலையான பதிவைக் கொண்டிருக்கும் என்பது திண்ணம்.

முன்னாள் அரச அதிபர் எஸ்.சிவஞானம் அமரர் தொடர்பாக தெரிவிக்கையில்:

எஸ்.ஆர்.கனகநாயகம் தமது பெரும் எண்ணிக்கையான தனது நண்பர்கள், போற்றுவோர், உறவினர்கள் ஆகியோரைத் துயரத்தில் ஆழ்த்தியும், அவருக்கு யாழ்ப்பாணத்தில் பிரியாவிடையொன்றினை அளிக்கும் வாய்ப்பினை அவர்களுக்கு வழங்காமலும் ஆஸ்திரேலியாவில் 1989 மே 15 ஆம் திகதியன்று சடுதியாய் மறைந்தார். அரசியல், சமயம், கல்வி, சட்டம், சமூகசேவை, நாடகக்கலை இவை அனைத்திலும் முழு ஈடுபாடு காட்டிய அமரர் கனகநாயகத்தின் காலத்தை ஒரு பொற்காலம் என்றால் மிகையாகாது.

யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள கனகநாயகம் அவர்களின் பணிமனையில் நடைபெற்று வந்த பரமேஸ்வராக் கல்லூரியின் பணிப்பாளர் சபைக் கூட்டங்களுக்கு, தனக்கேயுரிய அறிவாற்றலுடனும் ஞாபக சக்தியுடனும் தலைமை வகித்த கனகநாயகத்தை அப்பணிப்பாளர் சபையின் உறுப்பினர்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள். அந்தக் கூட்டங்களின் போது அவரது துணைவியார் வழங்கிய உபசாரங்கள் அவர்கள் மனதில் இன்றும் பசுமையாய் உள்ளன. இராமநாதன் கமத்துக்குரிய வயல் நிலங்களை பயிரிடும் குத்தகைக் கமக்காரர்களோடு நேரடித் தொடர்பை வைத்திருந்த கனகநாயகம் அவர்கள், ஆண்டுக்கு ஒரு முறையாவது அவர்களைச் சந்தித்து குசலம் விசாரித்து அவர்களது மனக்குறைகளைக் கேட்டறிவதற்காக, பணிப்பாளர் சபை உறுப்பினரை கிளிநொச்சிக்கு அழைத்துச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

எனக்கு முன்னர் பணிப்பாளர் சபையின் செயலாளர் மற்றும் பொருளாளராகக் கடமையாற்றிவரும் ஓய்வு பெற்ற நிரந்தரக் காரியதரிசியுமான சிறிகாந்தா மற்றும் கனகநாயகம் ஆகியோருக்கு இடையில் நிலவிய கூட்டு, வட இலங்கையின் இந்துசமய ஸ்தாபனங்களின் மேம்பாட் டுக்காக உழைப்பதில் உறுதுணையாய் இருந்தது. வைத்திலிங்கம் அவர்களால் இரண்டு பாகங்களாக எழுதப்பட்ட சேர்.பி.இராமநாதனின் சரிதையை பிர சுரிப்பதில் இவ்விருவருமே பொறுப்பாய் இருந்தனர். அமரரின் நினைவுகள் என்றும் எமது நினைவுகளில் நிறைந்திருக்கும்.

# அழிவின் விளிம்பில்

## நெடுந்தீவு ஆடுகளும் மட்டக் குதிரைகளும்



■ ச.யசிந்தன்,
பேராசிரியர் பிரதீபா சில்வா
(விலங்கு வேளாண்மைப் பிரிவு
விவசாயபீடம் பேராதனைப் பல்கலைக் கழகம்)

*(நேற்றைய தொடர்ச்சி)*

நெடுந்தீவின் தெற்குப் பிரதேசத்தில் உள்ள வெல்லை புல் வெளியில் மட்டக்குதிரைக் கூட்டங்களையும் அவை சண்டையிடும் காட்சிகளையும் நேரில் பார்வையிடலாம்.

இவ்வாறு நெடுந்தீவுப் பிரதேசத்துக்கு தனித்துவமாக விளங்கும் இந்த மட்டக்குதிரைகள் கோடை காலத்தில் நீர் ஆகாரம் தேடி அலைவதையும் குடிப்பதற்கு நீர் இன்றித் துடிதுடித்து இறந்து போன அவற்றின் உடல்களையும் காணக்கூடியதாக இருக்கும்.

நெடுந்தீவில் உள்ள மட்டக்குதிரை - பெரும்பாலானோரால் குதிரை (Horse) என்றழைக்கப்படும் இனம் - இன்றைய நாளில் ஏறக்குறைய 2,000 ஆகக் காணப்படுகின்றன. இந்த மட்டக்குதிரைக்குப் பிரதான சவாலாக உள்ளவை பின் வருமாறு.

01. கோடை காலத்தில் ஏற்படும் குடிதண்ணீர்ப் பற்றாக்குறை.
02. கோடை காலத்தில் ஏற்படும் உணவுப் பற்றாக்குறை.
03. இரவு நேரம் மற்றும் மேய்ச்சல் தரையில் ஏற்படும் விஷக்கடி (பாம்புக்கடி).

கோடை காலத்தில் ஏற்படும் உணவு மற்றும் குடிதண்ணீர் பற்றாக்குறையினால் பெரும்பாலான மட்டக் குதிரைகள் புல் வெளியில் இறந்து காணப்படுவதை நேரில் அவதானிக்க முடியும். நெடுந்தீவுப் புற்தரைப் பிரதேசம் கோடை காலத்தில் புல் போன்ற உணவுகள் அற்ற காய்ந்த குடிதண்ணீரற்ற பிரதேசமாகக் காணப்படுகின்றன. இதனால் மட்டக்குதிரைகள் தமது உணவு மற்றும் குடிதண்ணீர்த் தேவையைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமத்தை எதிர் நோக்குகின்றன. இதைவிட பாம்புகளினால் ஏற்படும் விஷக்கடி மூலமாகவும் குதிரைகள் இறப்பை எதிர்கொள்கின்றன.

மேற்கூறிய காரணங்களைக் கருத்தில் கொண்டு சம்பந்தப் பட்டவர்கள் இந்த இரு இனங்களை அழிவிலிருந்து பாதுகாப்பதற்கு முன்வர வேண்டும். நெடுந்தீவில் ஒரு காலத்தில் எங்கு பார்த்தாலுமே ஆடுகள் நிறைந்திருந்ததாகவும் ஆனால் இன்று ஆடுகளைப் பார்க்க வேண்டுமானால் தேடிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அங்குள்ள மக்கள் கூறுகின்றனர். உரிய அதிகாரிகளின் முறையற்ற செயற்பாடுகள் மற்றும் கவனிப்பாரற்ற தன்மையே இவற்றுக்குக் காரணம் என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேலும் நெடுந்தீவுப் பகுதியில் சிறந்த கால்நடை வசதிகளை ஏற்படுத்துவதற்கு தற்போது புதிதாக அமைக்கப்பட்டுவரும் கால்நடை மருத்துவ அலுவலகம் விரைவில் சிறப்பாகச் செயற்பட வேண்டும். இதைவிட அதிகரிக்கும் ஆடுகளின் திருட்டுக்களைக் கட்டுப்படுத்துவதற்கு நெடுந்தீவுப் பிரதேச செயலகமும் நெடுந்தீவுக் காவல் துறையினரும் இணைந்து செயற்பட வேண்டும். இதற்கு நெடுந்தீவு பண்ணையாளர்கள் முழு ஒத்துழைப்பையும் வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தனர். மேலும் ஆடுகளின் தற்போதைய குடித் தொகை வீழ்ச்சியைக் கருத்திற் கொண்டு ஆடுகளின் ஏற்றுமதிக்கான அனுமதியின் போது பொருத்தமான நடைமுறைகளைக் கையாள்வதன் மூலம் ஆடுகளின் குடித் தொகை வீழ்ச்சியை வெகுவாகக் குறைக்கலாம். புல் வெளிகள் மற்றும் மேய்ச்சல் தரைகளில் தண்ணீர்த் தொட்டிகள் அமைப்பதாலும் வறட்சியை எதிர்த்து வளரக் கூடிய புல்லினங்களை வளர்ப்பதன் மூலமும் வறட்சியான காலங்களில் மட்டக்குதிரைக்குத் தேவையான குடிதண்ணீர் மற்றும் தீவனம் போன்றவை கிடைக்கப் பெறும். இதனால் மட்டக் குதிரையின் அழிவை இயன்றளவு குறைக்க முடியும். மேலும் வெளி நாடுகளைப் போல நெடுந் தீவில் உள்ள மட்டக்குதிரையைப் பயன்படுத்தி அங்கு ஒரு சுற்றுலா மையத்தை உருவாக்கி பல வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பை உருவாக்குவதால் நெடுந்தீவுப் பிரதேசத்தையும் மேலும் வளமான பிரதேசமாக மாற்றலாம். மேலும் பல்கலைக்கழகங்களில் விலங்கு வேளாண்மை மற்றும் விலங்கு மருத்து வத்துறையைச் சேர்ந்தவர்கள் இந்தத் தீவில் உள்ள ஆடு, மாடு, செம்மறி ஆடு மற்றும் மட்டக்குதிரை ஆகியவற்றில் தொடர்ந்து பல ஆய்வுகளைச் செய்து இவற்றை அழிவிலிருந்து பாதுகாக்க முன்வர வேண்டும்.

*(முற்றும்)*



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: அடுத்தவர் செய்கை கோபத்தைத் தூண்டுவதாக இருக்கும். கவனம் தேவை. அடுத்தவரை நம்பி எதையும் விடாமல் நேரடியாகச் செய்வது நன்மை தரும். வேகம் காட்டாமல் விவேகமாகச் செயற்படுவது வெற்றிக்கு உதவும்.

**இடபம்**: எந்த ஒரு வேலையையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்து அதன்பிறகு அதில் ஈடுபடுவது நல்லது. வீண் முயற்சிகளைத் தவிர்ப்பதும் நன்மை தரும். பெரியவர்களின் ஆலோசனைப்படி எதையும் செய்வது எதிர்காலத்துக்கு நன்மை தரும்.

**மிதுனம்**: காரியத் தடை தாமதம் ஏற்படும். புதிய முயற்சிகளைத் தள்ளிப்போடுவது நல்லது. நன்மை, தீமைகளைப் பற்றி கவலைப்படாமல் தலை நிமிர்ந்து நடப்பார்கள். தொழில் வியாபாரம் தொடர்பான செலவு அதிகரிக்கலாம்.

**கடகம்**: பூமி, மனை தொடர்பான தகராறுகள் நீங்கி அதன் மூலம் இலாபம் கிடைக்கலாம். குடும்பத்தில் கோபத்தைக் குறைத்து நிதானமாக பேசுவதன் மூலம் அமைதி உண்டாகும். சகோதரர்கள் மூலம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்.

**சிங்கம்**:எந்த ஒரு காரியத்திலும் தயக்கம் இல்லாமல் ஈடுபடுவீர்கள். நீண்ட நாள்களாக இருந்து வந்த பிரச்சினைகள் முடிவுக்கு வரும். முக்கியஸ்தர்கள் நட்பு கிடைக்கும். புதிய தொடர்புகள் மூலம் மகிழ்ச்சி உண்டாகும்.

**கன்னி**: தொழில் வியாபாரத்தில் இருந்து வந்த தடைகள் நீங்கி முன்னேற்றம் காணப்படும். வாடிக்கையாளர்களிடம் சாதுரியமாகப் பேசுவதன் மூலம் வளர்ச்சி காண முடியும்.

**துலாம்**: குடும்ப அங்கத்தவர்களை அனுசரித்துச் செல்வதால் நன்மை ஏற்படும். பிள்ளைகளுக்கு தேவையானவற்றை வாங்கிக் கொடுப்பீர்கள். உறவினர்கள் வருகை இருக்கும். புதிய நபர்கள் மூலம் காரிய பலிதம் ஏற்படும். சுபகாரிய நிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள்.

**விருச்சிகம்**: சாமர்த்தியமான பேச்சின் மூலம் எதையும் சாதிப்பீர்கள். உத்தியோகத்தில் உயர்வுக்கான முயற்சிகள் சாதகமான பயன் தரும். எந்த ஒரு சின்ன வேலையைச் செய்து முடிக்க கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும்.

**தனுசு**: எதையும் செய்து முடிக்கும் துணிச்சல் உண்டாகும். போட்டிகள் இருந்தாலும் அவற்றால் பாதிப்பு இருக்காது. எதிலும் முன்னெச்சரிக்கையாகச் செயற்படுவது நல்லது.

**மகரம்**: மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். எதையும் செய்து முடிக்கும் மனோதைரியம் உண்டாகும். வழக்கத்தை விட கூடுதலாக செலவு செய்ய நேரிடும். பணவரத்து தாமதப்படலாம். கலைத்துறையினருக்கு வருமானம் அதிகமாகும்.

**கும்பம்**: மனதில் தேவையற்ற எண்ணங்கள் தோன்றும். எவ்வளவுதான் திறமையாகச் செயலாற்றினாலும் மற்றவர்களிடம் இருந்து பாராட்டுக் கிடைப்பது அரிது. தொழில் வியாபாரம் சுமாராக நடக்கும்.

**மீனம்**:உத்தியோகத்தில் இருப்பவர்கள் எந்த ஒரு வேலையையும் அதிக அலைச்சலுக்கு பின்னரே செய்து முடிக்க முடியும். சக பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைப்பது தடைப்படும். மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது.

## நாளை

**வைகாசி-07 புதன்கிழமை | 21.05.2014**

திதி: ஸப்தமி மு.ப.10.46 வரை
நட்சத்திரம்: அவிட்டம் மு.இ.09.55 வரை

சுபநேரம்: 04.22-05.52 வரை
இராகுகாலம்: 11.52-01.22 வரை


# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## வேதாந்தம் நாகரிகத்தின் ஒரு பகுதி

பொருள்களின் தூலமான வெளித்தன்மையை மட்டுமே பார்க்கும் இயல்புடையவர்கள்: இந்தியாவில் பிறரால் வெல்லப்பட்டு துக்கப்படும் அடிமைகளையும், கனவு காண்பவர்களையும் வறட்டு வேதாந்திகளையுமே காண முடியும். ஆனால் ஆன்மிக உலகைப் பொறுத்தவரையில் இந்தியா உலகையே வென்று நிற்கிறது என்பதை உணர இவர்களால் இயலவே இயலாது. எப்போதும் வெளி உலக விவகாரங்களிலேயே மிகவும் சுறுசுறுப்பாக உழன்று கொண்டிருக்கும் மேலை நாட்டவரின் மனதுக்குக் கீழை நாட்டவரின் தியானமும் அகநோக்கும் நன்மையை அளிக்கும். அது போலவே கீழை நாட்டவரின் மனமும் வெளியுலகுடன் இன்றும் சற்று அதிகமான தொடர்பாலும் சுறுசுறுப்பாலும் நன்மை அடையும். பின் வரும் பிரச்சினை நம்முன் நிற்கிறது; பிறரால் துன்புறுத்தப்பட்டுத் துயரில் மூழ்கி நிற்கும் இந்துக்களும் யூதர்களும் (உலகின் பெரிய மதங்களெல்லாம் தோன்றுவதற்கும் காரணமான இரண்டு இனங்கள் இவர்கள்) இன்றும் அழியாமல் இருப்பதற்கும் இடையில் தோன்றிய வேறு பல சமுதாயங்கள் அழிந்து ஒழிந்து போனதற்கும் காரணமான சக்தி எது? இந்தக் காரணம் ஆன்மிக சக்தியாகத்தான் இருக்க முடியும். இந்துக்கள் இன்றும் வாழ்கிறார்கள்; யூதர்களும் விளம்பரம் எதுவும் இல்லாமல் அமைதியாகப் பலஸ்தீனத்தில் வாழ்ந்த அந்த நாளை விட இன்று பலராகப் பெருகியிருக்கிறார்கள். நாகரிகம் மிக்க உலகம் முழுவதிலும் இந்து வேதாந்தம் இன்று உள் நுழைந்து அந்த நாட்டு மக்களின் எண்ணங்களைச் சீர்திருத்திக் கொண்டும் மனதின் அடித்தளத்தில் புகுந்தும் பரவி வருகிறது. இப்படியே பழங்காலத்திலும் மக்கள் ஐரோப்பாவை அறியும் முன்னரே இந்திய வியாபாரம் ஆபிரிக்க கடற்கரைகளிளெல்லாம் பரவியிருந்தது. பிறநாடுகளுடன் இவர்கள் தொடர்பு வைத்திருந்தார்கள். இந்தியர்கள் தங்கள் நாட்டை விட்டு வெளியே செல்லவே மாட்டார்கள் என்ற நம்பிக்கையை இந்தச் செயல்கள் பொய்யாக்கிவிட்டன.

# வியாழன் கிரகத்தில் மாயமாகி செல்கிறது மர்மப்புள்ளி



வியாழன் கிரகத்தில் காணப்படும் சிவப்பு புள்ளி சுருங்கி மாயமடைவதாக நாசாவின் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

சூரிய குடும்பத்தில் மிகப் பெரிய கிரகமான வியாழனில் காணப்படும் கிரேட் ரெட் ஸ்பாட் எனப்படும் பெரிய சிவப்பு புள்ளியானது சுருங்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

ஆனால் இதற்கான காரணம் இன்னும் ஒருவராலும் சரிவர கூற முடியவில்லை.

கடந்த 1800 ஆம் ஆண்டில் 41 ஆயிரம் கி.மீ. அகலத்துடன் முட்டை வடிவத்தில் இருந்த இந்த சிவப்பு புள்ளி, தற்போது வட்ட வடிவில் 16,500 கி.மீ. அளவைக் கொண்டுள்ளது. மேலும் வருடத்துக்கு 933 கி.மீற்றர் என்ற அளவில் அந்த புள்ளி சுருங்கி வருவதாகக் கூறப்படுகிறது.

இதுகுறித்து பெர்க்லியில் உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானி மைக்கேல் வாங் கூறுகையில், இந்த புள்ளி ஒரு மர்மமானது.

இது ஏன் சிவப்பு நிறமாக இருக்கிறது அல்லது சுருங்கி வருகிறது என விண்வெளி வீரர்களுக்குத் தெரியாது. அடுத்த என்ன நடக்கும் என்பதும் அவர்களுக்குத் தெரியாது என்று கூறியுள்ளனர்.

இந்த வேகத்தில் நீடித்தால் 17 வருடங்களில் இந்த புள்ளி முற்றிலும் மறைந்து விடும் அல்லது ஒரு சிறிய அளவில் நின்று விடும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலினும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | 1 | | | 6 | 5 | | 3 |
| | 3 | 5 | 7 | | 4 | 1 | | |
| | 9 | | 5 | 1 | | | 2 | |
| 3 | 8 | 7 | | | | | | |
| 1 | | | | | | | | 5 |
| | | | | | | 6 | 3 | 2 |
| | 4 | | | 6 | 1 | | 7 | |
| | | 3 | 8 | | 5 | 4 | 6 | |
| 9 | | 6 | 4 | | | 2 | | 8 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 7 | 4 | 9 | 5 | 2 | 6 | 3 | 8 |
| 6 | 5 | 2 | 3 | 8 | 1 | 9 | 4 | 7 |
| 3 | 9 | 8 | 6 | 7 | 4 | 2 | 1 | 5 |
| 8 | 2 | 7 | 1 | 9 | 6 | 3 | 5 | 4 |
| 9 | 3 | 5 | 8 | 4 | 7 | 1 | 2 | 6 |
| 4 | 6 | 1 | 5 | 2 | 3 | 8 | 7 | 9 |
| 2 | 1 | 9 | 7 | 6 | 5 | 4 | 8 | 3 |
| 7 | 4 | 6 | 2 | 3 | 8 | 5 | 9 | 1 |
| 5 | 8 | 3 | 4 | 1 | 9 | 7 | 6 | 2 |







# கொமர்ஷல் வங்கி முதலாம் காலாண்டின் வரிக்குமுந்திய இலாபம் 3.291 பில்லியன்

வரையறுக்கப்பட்ட கொமர்ஷல் வங்கி நிறுவனம் 2014 இன் முதலாவது காலாண்டை அவதானத்துடன் ஆரம்பித்துள்ளது. மேலதிக திரவத் தன்மை, கடன்களுக்கான குறைந்த கேள்வி மற்றும் ஒடுங்கி வரும் எல்லைகள் என்பனவற்றை மீறி இந்த நிலை எட்டப்பட்டுள்ளது.

2014 மார்ச் 31ல் முடிவடைந்த முதலாவது காலாண்டில் பெறுமதிசேர்வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி ஆகிய வரிகளுக்கு முந்திய செயற்படு இலாபமாக வங்கி 3.897 பில்லியன் ரூபாய்களை ஈட்டியுள்ளது. 2013 முதல் காலாண்டைவிட இது 4.73% அதிக வளர்ச்சியைக் காட்டுகின்றது.

பெறுமதிசேர்வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி ஆகியவரிகளுக்கு பிந்திய செயற்படு இலாபம் 1.88% அதிகரிப்புடன் 3.291 பில்லியன்களாக உள்ளது.

மீளாய்வுக்கு உட்பட்ட காலாண்டில் வங்கியின் வரிக்குப் பிந்திய இலாபம் 1.68% ஆல் அதிகரித்து 2.279 பில்லியன் ரூபாய்களாக உள்ளது. மொத்த வருமானம் 17.760 பில்லியன்களாகும்.



இந்தப் பெறுபேறுகள் பற்றி குறிப்பிட்ட வங்கியின் தலைவர் திணேஷ் வீரக்கொடி இந்தக் காலாண்டில் வங்கிசவால்கள் மிக்க சூழலிலும் மிகச் சிறப்பாக செயல்பட்டுள்ளது. எமது செயற் பாடுகளின் அளவுகளில் நாம் தொடர்ந்து வளர்ச்சி கண்டுவருவதோடு எமது முக்கிய செயற்பாட்டு குறிகாட்டிகளையும் ஸ்திரப்படுத்திவருகின்றோம். நாம் இரண்டாவது காலாண்டுக்கு நகரும் இச்சந்தர்ப்பத்தில் நீண்டகாலமாக ஸ்திரமான வருமானத்தைக் கொண்டுள்ள எமது முக்கிய பிரிவுகளிலும் நாம் வளர்ச்சியை எதிர்பார்த் துள்ளோம். அத்தோடு எமது மூலோபாய முன்னுரிமைகளையும் நாம் தொடர்ந்து நிறைவேற்றி வருவோம் என்று கூறினார்.

கொமர்ஷல் வங்கி முகாமைத்துவப் பணிப்பாளர் ரவி டயஸ் இது பற்றிக் குறிப்படுகையில் ஒடுங் கிவரும் எல்லைகளையும் கடந்து வட்டிகளை ஈட்டித் தரும் சொத்துக்களின் அதிகரிப்பு மற்றும் சொத்துக்கள். பொறுப்புக்கள் மீதான காலத்துக்கு ஏற்ற மீளவிலையிடல் என்பனவற்றின் மூலம் வட்டி வருமானத்தில் ஆரோக்கியமான வளர்ச்சியை குறிப்பிட்ட காலப்பகுதியில் வங்கி பதிவு செய்துள்ளது என்றார். குறிப்பிட்ட காலாண்டில் வர்த்தக மற்றும் நிதி முதலீடுகள் மூலமும் வங்கிவருமானத்தை ஈட்டியுள்ளது. செலவுகளின் வளர்ச்சியையும் பத்துவீதத்தால் மட்டுப் படுத்தியுள்ளது. வைப்புக்களின் வளர்ச் சியிலும் கணிசமான அதிகரிப்பு பேணப்பட் டுள்ளது. இது மாதாந்தம் சராசரி ஐந்து பில்லியன்களாக உள்ளது.

இந்த மூன்று மாதத்தில் வங்கியின் தேறிய வட்டிவருமானம் 17.07% மாக அதிகரித்து 6.571 பில்லியன்களாக உள்ளது. நிதி முதலீடுகள் மீதான வர்த்தகத்தின் மூலமான தேறிய வருமானம் 377 மில்லியன் ரூபாவை அதிகமாகப் பதிவுசெய்து 123 மில்லியன் ரூபாவால் அதிகரித்துள்ளது. தேறியகட்டணங்கள் மற்றும் தரகுகள் வருமானம் 15.24% த்தால் அதிகரித்து 1.047 பில்லியன்களாக உள்ளது. எவ்வாறாயினும் மீள் வருமானங்கள் மற்றும் வெளிநாட்டு நாணயமாற்று என்பனவற்றை உள்ளடக்கிய ஏனைய வருமானங்கள் 39.74% த்தால் குறைந்து 679 மில்லியன்களாக உள்ளது. மீளாய்வுக்குஉட்பட்ட காலப்பகுதியில் நாணய மாற்று இலாபத்தின் குறைவே இதற்கு பிரதான காரணமாகும். தேறிய வட்டிவருமானம், தேறிய கட்டணங் கள் மற்றும் தரகுகள், ஏனைய வருமானங்கள் என்பனவற்றை உள்ளடக் கிய மொத்தசெயற்படுவருமானம் 8.895 பில்லியன்களாகும். குறிப்பிட்ட காலாண்டில் இது 14.84% வளர்ச்சியைக் காட்டிநிற்கின்றது. (கு)

# உடல், உள விருத்திக்கு சமபோஷ

குழந்தைகளின் உடல் மற்றும் உள விருத்திக்கு அவசியமான சோளம், அரிசி, பயறு, சோயா போன்ற தானியங்களின் குணநலன்களை சமபோஷ வழங்குகிறது.

குழந்தையானது தன் நாளாந்த செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு தேவையான சக்தியை பெறுவதற்கு சில போசாக்கான உணவுகளை உட்கொள்ளுதல் வேண்டும். இதற்கு எமது நாளாந்த உணவில் காபோவைதரேட்டு, புரதம், கல்சியம், விற்றமின்கள் மற்றும் கனியுப்புக்கள் உள்ளடங்கியிருத்தல் வேண்டும். இந்த ஊட்டச்சத்துக்களை பெறும் நோக்கிலேயே எமது நாளாந்த உணவு வேளையில் சோறு, மீன், இறைச்சி, பால், முட்டை, காய்கறிகள் மற்றும் கீரை வகைகளை சேர்த்துக் கொள்கின்றோம்.

தற்போதைய பரபரப்பான வாழ்க்கை முறையில் சமபல போசாக்கு நிறைந்த உணவினை தயாரிப்பது என்பது சில பெற்றோருக்கு முடியாத காரியமாகும். சில சந்தர்ப்பங்களில் குழந்தைகள் சில உணவு வகைகளை தவிர்ப்பதால் சரியான போசாக்கு கிடைக்காமல் போகிறது.

மேலும் சில உணவுகளில் காலகாலத்தில் ஏற்படும் சில பிரச்சினைகளால் பெற்றோர்கள் தங்கள் குழந்தையின் போசாக்குத் தேவையை பூர்த்தி செய்வதற்கு 'சில மாற்று உணவுகளை தேட வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

இந்த பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வினை சமபோஷ வழங்குகிறது.

எமது நாளாந்த உணவில் சேர்த்துக்கொள்ளும் இறைச்சி, மீன், பால், முட்டை போன்ற ஆகாரங்களுடன் ஒப்பிடுகையில், சமபோஷவில் அதிகப்படியான கலோரி அடங்கியுள்ளது என ஆராய்ச்சிகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் கீழ் இயங்கும் தொழிற்துறை நிலைய அறிக்கையின் படி இறைச்சி 50 (கி), மீன் 50(கி), பால் குவளையொன்று, முட்டை ஒன்று ஆகியவற்றுடன் ஒப்பிடுகையில், சமபோஷ 50 கிராம் பக்கற்றில் 198கி.கிராம் சக்தி உள்ளடங்கியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

50 கிராம் சமபோஷ தயாரிப்பில், புரதம்(கி) 9.8, கொழுப்பு(கி) 3.4, காபோவைதரேற்று(கி) 32.2, ஃபைபர்(கி) 0.8, கல்சியம்(கி) 60.0, மற்றும் இரும்பு(கி) 1.5 உள்ளடக்கப்பட்டுள்ளன. காலத்திற்கேற்ப மாற்றமடையும் வாழ்க்கை முறையுடன் உட்கொள்வதை குறைத்துக்கொண்ட தானிய வகைகளை மீளவும் உணவில் சேர்த்து கொள்வதை ஊக்கப்படுத்தும் வகையில், கடந்த 1998ஆம் ஆண்டு சமபோஷ அறிமுகம் செய்யப்பட்டது. சோளம், அரிசி, சோயா மற்றும் பயறு போன்ற தானிய வகைகளின் போசாக்குடன் 9 விற்றமின் மற்றும் கனியுப்புகள் கொண்ட ஊட்டச்சத்து ஆகாரமாக சமபோஷ விளங்குகிறது. சுமார் 8000 இற்கும் மேற்பட்ட தேசிய விவசாயிகளிடமிருந்து பெறப்படும் 100% ஆன இயற்கை தானியங்களின் போசாக்கு பாதுகாக்கப்படும் வகையில் சமபோஷ உற்பத்தி செய்யப்படுகிறது. (கு)

# எடிசலாட் முன்னெடுத்த விசேட திட்டம்

முன்னணி தொலைத்தொடர்பாடல் சேவைகளை வழங்கும் எடிசலாட் லங்கா, தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவு செய்திருந்த சாதனையை முன்னிட்டு, அங்குலான பிரதேசத்தைச் சேர்ந்த பின்தங்கிய பாடசாலையின் நூலகத்தை மறுசீரமைத்து வழங்கியிருந்தது.

தனது உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தில் 200,000 ரசிகர்களை கடந்திருந்தமையை நினைவுபடுத்தும் வகையில், தமது பேஸ்புக் பக்க ரசிகர்களிடமிருந்து இந்த சாதனையை குறிக்கும் வகையிலான சமூக பொறுப்புணர்வு செயற்திட்டமொன்றை பரிந்துரைக்குமாறு எடிசலாட் கோரியிருந்தது. இதற்கமைவாக தமது பேஸ்புக் பக்கத்தில் கிடைக்கும் ஒவ்வொரு லைக்கும் தலா 1 ரூபா வீதம் மொத்தமாக 200,000 ரூபாவை வழங்க எடிசலாட் முன்வந்திருந்தது. 11 நாட்களுள் சுமார் 30க்கும் அதிகமான பரிந்துரைகள் கிடைந்திருந்ததுடன், நூற்றுக்கும் மேற்பட்ட ரசிகர்கள் இது குறித்து தமது கருத்துக்களையும் பகிர்ந்திருந்தனர். இவ்வாறு கிடைத்திருந்த பரிந்துரைகளிலிருந்து 10 திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தன. இதிலிருந்து அங்குலான பாடசாலை நூலக திட்டம் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

இந்த திட்டத்தை எஸ்.ஏ.எல்.ரி எனும் அமைப்பின் முகாமைத்துவ பணிப்பாளரும் தாபகருமான ஷவீன் பெர்னான்டோ பரிந்துரை செய்திருந்தார். மொரட்டுவ, அங்குலான பகுதியை சேர்ந்த பொது ஜயா பாடசாலையின் நூலகத்தை மறுசீரமைப்பு செய்யலாமென பரிந்துரை வழங்கியிருந்தார். 1981 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்ட பொது ஜயா பாடசாலையில் தற்போது 350 மாணவர்கள் வரை கல்வி பயில்கின்றனர். தரம் 1 முதல் 11 வரை இந்த பாடசாலையில் வகுப்புகள் காணப்படுகின்றன. த)

# சுற்றுச்சூழல் விருதுகளை வென்றது கொகா-கோலா




இயற்கையை பாதுகாத்தல் குறித்து அர்ப்பணிப்புடன் செயலாற்றும் கொகா-கோலா ஸ்ரீலங்காவின் முனைப்பானது, தேசிய தூய்மை உற்பத்தி மையத்தினால் அங்கீகாரமளிக்கப்பட்டுள்ளது.

சிறந்த தூய்மையான உற்பத்தி நடைமுறைகளைக் கைக்கொள்ளுதல் மற்றும் செயற்திறனுள்ள வகையில் வளங்களை முகாமை செய்தல் போன்ற நடவடிக்கைகளுக்காகவே இந்நிறுவனத்திற்கு உன்னத கௌரவ விருதுகள் நான்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அதற்கமைய கொகா-கோலா ஸ்ரீலங்கா, தேசிய தூய்மை உற்பத்தி மையத்தினால் அண்மையில் கொழும்பில் நடத்தப்பட்ட நிகழ்வில் வைத்து, கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் ரிஷாட் பதியுதீன் அவர்களிடமிருந்து வள செயற்திறன் மற்றும் தூய்மையான உற்பத்தி நடைமுறைகளில் மேன்மை நிலையை வெளிப்படுத்தியமைக்காக பெரியளவான உற்பத்தி பிரிவின் கீழ் வெள்ளி விருதினைப் பெற்றுக்கொண்டது.

அது மாத்திரமல்லாமல், சக்தி சேமிப்பு பிரிவில் மிகுந்த செயற்திறனைக் காட்டியமைக்காக உன்னத விருதினையும், நீர்வளப் பாதுகாப்புக்கான உன்னத விருதினையும், பொருட் சேமிப்பு செயற்திறனில் தூய்மையான உற்பத்திச் சாதனைகளை புரிந்தமைக் கான மெரிட் சான்றிதழையும் நிறுவனம் பெற்றுக்கொண்டமை முக்கியத்துவமானதாகும்.


தேசிய தூய்மை உற்பத்தி மையமானது, 2002ஆம் ஆண்டு அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனமாகும். இந்நிறுவனமானது, சுற்றுச்சூழலுக்கு குறைந்தளவான பாதிப்பினை ஏற்படுத்தும் வகையில் தொழில் நிறுவனங்கள் வினைத்திறனுடன் செயற்படுதலை ஊக்குவிக்கும் ஸ்தாபனமாகும். வள சேமிப்பு செயற்திறன் மற்றும் தூய்மையான உற்பத்தி எனவும் அறியப்படும் தூய்மையான உற்பத்தி ஆகியன, குறித்த இந்த இலக்கை அடையும் வகையில் தொழிற்துறைகளுக்கு உறுதுணையாக விளங்குகின்றது.

தேசிய தூய்மை உற்பத்தி விருதுகளாவன, நிறுவனங்கள் சுற்றுச்சூழல் செயற்திறன் மற்றும் வள உற்பத்தித்திறன் ஆகியவற்றில் மேன்ஷ்மையான செயற்பாடுகளை வெளிப்படுத்துவதுடன், தூய்மையான உற்பத்தி தொழினுட்பங்களை ஏனைய நிறுவனங் களும் கைக்கொள்வதற்கான ஊக்குவிப்பை அளிக்கும் நிறுவனங் களுக்கு வழங்கப்படுகின்றது. (கு)

தாவடியில்
T துர்க்கா கிளினிக்
யா/போதனா வைத்தியசாலையின்
வைத்தியரின் சேவையில் (MBBS)
காலம் : 4.30 பி.ப. - 7.30 பி.ப வரை
தொடர்பு : 076 637 0988
தாவடி வடக்கு,
கொக்குவில்.

## மரண அறிவித்தல்

### பொன்னுத்துரை பாலிதராஜா



யாழ்.மணிக்கூட்டு வீதியைப் பிறப்பிடமாகவும், சுவிஸ் Biel Bienne ஐ வதிவிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை பாலிதராஜா 17.05.2014 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை-ரேவதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான கந்தசாமி- அம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும், மனோரஞ்சிதத்தின் அன்புக் கணவரும், புவனேஸ்வரி, காலஞ்சென்ற இராமலிங்கம், நாகபூசணி, சந்தானலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற நாகேந்திரன், பாக்கியராஜா, ஸ்ரீகணேசராஜா, சிவராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.05.2014) செவ்வாய்க்கிழமை மு.ப.11.00 மணியளவில் சுவிற்ஸர்லாந்து நகரில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாகபூசணி-பாக்கியராஜா
96, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
071 627 5103/021 222 6849
Swiss - 410323412533
(சி/14342)

## நவாலி கதிர்காம முருகன் ஆலய குரு அம்மா தினம்

யாழ்ப்பாணம், மே 20

வரலாற்று பிரசித்தி பெற்ற நவாலி ஸ்ரீகதிர்காம முருகன் ஆலயத்தின் "குருஅம்மா தினம்" எதிர்வரும் 24 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது.

ஸ்ரீகதிர்காம முருகன் ஆலய தலைவர் தலைமையில் 32 ஆவது ஆண்டு குரு அம்மா தினம் விசேட பூசை வழிபாடு, அன்னதானம், பஜனை வழிபாடுகளுடன் ஆரம்பமாகவுள்ளது.

ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ மா.பத்மநாதன் விசேட பூசை வழிபாட்டை மேற்கொள்ளவுள்ளார். அன்றைய தினம் யாழ்.குடாநாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் இருந்து மக்கள் நவாலி ஸ்ரீகதிர்காம முருகன் ஆலயத்துக்கு வருகை தரவுள்ளனர். வெளிமாவட்டங்களில் இருந்து வரும் பக்தர்களுக்கு தங்குமிட வசதிகளும் செய்து கொடுக்கப்படவுள்ளன. (வ-50)

**தேவை**
பிரபல்ய ஹோட்டலுக்கு சுத்திகரிப்பாளர் உடன் தேவை. நேரில் வரவும். (48174)(18.6.3)
369, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

**வீடு வாடகைக்குண்டு**
முதலாம் குறுக்குத்தெரு சந்தி சப்பல் வீதியில் பொது நூலகம், நீதிமன்றத்துக்கு அருகில் பெரிய விசாலமான வீடு வாடகைக்குண்டு.
வியாபார, அலுவலகத்துக்கு உகந்தது.
தொடர்பு: 021 222 6358 (48248) (4.6.3)

**மீட்கப்படாத தங்க ஆபரணங்களின் ஏல விற்பனை**
பான் ஏஷியா வங்கியின் அனைத்துக் கிளைகளிலும் அடகு மற்றும் ஈடு வைக்கப்பட்டவையும் 15.03.2014 ஆம் திகதி அல்லது அதற்கு முன் மீட்கப்பட வேண்டியவையும் ஆனால் 30.05.2014 ஆம் திகதி வரை மீட்கப்படாமலிருப்பவையுமான அனைத்துத் தங்க ஆபரணங்களும் 07.06.2014ஆம் திகதி தொடக்கம் (அனைத்து ஆபரணங்களும் முடிவடையும் வரை) மு.ப. 9.00 மணிக்கு பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்படும்.
யாழ்ப்பாணக் கிளை
570, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
ஏலவிற்பனையை பிற்போடும் மற்றும் இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்குண்டு.
பான் ஏஷியா வங்கி
அடகுப் பிரிவுத் தலைவர்
450, காலி வீதி, கொழும்பு - 03.

## வறட்சி நிவாரணம் வழங்குமாறு ஐயன்கன்குளம் மக்கள் கோரிக்கை

துணுக்காய், மே 20

துணுக்காய் ஐயன்கன்குளம் கிராம மக்கள் தமக்கு. வறட்சி நிவாரணம் வழங்க வேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சுமார் 200 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ள இந்தக் கிராமத்தில் தொழில் வாய்ப்புக்கள் எதுவுமில்லாது தாம் வாழ்வதாகவும், குளத்தில் நீரில்லாததால் சிறுபோக நெற்செய்கை இடம்பெறவில்லை எனவும் இவர்கள் தெரிவிக்கின்றனர். வறுமையான நிலையில் இங்குள்ள பல குடும்பங்கள் உள்ளதால் தமக்கு வறட்சி நிவாரணம் வழங்குமாறு இவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-18)

## வாய்த்தர்க்கம் மோதலாகியது இளைஞனுக்கு தலையில் காயம்

அளவெட்டி, மே 20

ஏழாலை மத்தியைச் சேர்ந்த இளைஞர்கள் விளையாட்டு மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த போது ஏற்பட்ட கருத்து முரண்பாடு அடிதடியில் முடிவடைந்தது.

இதில் ஏழாலை மத்தியைச் சேர்ந்த இளமாறன் கனோஜன் (வயது-19) என்பவர் நண்பர்களால் தடியால் தாக்கப்பட்டு தலையில் காயமடைந்ததால் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை காலை 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை நேற்றுக்காலை கே.கே.எஸ். வீதியில் தாவடிச் சந்திக்கு அண்மித்ததாக மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது வேகமாக ஓடி வந்த நாய் மோட்டார் சைக்கிளில் மோதியதால் நிலை தடுமாறிக் கீழே விழுந்தவரான முத்துக்குமாரு சுபசிறி (வயது-47) படுகாயமடைந்தார்.

டச்சு வீதி உடுவிலைச் சேர்ந்த அவர் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (வ-36)

## ப.நோ.கூ.ச. ஊழியர் தொழி.சங்க நிர்வாகிகள் தெரிவு

அச்சுவேலி, மே 20

வலி.கிழக்கு வட பகுதி (அச்சுவேலி) பல நோக்கு கூட்டுறவுச் சங்க ஊழியர் தொழிற் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

ஊழியர் தொழிற்சங்கத்தின் புதுவருட நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டோர் விவரம் வருமாறு:-

தலைவராக சீ.கிருஷ்ணராசா, உப தலைவராக ச.கிருபாகரன், செயலாளராக க.நிசாந்தன், உப செயலாளராக பா.வாகீசன், பொருளாளராக இ.ரவீந்திரன் ஆகியோருடன் ஆறு பேர் கொண்ட நிர்வா கக்குழுவினரும் தெரிவு செய்யப்பட்டனர். (வ-11)

## தாக்குதலுக்குள்ளான ஆண், பெண் சாவகச்சேரி மருத்துவமனையில்

தென்மராட்சி, மே 20

இனந்தெரியாதோரால் தாக்கப்பட்ட ஆண் ஒருவரும், தாக்கப்பட்டதால் கையில் பாதிப்பு ஏற்பட்ட இளம் குடும்பப் பெண் ஒருவரும் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தாவளை இயற்றாலைப் பகுதியில் நடந்து சென்ற கிருஷ்ணன் கபில்தேவ் (வயது-31) என்பவனே வழிமறித்த சிலர் தாக்கிவிட்டு தப்பியோடியுள்ளனர்.

இதேவேளை நாவற்குழி 300 வீட்டுத் திட்டப் பகுதியில் கணவனால் தாக்கப்பட்டதில் இடது கையில் பாதிப்பு ஏற்பட்ட டினேஸ் யாழினி (வயது- 19) என்பவரும் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மருத்துவமனைப் பொலிஸார் இது குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-9)

**ஒத்துமாறல்**
யாழ்ப்பாணம், மத்திய அரச திணைக் களத்தில் தரம் - II இல் PMA ஆக பணிபுரியும் உத்தியோகத்தர், பிறிதொரு யாழ் அரச திணைக் களத்தில் ஒத்துமாற விரும்புகிறார்.
தொடர்பு: 077 868 9560 (48179) (10.6.3)

**வாடகைக்கு**
2 ஆம் குறுக்குத்தெரு சந்தியில் சப்பல் வீதியில் வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 021 222 6358 (48249) (4.6.3)

## மரண அறிவித்தல்

### திருமதி தனலெட்சுமி (ராணி) தில்லைநாதன்



இணுவிலைப் பிறப்பிடமாகவும், நாவலப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தனலெட்சுமி தில்லைநாதன் 17.05.2014 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் தில்லைநாதன் (தனலெட்சுமி ஸ்ரோர் நாவலப்பிட்டி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அம்பலாவாணர் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான வேதவனம் - மதியாபரணம் (இராசாத்தி) தம்பதியரின் பெறாமகளும், சண்முகவதனி கிருஸ்ணகுமார் (ஆசிரியர், குப்பிளான் விக்கினேஸ்வரா வித்தியாலயம்), திருப்பதிநாதன் (Tilko Hotel, Jaffna), ஜெகநாதன் (Citi Bank, Canada) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கிருஸ்ணகுமார் (சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலகம், பிரதேச செயலகம், உடுவில்), சிவசக்தி திருப்பதிநாதன் (அபிவிருத்தி உத்தியோகஸ்தர், பிரதேசசெயலகம், பூநகரி), றொசானி ஜெகநாதன் (AAPS Pharmacology, Canada) ஆகியோரின் அன்பு மாமியும், சங்காரணி, கோலமயிலோன், பரிதிவாரணன், கஜனன், தக்சன்யா, தக்ஷியா ஆகியோரின் பேர்த்தியும், குகதாசன் (ஓய்வுபெற்ற பிராந்திய முகாமையாளர், மக்கள்வங்கி), சண்முகலிங்கம் (ஆசிரியர், யாழ் இந்துக்கல்லூரி), பரமேஸ்வரி (பிரான்ஸ்), சோதிலிங்கம் (ஜேர்மனி), சொர்ணலிங்கம் (ஆசிரியர், மல்வத்தை றோ.க.த.க. பாடசாலை, உடுவில்), கணேசதாசன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கமலநாதன், அமிர்தாம்பிகை, அமிர்தகௌரி (சுவிஸ்), சிவசிதம்பரம் (அதிபர், கோண்டாவில் C.C.T.M School) ஸ்ரீரங்கநாதன் (சுவிஸ்), சண்முகமலர், செல்வரதி, சுந்தரேஸ்வரன் (பிரான்ஸ்), சிவதர்ஷினி (ஜேர்மனி), யசோதா (ஆசிரியர், சுன்னாகம் இராமநாதன் கல்லூரி),சிவதர்ஷினி (கனடா), திருநாவுக்கரசு (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனியும், இராசேஸ்வரி, ரேவதி (ஆசிரியர், கோண்டாவில் இந்துமகா வித்தியாலயம்), ரஞ்சலா (சுவிஸ்) ஆகியோரின் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.05.2014) புதன்கிழமை மு.ப.10 மணியளவில் அவரது இணுவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இணுவில் காரைக்கால் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
தில்லைநாதன் - 94778607718
சண்முகவதனி - 94774802994
திருப்பதிநாதன் - 94774192813
ஜெகநாதன் - 0016478752940

(48251) (12.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் முத்துச்சாமி பத்மநாதன்



(முன்னாள் உரிமையாளர்-
றிக்கோ ஹோட்டல்,
யாழ்ப்பாணம்)

தவப்பேறு
05★04★1945

சிவப்பேறு
20★05★2004

அன்னை மடியில் பிறந்து அன்பின்
அரவணைப்பில் வளர்ந்து
உழைப்பின் சிகரமாய் உயர்ந்து
கடமையின் எல்லையில் நின்று-
உடன் பிறந்தாரைக் கண்ணியமாய் கரைசேர்த்து-வைரவரின்
திருப்பணிக்காய்ப் பாடுபட்டு-ஆலய
உருவாக்கலில் வெற்றிக்கண்டு-தனக்கென்று
செந்தாமரைபோல் செல்வமாளிகை அமைத்து
இன்பமெல்லாம் கண்டு களித்திருந்து
இன்னும் பல ஆண்டுகள் வாழ நினைத்திருக்கையில்
நோய் என்னும் சதியால் விதிக்கு
கட்டுப்பட்டு எம்மை விட்டுச் சென்று விட்டீரே!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

விதானையார் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் (48176)(6.4.3)

உம் ஆத்மசாந்திக்காய் பிரார்த்திக்கும்
முத்துச்சாமி குடும்பம் (திருமேனி)

# வடக்கு மாகாண சபை மிகப் பலவீனமானது

கொழும்பு, மே 20
வடக்கு மாகாண சபை மிகப் பலவீனமானது என்று தெரிவித்துள்ளார் இலங்கை இராணுவத்தின் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா.
சண்டே லீடர் பத்திரிகைக்கு அவர் அளித்துள்ள செவ்வியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
வடக்கு மாகாண சபையில் எந்த தொரு புதிய திட்டத்தையும் செயற்படுத்தவில்லை. அவர்களிடம் பலயோசனைகள் இருக்கின்றன. ஆனால் அவற்றை நடைமுறைப்படுத்த அவர்களால் முடியவில்லை. அவர்களுக்கு அபிவிருத்தி மீது கவனக்குவிப்பு இல்லை. பதிலாக அரசை விமர்சிப்பதிலும் குறிப்பாக இராணுவத்தினரை விமர்சிப்பதிலும்தான் அவர்களது கவனம் குவிந்துள்ளது.
அரசிடம், இராணுவத்தினரிடம் கூட வளங்கள் குவிந்து கிடக்கின்றன. விமர்சிப்பதற்குப் பதிலாக இந்த வளங்களை அவர்கள் பயன்படுத்திக்கொள்வதற்கு வழிகளைத் தேட வேண்டும். அதை அவர்கள் செய்தால் நல்லிணக்கம், மீள் கட்டுமானம் மற்றும் ஒட்டுமொத்த அபிவிருத்தி என்பன ஏற்படும். துரதிர்ஷ்டவசமாக அது நடக்கவில்லை.

**புலிகளின் மீளெழுச்சி அச்சுறுத்தல்**

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீள் உருவாக்கம் என்ற அச்சுறுத்தல் உள்ளூரில் இருந்து வந்ததல்ல. அது வெளிநாடுகளில் இருந்து வந்தது. யாழ்ப்பாணத்தில் உள்ள மக்கள், அவர்கள் புலிகளை ஆதரிப்பவர்களாக இருந்தாலும் சரி ஆதரிக்காதவர்களாக இருந்தாலும் சரி மீண்டும் ஒரு போர் ஏற்படுவதை விரும்புவார்கள் என்று நான் நினைக்க வில்லை. அவர்கள் போதுமான அளவுக்கு துன்பங்களை அனுபவித்து விட்டார்கள். அவர்கள்தான் மிக மோசமாக பாதிக்கப்பட்டவர்களும்கூட. அவர்கள் எல்லாவற்றையும் இழந்திருக்கிறார்கள். இப்போது மீளெழுச்சி பெற்று வருகின்றனர்.
எப்படியிருந்தாலும் முரண்பாடுகள் தொடரவேண்டும் என சில அரசியல் வாதிகள் விரும்புகின்றனர். நான் எல்லாஅரசியல் வாதிகளையும் சொல்லவில்லை. ஏனென்றால் மீண்டும் ஒரு போர் ஏற்படவேண்டும் என்று எல்லோரும் விரும்புகிறார்கள் என்று சொல்ல முடியாது.
ஆனால் புலம்பெயர்ந்தவர்களிடம் இருந்து அதிக உதவிகளைப் பெற்று வந்தவர்கள் போர் முடிந்து போனதால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். அப்படிப்பட்ட சிலர் தான் போர் மீண்டும் ஏற்பட விரும்புகின்றனர். விடுதலைப் புலிகளின் கொடியை கைவிட்ட நாள் முதலாக அவர்களுக்கு பணவரவும் ஆதரவும் நின்றுவிட்டன. அதனால் தான் அவர்கள் கவலைப் படுகின்றார்கள்.
புலம்பெயர்ந்தவர்களிடம் இருந் து நிதி வருவதனால் சில கட்சிகளில் இருக்கும் சில கடும்போக்கு வாதிகள் புலிகள் வேண்டும் என நினைக்கின்றனர். இப்படி புலம்பெயர்ந்தவர்களிடம் இருந்து கிடைக்கும் பணத்தின் மூலம் சுகபோகங்களை அனுபவிப்பவர்கள் ஏழைகள் அல்லர். மாறாக இந்தப் பணத்தை தமது அரசியல் தேவைகளுக்கு பயன்படுத்துகின்றனர். சர்வதேச அளவில் உள்ள கடும்போக்கு வாதிகளும் புலி களின் மீள்உருவாக்கத்தை விரும்புகின்றனர். அவர்கள் தான் இங்கு பணத்தை அனுப்பு கின்றனர்.
மிகவறுமையில் உள்ளவர்களையே அவர்கள் இலக்கு வைக்கிறார்கள். கொஞ்சக் காசை விட்டெறிந்து மூளைச் சலவை செய்கிறார்கள். அவர்கள் செய்பவற்றை இந்த அப்பாவிகளும் உணர்வதில்லை. சில ஆயிரம் ரூபாக்களுக்காக அவர்கள் சொல்பவற்றைச் செய்கிறார்கள்; ஆனால் அவர்களுடைய சித்தாந்தங்களுக்கு துணைநிற்பதில்லை.
மீண்டும் போர் ஒன்று ஏற்பட்டால் புலம்பெயர் தேசத்தில் உள்ளவர்களது பிள்ளைகள் எவரும் துன்பப்படப்போவதில்லை. பாதிக்கப்படுபவர்கள் இங்குள்ள ஏழை அப்பாவிக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களே. அதனால் தான் இந்தப் பிரதேசத்தின் பாதுகாப்பில் நாம் அதிக கவனமாக இருக்கிறோம். அதற்காக அளவுக்கு அதிகமான எதையும் நாம் செய்யவில்லை. ஏமது நாளாந்த நடவடிக்கைகளையே செய்கிறோம். தேவையான அளவு படைகளின் எண்ணிக்கையையும் பேணி வருகின்றோம். இந்த மக்களின் பாதுகாப்புக்குத் தேவையான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றோம் - என்றார். (உ-ஐ)

## தபாலில் கடிதம் அனுப்புதல் மிக வீழ்ச்சி

கொழும்பு, மே 20
தபால் மூலம் கடிதங்கள் அனுப்பப்படுவது 90 வீதமாகக் குறைந்துள்ளது.
வர்த்தக நட வடிக் கைகள் தொடர்பான கடிதங்கள் சாதாரண கடிதங்களைப் பார்க்கினும் மூன்று வீதத் தால் அதிகரித்துள்ளன.
வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பான கடிதங்களுக்கு கூடுதல் கட்டணம் அறவிடப்படுவதால் வருமானமும் அதிகரித்துள்ளது.
கைபேசி பாவனை அதிகரித்தமை, மின் அஞ்சல் அதிகமாகப் பயன்படுத்தல் காரணமாகக் கடிதப் பாவனைகள் குறைவடைந்துள்ளன.
பரீட்சை விண்ணப்பங்கள், தொழில் விண்ணப்பங்கள் போன்ற கடமைப் பணிகளுக்காக மட்டும் தபால்கள் பயன்படுத்தப்படுகின்றன. (வ)

## ரியாத்தில் இலங்கைப் பெண் காயம்

கொழும்பு, மே 20
ரியாத்தில் சமையல் எரிவாயு கசிவு காரணமாக இலங்கைப் பெண் ஒருவர் பெரிய எரி காயங்களுக்கு உள்ளானார் என்று ரியாத் ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.
கொழும்பில் இருந்து 50 கிலோமீற்றருக்கு அப்பாலுள்ள அளுத்கமவைச் சேர்ந்த பாத்திமா ஷாபியா என்ற 38 வயதுப் பெண்ணே பாதிக்கப்பட்டவராவார்.
அவர், தற்போது அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல் மூலம் அறியவந்துள்ளது.
எனினும் இன்னும் ஐந்து நாள்களிலேயே அவருடைய உடல் நிலையில் முன்னேற்றங்கள் ஏற்படும் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.
வியாழக்கிழமை குறித்த பணிப்பெண் வேலைகளில் ஈடுபட்டிருந்தபோது எரிவாயு கசிவு ஏற்பட்டுள் ளது.
இதன் காரணமாக தீப்பிழம்பு ஏற்பட்ட போதே ஷாபியா பெரியளவில் காயங்களுக்கு உள்ளானார்.
இந்தநிலையில் காயங்களுக்கு உள்ளான பெண் தொடர்பில் அவருடைய எஜமானிக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
பாதுகாப்பற்ற பயன்பாடு தொடர்பிலேயே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள் ளது. (வ)

## பொறுப்புடன் நடவுங்கள் பொலிஸாருக்கு எச்சரிக்கை

### கோட்டை நீதிவான் விடுத்தார்

கொழும்பு, மே 20
பொலிஸார் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்று எச்சரித்துள்ளார் கொழும்பு கோட்டை நீதிவான் திலின கமகே.
பொலிஸார் கைது செய்த பல்கலைக்கழக மாணவர்களில் 9 பேரை பிணையில் விடுவித்து உத்தரவிட்ட பின்னர் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு எச்சரித்துள்ளார்.
குறைந்தபட்ச அதிகாரத்தை பயன்படுத்துவது என்பது ஒருவரின் கண் வெளியில் வரும்படி தாக்குதல் நடத்துவதல்ல என்றும் நீதி வான் குறிப்பிட்டுள்ளார்.
கைது செய்யப்பட்ட 9 பல்கலைக்கழக மாணவர்கள் பிணையில் விடுக்கப்பட்டுள்ள நிலையில், நான்கு மாணவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களைக் காண வைத்தியசாலைக்கு செல்ல உள்ள நீதிவான், அங்கு வைத்து அவர்களையும் பிணையில் விடுவிப்பார் என்றும் கூறப்படுகின்றது. (ற)

## அரசுக்குள்ளும் பிழைகள் உண்டு ஆனால் விமலின் அணுகுமுறை தவறு

### பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தெரிவிப்பு

கொழும்பு, மே 20
அரசுக்குள்ளும் குறைகள் இல்லாமல் இல்லை. ஆளும் கட்சியில் சில பிழைகள் காணப்படுகின்றன என் பதனையும் மறுப்பதற்கில்லை ஆயினும் அரசின் பிழைகளை அமைச்சர் விமல் வீரவன்ஸ சுட்டிக்காட்டி வரும் விதம் பிழையானது - இவ்வாறு தெரிவித்துள்ளார் பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி.
சிங்கள மொழி ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர் காணலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.


சந்திம வீரக்கொடி.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:
"அரசின் பிழைகளை அமைச்சரவைக் கூட்டத்தின் போது சுட்டிக்காட்டியிருக்க வேண்டும். மக்கள் முன் சென்று அரசின் பிழைகளை வெளிப்படுத்துவது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல.
அரசின் நடவடிக்கைகள் நூற்றுக்கு நூறு வீதம் சரியானது என குறிப்பிட முடியாது. சில வேளைகளில் பிழைகள் இருக்கலாம். அவ்வாறு பிழைகள் இருந்தால் அது குறித்து சுட்டிக்காட்டி அவற்றை பேச்சு மூலம் திருத்திக்கொள்ள முடியும்.
சுதந்திரத்தின் பின்னர் இந்த அரசின் கீழேயே பெரிய அளவில் அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது. அமைச்சர் விமல் வீரவன்ஸ தனது பிரபல்யத்தை தக்க வைத்துக்கொள்ள இவ்வாறான பரப் புரைகளில் ஈடுபட்டு வரு கின்றார்.
ஏதேனும் பிரச்சினைகள் இருந்தால் புத்திசாலித்தனமாக அதனை அணுக வேண்டும்.
விமல் வீரவன்ஸவும் ஜனாதிபதியும் நடிப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ் சுமத்துகின்றன. எனினும் நடிக்க வேண்டிய அவசியம் ஜனாதிபதிக்கு கிடை யாது.
விமல் வீரவன்ஸ ஆளும் கட்சியிலிருந்து விலகுவார் என்று எதிர்பார்க்கவில்லை" - என்று தெரிவித்துள்ளார். (ற)

## அணைக்கட்டுக்களை சீர் செய்ய கடன்

கொழும்பு, மே 20
இலங்கையில் அச்சுறுத்தலான அணைக்கட்டுகளை சீர்த்திருத்துவதற்காகவும், விஸ்தரிப்பதற்காகவும் உலக வங்கி கடன் வழங்கவுள்ளது.
இதற்காக 83 மில்லியன் டொலர்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
இதன்கீழ் 32 குளங்களின் அணைக்கட்டுகள் சீர்த்திருத்தம் செய்யப்படவுள்ளன.
இந்த நிலையில் நீரை தேக்கி வைத்திருக்கும் நீர்த்தேக்கங்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் இந்த கடன் திட்டம் நடைமுறைப் படுத்தப்படுவதாக உலக வங்கி தெரிவித்துள்ளது. (வ)

# சிறுவர் பூங்கா அமைக்க 1.5 மில்லியன் நிதி ஒதுக்கீடு

மட்டக்களப்பு, மே 20
அட்டாளைச்சேனை பிரதேச சபையின் நிதியில் இருந்து கோணாவத்தைக் கடற்கரைப் பிரதேசத்தில் சிறுவர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய பூங்கா ஒன்றை அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
சபையின் மாதாந்த அமர்வின் போது பிரதேச சபை உறுப்பினர் ஏ.எஸ்.எம். உவைஸ் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக தவிசாளர் சட்டத்தரணி எம்.ஏ.அன் சில் 1.5 மில்லியன் நிதி ஒதுக்கியுள்ளார்.
அட்டாளைச்சேனை 8 ஆம் பிரிவில் சிறுவர் பூங்கா அமையவுள்ள இடத்தை பார்வையிடுவதற்காக நேற்று முன்


சிறுவர் பூங்கா அமைக்கப்படவுள்ள இடத்தைபார்வையிட்டபோது

தினம் அட்டாளைச்சேனை பிரதேச சபை உறுப்பினரும் அம்பாறை மாவட்ட பொதுப் பணிகள் அமைப்பின் தலைவருமான சுலைமான் எல். முனாஸ் தலைமையில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எல்.எம்.நஸீர், தவிசாளர் எம்.ஏ.அன்சில், உதவித் தவிசாளார் ஏ.எல்.அமானுல்லா உள்ளிட்ட குழுவினர் சென்று பார்வையிட்டனர்.
இந்த சிறுவர் பூங்கா அமையவிருக்கும் இடம்மிகப் பொருத்தமானதாக உள்ளதாகவும் அதற்கான வேலையை அவசரமாக ஆரம்பிக்க உடனடி நடவடிக்கையை எடுக்க தங்களின் ஒத்துழைப்புகளை வழங்க முன்வருவதாகவும் அந்தக் குழுவினர் தெரிவித்தனர். (வ)




நேற்றுமுன்தினம் கொழும்பில் உள்ள நோர்வே தூதரகத்துக்கு முன்பாக ஜாதிக ஹெல உறுமயவின் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு அளிக்க வேண்டாம் என்று தெரிவித்தே அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். "பெற்ற வெற்றியைத் தக்க வைத்துக் கொள்வோம். புலிப் பயங்கரவாதம் தலைதூக்க இடமளியோம்" என்ற தொனிப்பொருளில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் நெடியவனை இலங்கையிடம் ஒப்படைக்க வலியுறுத்தி மனு ஒன்றும் கையளிக்கப்பட்டுள்ளது. (ற-10)

# எதையும் எதிர்கொள்வதற்கான தயார் நிலையில் இராணுவம்

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு. மே 20
நாட்டுக்கோ அல்லது நாட்டின் தேசிய பாதுகாப்புக்கோ எதிராக எந்த அச்சுறுத்தல் வந்தாலும் அதனை எதிர்கொள்ள இராணுவம் தயாராக இருக்கின்றது என்று இராணுவத் தளபதி தயா ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
"எந்த அச்சுறுத்தலையும் எதிர் கொள்ளும் வலிமையுடன் நாட்டின் படையினர் இருக்கின்றனர். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் நாட்டின் பாதுகாப்பு மற்றும் இறையாண்மையை பாதுகாக்க படையினர் அர்ப்பணிக்கப்பட்டுள்ளனர்.
பாதுகாப்புப் படைகளின் புலனாய்வுப் பிரிவுகள் பாதுகாப்புச் செயலாளரின் வழிகாட்டலின் கீழ் பலப்படுத்தப்பட்டுள்ளது. அதனால் புலிகளின் மீள் இணைவு முயற்சிகளை தோற்கடிக்க முடிந்தது.
இலங்கையின் பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள் மற்றும் புனர்வாழ்வு பயிற்சிகள் என்பது முழு உலகத்திற்கும் சிறந்த உதாரணமாக திகழ்கின்றது"- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

## கட்டுத்துப்பாக்கி வெடித்து யுவதி காயம்

கொழும்பு. மே 20
கட்டுத் துப்பாக்கி ஒன்று வெடித்ததில் காயமடைந்த பிரிட்டன் யுவதி ஒருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். வில்கமுவ பிரதேசப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
19 வயதுடைய அந்த யுவதியின் கால் பகுதியில் காயம் ஏற்பட்டுள்ளது. இவர் ஹந்துன்கமுவ பிரதேசத்தில் உள்ள சுற்றுலா விடுதியொன்றில் தங்கியிருந்தார். அவர் அந்தப் பிரதேசத்தில் உள்ள காட்டுப் பகுதிக் குள் சென்றிருந்த போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ற)

# மோடியின் பதவியேற்பில் இலங்கைப் பிரதிநிதிகள்

கொழும்பு. மே 20
இந்தியாவின் புதிய பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்கும் நிகழ்வில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் விசேட பிரதிநிதிகள் குழு கலந்து கொள்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்று வெளிவிவகார அமைச்சின் தகவல்கள் தெரிவித்தன.
ஜனாதிபதியின் இந்த விசேட தூதுக்குழுவினர் இந்தியாவின் புதிய பிரதமருக்கு வாழ்த்து தெரிவிக்கும் நோக்கில் இந்தியாவுக்குப் பயணம் செய்ய உள்ளது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பிரதமராக தெரிவுசெய்யப்பட்டுள்ள நரேந்திர மோடிக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வாழ்த்து தெரிவித்தார். இந்த உரையாடல் இருவருக்கும் இடையில் சுமுகமான உரையாடலாக அமைந்தது என்று ஜனாதிபதியின் பேச்சாளர் மொஹான் சமரநாயக்க தெரிவித்திருந்தார்.
இந்த நிலையில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நரேந்திர மோடிக்கு உத்தியோக பூர்வமான கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாகவும் இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகளை அதிகரிப்பது இருநாடுகளுக்கும் நலன்களுக்கு காரணமாக அமையும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)


## ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்போம்



யாழ்ப்பாணம்
அரியாலையைப் பிறப்பிடமாகவும்
ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட
கோவிந்தபிள்ளை கனகசிங்கம்
அவர்களின்
அன்பு மனைவி
திருமதி கதறினா கனகசிங்கம்

அவர்கள் 13.05.2014 செவ்வாய்க்கிழமை இலங்கை நேரப்படி பிற்பகல் 1.00 மணியளவில் ஜேர்மனியில் காலமானார்.
அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (20.05.2014) செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் உள்ள தேவாலயத்தில் இடம்பெறுகின்றது. அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்போம்.
மருமகன்
106, புங்கன்குளம் வீதி, கொழும்புத்துறை.
004915163103994
004915163103995 } ஜேர்மனி
(46180)(7.6.3)



## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி சிவபாலன்



சிறுப்பிட்டி மத்தியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி சிவபாலன் நேற்று (19.05.2014) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான தியாகராஜா-முத்துப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த சோமசுந்தரம்-அம்பிகைபிள்ளை தம்பதியரின், அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவபாலனின் (ஓய்வுபெற்ற நிலஅளவையாளர்) அன்பு மனைவியும், சிவகுமாரி (ஜேர்மனி) அவர்களின் பாசமிகு தாயாரும், பிரசாந்தனின் (ஜேர்மனி) அன்பு மாமியாரும், காலஞ்சென்ற சச்சிதானந்தன் மற்றும் விஜயலக்ஷ்மி, கங்காதரன் (ஓய்வுபெற்ற அதிபர், வீமன் காமம் மகா வித்தியாலயம்) ஆகியோரின் சகோதரியும், பத்மாசினி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), கிருஷ்ணகுமார், பரமேஸ்வரி (இந்திரா), பராசக்தி ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும், கங்காதரன் (ஓய்வுபெற்ற படவரைஞர்), செல்வராணி, இராசமலர்தேவி, கனகலிங்கம் (சாமி), சிவகாஞ்சனா ஆகியோரின் மைத்துனியும், நேசேந்திரன், பத்மாவதி (ஜேர்மனி) ஆகியோரின் சம்பந்தியும், ரிஷிகேசன், (ஆசிரியர், சென்ஜோன்ஸ் கல்லூரி), சுலக்ஷனா, தர்ஷிகா, சுதர்சினி, தயாளினி, தமிழினி, தனுசிகா, யசோதரா, ரவிச்சந்திரா, உமாசுதன் ஆகியோரின் மாமியாரும், ராதிகா, பிரசாந்தி, சிவசங்கர் ஆகியோரின் பெரிய தாயாரும், கங்கேஸ்வரி (ஆசிரியர்- கொழும்பு), சிவசக்தி (ஆசிரியர்- கொழும்பு), காங்கேயன் ஆகியோரின் சிறிய தாயாரும், முகிலன், மாதங்கி, கௌசிகன், கஜானன், விஷாளி, புருஷோத், பிரவீன், ரிஷாங்கி, அக்ஷயன், அப்சயன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.05.2014) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சிறுப்பிட்டி தெற்கு காளையன்புலம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
தகவல் :
குடும்பத்தினர்.
சிறுப்பிட்டி மத்தி,
நீர்வேலி.
(49283)(7.6.3)


# பயங்கர அழிவு நோக்கி நாடு செல்கின்றது

## அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா சபை தெரிவிப்பு

கொழும்பு. மே. 20
இன மற்றும் மத அடிப்படையில் செயற்படும் தீவிரவாத போக்குள்ள குழுக்கள் ஒருவர் மற்றவரை தூற்றிக் கொண்டும் மோசமாக விமர்சனம் செய்து கொண்டும் இந்நாட்டை முன்பை விட மிக பயங்கர அழிவொன்றுக்கு இட்டுச் செல்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா சபை தெரிவித்துள்ளது.
உலமா சபையின் ஊடக செயலாளர் அஷ்ஷெய்க் பாசில் பாரூக் விடுத்துள்ள அறிக்கையிலே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-
"ஒரு சிலர் மேற்கொள்ளும் முறைகெட்ட செயல்கள் இந்நாட்டு முஸ்லிம்கள் அனைவரதும் எண்ணத்தை பிரதிபலிப்பதாக எண்ண வேண்டாம். இலங்கை பல்வேறு மதங்களைப் பின்பற்றும் பல்லின சமூகங்களைக் கொண்ட நாடாகும். இலங்கையில் முஸ்லிம்கள் பெரும்பான்மை சிங்களவர்களுடன் சிநேகபூர்வமாகவும் பௌத்த மதத்திற்கு மதிப்பளித்தும் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வருகின்றனர்.
இந்து, கிறிஸ்தவர்களுடனும் அன்னியோன்னிய உறவு கொண்டுள்ளார்கள். நீண்ட காலப் போரின் பின்பு புதிய மற்றும் நல்ல பல எதிர்பார்ப்புகள் முஸ்லிம்களிடம் துளிர்விட்டன. மூன்று தசாப்த காலம் நிலவிய குரோதம், சந்தேகம், வெறுப்பு மீண்டும் ஏற்படாது சகலரும் கை கோர்த்து வாழலாம் என்று நம்பினர்.
ஆனால் துரதிருஷ்டவசமாக அதற்குப் பதிலாக நாம் காணக்கூடியவை மிகுந்த கவலையைத் தருகிறது. இன மற்றும் மத அடிப்படையில் செயற்படும் தீவிரவாத போக்குள்ள குழுக்கள் ஒருவர் மற்றவரை தூற்றிக் கொண்டும் விமர்சித்துக் கொண்டும் மீண்டும் தேசத்தை முன்பு நாம் கண்டதை விட மிக பயங்கரமான அழிவொன்றுக்குள் இட்டுச் செல்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன"- என்று தெரிவித்துள்ளார். (ற)


## விற்பனைக்கு

டோபர்மன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 605 3845
(48188)(7.6.3)



## பதவி வெற்றிடங்கள்

கிளிநொச்சியில் விரைவில் தொடங்கவிருக்கும் White Stone வெதுப்பகத்திற்குப் பின்வரும் பணிநிலைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01) கணக்காளர் (HNDA, BBA பட்டதாரிகள்)
02) கணக்குப்பதியுனர் (IAB or AAT பகுதித் தராதரம் மற்றும் கணினி அறிவு)
03) களஞ்சியக் காப்பாளர்
04) விற்பனைப் பணியாளர்
05) வெதுப்பக உற்பத்தி பணியாளர்
06) கேக், ஐசிங் உற்பத்திப் பணியாளர்
07) காவலாளி





➡ சில வேலைகளுக்கு மாற்றுத்திறனாளிகளும் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள்.
➡ பெண் விண்ணப்பதாரிகள் ஊக்குவிக்கப்படுகின்றனர்
➡ சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்
➡ விண்ணப்பங்கள் 27.05.2014இற்கு முன்பதாக அனுப்பி வைக்கவும்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி



WHITE STONE (PVT)LTD,
No-16, 1st Floor, Kandy Road, Vavuniya.
Mail: white stone vavuniya@gmail.com
TP:024 222 6262/077 710 4559
(43310)(12.3.0)



ANNAI NAGAA FOOD city
For Smart Shopping

## விசேட விலைக்கழிவு இம் மாதம் 28ஆம் திகதி வரை

| | |
|---|---|
| 01. சீனி 1KG (BULK) | 85/- |
| 02. ANCHOR 400 g | 376/- |
| 03. LAKSPRAY 400g (POUCH) | 376/- |
| 04. MALIBAN MILK 400g (POUCH) | 385/- |
| 05. மஞ்சள் பருப்பு 1 KG (SMALL) | 150/- |
| 06. சிவப்பு பருப்பு 1 KG | 150/- |
| 07. தேங்காய் | 30/- |
| 08. பெரிய வெங்காயம் 1 KG | 75/- |
| 09. வெள்ளைப்பூடு 1 KG | 160/- |
| 10. செத்தல் மிளகாய் 1 KG | 220/- |
| 11. அப்பளம் 100 G | 50/- |
| 12. அப்பளம் 200 G | 100/- |

நிபந்தனைகளுக்கு உட்பட்டது
(C/14020)(10.6.3)
175, K.K.S. Rd, Jaffna
341, Pointpedro Rd, Nallur.
Tel: 021 7390191
071 2820580

# உயர்தரப் பரீட்சை மாணவருக்கு வகுப்புகள்



தென்மராட்சி, மே 20
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் இந்த வருடம் ஓகஸ்ட் மாதம் நடை பெற வுள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாண வர்களுக்கான ஊட்டல் வகுப்புகள் நேற்று அந்தந்தப் பாடசாலைகளில் ஆரம்பிக் கப்பட்டுள்ளன.

பரீட்சைக்குத் தோற்றும் மாண வர்களுக்கு வலயக் கல்வி அலுவலகத்தால் நடத்தப்பட்ட மாதிரிப் பரீட் சைகளின் பிரகாரம் ஊட்டற்பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

கலை, வர்த்தகப் பிரிவுகளுக் கான தமிழ்ப் பாடம் நேற்று ஆரம்பிக்கப்பட்ட போதிலும் மேலும் ஜீன் 5, 10, 12 ஆகிய திகதிகளிலும்-வணிகக்கல்விப்பாடம் இன்றும் பொருளியல் 22ஆம் திகதியும், வர லாறு, தகவல் தொழில் நுட்பப் பாடங்கள் எதிர் வரும் 23ஆம் திகதி யும், மனைப் பொரு ளியல் 26ஆம் திகதி யும், இந்து நாகரிகம், கிறிஸ்தவ நாகரிகம் 28ஆம் திகதியும், அர சியல் விஞ்ஞா னம் 30ஆம் திகதியும், சங் கீதம், சித்திரம், நட னம், நாடகமும் அரங் கியலும் ஜீன் மூன் றாம் திகதியும் இடம் பெறும்.

விஞ்ஞானப் பிரிவுக் கான உயிரியல், இணைந்த கணி தம் ஆகிய பாடங்கள் எதிர் வரும் 27, 29 ஆகிய திகதியி லும், பௌதிக வியல் ஜீன் 2, 4 ஆகிய திகதிகளிலும், இரசாயனவியல் ஜீன் 9, 11 ஆகிய திகதிகளி லும் அந்தந் தப் பாட சாலைகளில் நடை பெறும்என்று அறிவிக் கப்பட்டுள்ளது. (வ-9)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் ஜெயபாலன்

(உரிமையாளர், ஈசன் களஞ்சியம், கரடிப்போக்கு, கிளிநொச்சி)



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், கரடிப்போக்கு, கிளிநொச்சியை வசிப்பிடமாகவும், தற்போது சாவகச்சேரியில் வசித்தவருமான ஆறுமுகம் ஜெயபாலன் நேற்று (19.05.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - தங்கம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் திருமதி சரஸ்வதி அருணாசலத்தின் பெறாமகனும் காலஞ்சென்ற பொன்னையா - இராசமணி தம்பதியரினதும் சோமசுந்தரம் - கலாயினிதேவி தம்பதியினரினதும் அருமை மருமகனும் ரஜனியின் (ஆசிரியை, யா/டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி) அன்புக் கணவரும் சாரங்கனின் (கிளி/ பளை மத்திய கல்லூரி 2014 உயர்தர கணிதப் பிரிவு) ஆருயிர் தகப் பனும் காலஞ்சென்ற தருமராஜா மற்றும் தி.தவபாக்கியம், சிதம்பரநாதன் (கொழும்பு), Dr. கணேசராஜா (கனடா), யோ. தங்கராணி, பே.புஷ்பராணி, ச.வசந்தா ஆகியோரின் அன்புச் சகோதரனும் மோகன் (கணினி விரிவுரையாளர், வவுனியா வளாகம்), மாலினி (ஆசிரியை, யா/ நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலயம்), குகன் (குகன் அரிசி ஆலை, கல்வயல்), ஜங்கரன் (கனடா), விஜயலட்சுமி (ஆஸ்திரேலியா), தில்லைநாதன் (நுணாவில்), வதனி (கொழும்பு), வாசுகி (கனடா), யோகேஸ்வரன் (பிறவுண் வீதி), பேரின்பநாயகம் (உதயன் பணிமனை), சண்முகராசா (வட்டுக்கோட்டை), திருமகள் (வீடமைப்புத் திணைக்களம், வவுனியா), பால சுப்பிரமணியம் (ஆசிரியர், சென் பற்றிக்ஸ் கல்லூரி), சிவாஜினி (கல்வயல்), சுமதி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.05.2014) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கல்வயல், சாவகச்சேரியில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குகன் மில்,*
*கல்வயல்,*
*சாவகச்சேரி,*
*தொ.பே. இல.: 0770476146, 0777230938*

(சி-14026)

தகவல்:
ஜெ.ரஜனி (மனைவி),
ஜெ.சாரங்கன் (மகன்).

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
05.04.1945
விண்ணில்
20.05.2004

### அமரர் முத்துச்சாமி பத்மநாதன்

(றிக்கோ ஹோட்டல் உரிமையாளர்)

பத்தாண்டு ஆனதுவோ
உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த
பொக்கிஷம் நீங்கள்
நித்தம் புலம்புகின்றோம்
உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

என்றும் உங்கள் நினைவுடன்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*27/20, நாகராஜா வீதி,*
*புங்கன்குளம், சுண்டிக்குளி.* (4620)

## வருடாந்த அகில இலங்கை வேதாகம வினாடி வினா போட்டி - 2014

இலங்கை கிறிஸ்தவ திணைக்களமும் மருதானை புனித யோசவ் கல்லூரியும் இணைந்து நடத்தும் வேதாகம வினாடி வினா போட்டி 2014 (All Island Bible Quiz 2014) இவ்வருடமும் இடம்பெறவுள்ளது. இதன் முதற்கட்டப் போட்டிகள் யாழ் மறை மாவட்டத்தில் யூன் மாதம் இறுதி வாரத்தில் இடம்பெறவுள்ளன. போட்டியில் பங்குபற்ற விரும்புகின்ற பாடசாலைகள் மற்றும் மறைக்கல்விப் பாடசாலைகள் தங்களின் விண்ணப்பங்களை 2014.05.31ஆம் திகதிக்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

வணபிதா.க.ஜேம்ஸ் சிங்கராயர்,
புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை.

போட்டிப் பிரிவுகள் : 1) கீழ்ப்பிரிவு - தரம் 6 - 9
2) மத்திய பிரிவு - தரம் 10 - 11
3) மேற்பிரிவு - தரம் 12 - 13

ஒரு பிரிவுக்கு ஐந்து போட்டியாளர்களின் பெயர்கள் மட்டும் கொடுக்கப்பட வேண்டும். தொடர்புகளுக்கு : 077 356 5269

தலைவர், யாழ் மறை மாவட்ட கல்வி ஆணையம். (சி/14022) (7.8.3)

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் கடமையாற்றும்
கணபதிப்பிள்ளை சிறீதரன் அவர்களின் அன்பு மனைவி

### திருமதி தனலட்சுமி சிறீதரன்

அவர்களின் பிரிவுத் துயரில் ஆழ்ந்திருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாண பிரதேச செயலக
நலன்புரி சங்கம், யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### கதிரிப்பிள்ளை ஸ்ரீஸ்கந்தராஜா



மில்லேன், காளிகோவிலடி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், கதிர்றல் றோட், சென். பற்றிக்ஸ் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரிப்பிள்ளை ஸ்ரீஸ்கந்தராஜா நேற்று (19.05. 2014) திங்கட் கிழமை காலை காலமானார்.

அன்னார் கதிரிப்பிள்ளை-இரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், தனுஜா, சந்திரிக்கா, கவிதா, தாட்சாயினி, மதுசன், கிஷாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஞானேஸ்வரன், சதீஸ்வரன் ஆகியோரின் மாமனும், அப்ஷராவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.05.2014) செவ்வாய்க்கிழமை மு.ப. 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கதிர்றல் றோட்,*
*சென். பற்றிஸ் வீதி, யாழ்ப்பாணம்.* (48263)

தகவல்: குடும்பத்தினர்.
0777729145

## தவறிவிட்டது

17.05.2014 சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் நெல்லியடி பஸ் நிலையத்தில் இருந்து யாழ். நோக்கி வந்த இ.போ.ச. பஸ் வண்டியில் "நோக்கியா" ரக கைத் தொலைபேசி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன். சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: 0777 651124

## காணி விற்பனைக்கு

விநாயகர் வீதி, நல்லூர் சந்திரசேகரப் பிள்ளையார் கோவிலடியில் அமைந்துள்ள காணி நிலப்பரப்பு 01 குளி 5.86 கிணற்றுடன் விற்பனைக்குண்டு தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: 60/1, விதானையார் வீதி, சுண்டிக்குளி.

தொ.பே.: 0779122900

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### திருமதி மாணிக்கம் ஆறுமுகம்

(மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி)

அன்னை மடியில்
05.11.1920

இறைவன் அடியில்
20.04.2014

கடந்த 20.04.2014 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்ப குலவிளக்கு திருமதி மாணிக்கம் ஆறுமுகம் அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும், வீட்டுக் கிருத்திய நிகழ்வும் இன்று (20.05.2014) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற உள்ளதால் அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பொற்றொழிலாளர் வீதி,*
*மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி.*

குடும்பத்தினர்

# இலங்கை தொடர்பான இந்தியாவின் கொள்கைகளில் மாற்றம் ஏற்படாது

## எதிர்வுகூறுகின்றார் சம்பிக்க ரணவக்க

கொழும்பு, மே 20

நரேந்திர மோடியின் ஆட்சியின் கீழ் இலங்கை தொடர்பான இந்தியாவின் கொள்கைகளில் மாற்றங்கள் ஏற்படாது என்று தெரிவித்துள்ளது ஜாதிக ஹெல உறுமய அமைப்பின் தலைவர் சம்பிக்க ரணவக்க.

கொழும்பில் ஜாதிக ஹெல உறுமய நடத்திய போர் வெற்றி நிகழ்வில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியிருப்பதாவது,

"மோடியின் அரசுக்குத் தற்போது தமிழகத்தின் எந்த அழுத்தங்களும் இல்லை. ஜெயலலிதாவின் 37 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இல்லாவிட்டாலும் அவரால் ஆட்சியை முன்னெடுக்க முடியும். இலங்கை காரணமாக மாத்திரம் சோனியா காந்தியின் காங்கிரஸ் தோல்வியடையவில்லை. கூடாங்குளம் அணுமின் நிலையத்திற்கு எதிராக தென்னிந்தியாவில் குரல் கொடுக்கப்பட்டது. ஜெயலலிதா உட்பட அனைவரும் அதனை எதிர்த்தனர்.

இலங்கையில் பலமானவர்கள் ஆட்சியில் இருப்பதை இந்தியா விரும்புவதில்லை. இலங்கை, சிங்கப்பூர், தாய்வான் போன்ற பலம் பொருந்திய பொருளாதார நாடாக வளர்வதை இந்தியா விரும்புவதில்லை.

முதுகெலும் முறிந்த ஆட்சியாளர்களையே இந்தியா விரும்புகிறது. வடக்கும், கிழக்கும் இந்தியாவின் மாநிலமாக இருப்பதையே அந்நாடு விரும்புகிறது.



அதனால் மோடியின் நிர்வாகத்தின் கீழ் இந்தியாவுடன் செயற்பட இலங்கைக்கு நேரடியான வேலைத்திட்டம் ஒன்று அவசியம்.

இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கைகளை அதிகாரிகளே வகுக்கின்றனர். அதனால் எதிர்காலத்தில் மாற்றங்களை எதிர்பார்க்க முடியாது"- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

## சிங்களத்தில் 60, 000 ஆபாச தளங்கள்

கொழும்பு, மே 20

சிங்கள மொழியிலான ஆபாச தகவல்கள் அடங்கிய இணையத்தளங்கள் மற்றும் சமூக வலைத்தளங்கள் என 60 ஆயிரம் இணையத்தளங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன என்று தெரியவந்துள்ளது.

சிங்கள தேடு தளத்தில் இவ்வாறான 59 ஆயிரம் இணையத்தளங்கள் பற்றி தகவல்கள் இருக்கின்றன என்றும், பாடசாலை மாணவ, மாணவிகளை இலக்கு வைத்தே இந்த இணையத்தளங்கள் இயங்கி வருகின்றன என்றும் மேலும் கூறப்படுகின்றது. (ற)

## புலிகளின் பாட்டு கைபேசியில்; ஒருவர் கைது

மட்டக்களப்பு, மே 20

தமிழீழ விடுதலைப் புலிகளின் பாடல்களை கையடக்க தொலைபேசியில் வைத்திருந்தார் என்று தெரிவித்து ஒருவர் மட்டக்களப்பு பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் இருந்து கைப்பற்றிய கையடக்க தொலைபேசியில் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் படம் சேமித்து வைக்கப்பட்டிருந்தது என்றும் தெரிவித்துள்ள பொலிஸார், கைது செய்யப்பட்ட நபர் மேலதிக விசாரணைகளுக்காக பயங்கரவாத தடுப்பு பிரிவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட உள்ளார் என்றும் தெரிவித்துள்ளனர். (ற)



இந்திய மகாபோதி அமைப்பின் புதிய பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள பெல்வத்தே சீவலி தேரர் நேற்றுக் காலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

## சுதந்திரக் கட்சியினருடன் ஜனாதிபதி விசேட சந்திப்பு

கொழும்பு, மே 20

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களை சந்திக்க உள்ளார் என்று கூறப்படுகின்றது.

இந்தச் சந்திப்பில் எதிர்வரும் காலங்களில் தேர்தல்கள் நடத்தப்பட உள்ளமை தொடர்பிலும், அந்த தேர்தல் களை எவ்வாறு நடத்துவது என்பது குறித்தும் கலந்தா லோசிக்கப்பட உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ற)

## தலைமைத்துவ சபையை கூட்டுகின்றது ஐ.தே.க.

கொழும்பு, மே 20

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவ சபை அடுத்து வாரம் கூடவுள்ளது. தலைமைத்துவ சபைத் தலைவர் கரு ஜயசூரிய வெளிநாடு சென்றுள்ளதால் அவர் நாடு திரும்பியதும் இக்கூட்டம் நடைபெறவுள்ளது.

அதன்போது ஊவா மாகாண சபைத் தேர்தல் குறித்தும் ஜனாதிபதித் தேர்தலுக்கு தற்போது முன்மொழியப்பட்டுள்ள பொது வேட்பாளர்கள் குறித்தும் ஆராயப்படவுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் தேர்தல் காலங்களில் மக்களுக்கு தெளிவான கொள்கை விளக்கம் ஒன்றை முன்வைப்பது தொடர்பில் ஐ.தே.க. ஆராய்ந்து வருகிறது.

இது தொடர்பில் கட்சிக்குள் தற்போது பல யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளது என்றும், எதிர்வரும் ஆறு மாதங்களில் இந்த கொள்கை அறிக்கை தயாரிக்கப்படவுள்ளது என்றும் கூறப்படுகின்றது. (ற)

## வடக்கு ரயில் சேவைகள் வழமைக்கு



கொழும்பு, மே 20

தடைப்பட்டிருந்த வடக்கு ரயில் போக்குவரத்து வழமைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது என்று ரயில்வே கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

பொத்துஹரவுக்கும் பொல்கஹவெலவுக்கும் இடைப்பட்ட பகுதியில் ரயிலொன்றில் நேற்று முன்தினம் காலை இயந்திரக் கோளாறு ஏற்பட்டதால் வடக்கு ரயில் மார்க்கத்தின் ஊடான ரயில் போக்குவரத்து தடைப்பட்டது.

பொத்துஹரவில் அண்மையில் இடம்பெற்ற விபத்தில் சிக்கிய ரயிலின் பாகங்களை, இடர் நிவாரண ரயிலில் கொண்டு வந்த வேளையில் குறித்த ரயிலில் காலை இயந்திரக் கோளாறு ஏற்பட்டதாக ரயில்வே கட்டுப்பாட்டுப் பிரிவு குறிப்பிட்டது.

அதனால் கொழும்பிலிருந்து பளை மற்றும் மட்டக்களப்பு வரையான ரயில் சேவைகள் தடைப்பட்டதுடன் வடக்கு மார்க்கத்தின் ரயில் போக்குவரத்து கொழும்பிலிருந்து பொல்கஹவல வரை மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. ஆயினும் தற்போது ரயில் சேவைகள் யாவும் தற்போதைக்கு வழமைக்குத் திரும்பியுள்ளதாக ரயில்வே கட்டுப்பாட்டு பிரிவு குறிப்பிட்டது. (ற)

# கல்வியை விற்பனை செய்கிறது மஹிந்த ராஜபக்ஷவின் அரசு

## குற்றஞ்சாட்டுகின்றது சோசலிச மாணவர் சங்கம்

கொழும்பு, மே 20

தனியார் பல்கலைக்கழகங்களை ஏற்படுத்துவதை எதிர்க்கும் மாணவர்களை அரசு அடக்குமுறைக்கு உள்ளாகி வருகின்றது என்று சோசலிச மாணவர் சங்கம் தெரிவித்துள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ அரசு இலங்கையின் பல்கலைக்கழக கட்டமைப்பை தனியார் மயப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. அதற்கு தேவையான அதிகாரிகள் கட்டமைப்பை ஏற்படுத்தி, தனியார் பல்கலைக் கழகங்களை ஆரம்பிக்கும் பணிகளை தொடங்கியுள்ளது என்றும் அந்தச் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயேஅந்தச் சங்கத்தின் தலைவர் நளிந்த ஜயதிஸ்ஸ இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கையில் கல்வித்துறையில் இருந்து வந்த செயலாளர்கள் இலவச கல்வியை கற்று அதற்காக ஏதேனும் சிறிய பணிகளை செய்தனர். ஆனால் இன்று உயர்கல்வி அமைச்சின் செயலாளராக இருக்கும் சுனில் ஜயந்த நவரட்ண, உயர் கல்வியை விற்பனை செய்யும் பணிகளில் ஈடுபட்டு வருகிறார். அடுத்த ஆறு வருடங்களில் 10 தனியார் பல்கலைக்கழங்களை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என உயர்கல்வி அமைச்சின் செயலாளர் ஊடகங்களிடம் தெரிவித்திருந்தார்.

மஹிந்த ராஜபக்ஷ அரசு பணத்துக்காக கல்வியை விற்பனை செய்து வருகிறது. அதனால் படநெறிகளை குறைத்து அரச பல்கலைக்கழக கட்டமைப்பை வலுவிழக்க செய்யும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன"- என்று தெரிவித்தார். (ற)

## இடிதாங்கியை திருட முயன்ற பிரதேச சபைத் தலைவர் கைது

கொழும்பு, மே 20

ஊவா பரணகம டவுன்சைட் தோட்டத்தில் மூடப்பட்டிருக்கின்ற தேயிலை தொழிற்சாலையில் பொருத்தப்பட்டிருக்கும் இடிதாங்கியை திருட முயன்றார் என்ற குற்றச்சாட்டில் வெலிமடை பிரதேச சபையின் ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர் ஒருவரை ஊவா பரணகம பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவருடன் மற்றுமொருவரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் ஊவா பரணகம பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த தோட்டத்தின் காவலாளிக்கு பெருந்தொகையில் இலஞ்சம் கொடுத்து இடி தாங்கியை கழற்றிச்செல்வதற்கு முயன்றுள்ளார். இது தொடர்பில் காவலாளி, அத்தோட்டத்தின் முகாமையாளருக்கு தகவல் கொடுத்துள்ளார். அதனையடுத்தே தோட்ட முகாமையாளர் முச்சக்கரவண்டியுடன் அவ்விருவரையும் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# நம்பிக்கையில்லா பிரேரணையால் அரசுக்குள் குழப்பம்

கொழும்பு, மே 20

ஐக்கிய தேசியக் கட்சி கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் காரணமாக அரசுக்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு, இலங்கையை போதைப் பொருள் மத்திய நிலையமாக மாற்றியுள்ளதாக குற்றம் சுமத்தி ஐக்கிய தேசியக் கட்சி இந்த நம்பிக்கையில்லா தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ளது. அதையடுத்தே அரசின் கூட்டணிக் கட்சிகளுக்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது.

ஆளும் கட்சியின் கூட்டணிக் கட்சிகளான ஜாதிக ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணி ஆகியன நம்பிக்கையில்லா தீர்மானம் தொடர்பான விவாதத்தை தவிர்க்க தீர்மானித்துள்ளதுடன் இது தொடர்பில் அந்த கட்சிகளுக்குள் பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு ஆதரவு வழங்க வேண்டும் என ஜாதிக ஹெல உறுமயவின் சிலர் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

அமைச்சர் சம்பிக்க ரணவக்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் ஆகியோர் கடந்த காலங்களில் போதைப் பொருள் தொடர்பில் அரசைப் பகிரங்கமாக விமர்சித்த நிலையில், அவர்களுக்கு விவாதத்தை தவிர்க்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதனிடையே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் பலர் ஒரு முடிவுக்கு வரமுடியாத நிலையில், விவாதத்தை தவிர்க்க முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது. எதிர்காலத்தில் நடைபெறவுள்ள தேசிய தேர்தலே அவர்களின் இந்த முடிவுக்கு காரணம் எனவும் கூறப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி கொண்டு வரவுள்ள இந்த நம்பிக்கையில்லா தீர்மானம் தொடர்பான விவாதம் நாளையும் நாளை மறுதினமும் நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ளது. இந்த நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயக தேசியக் கூட்டணி மற்றும் சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் குமார ஆகியோர் ஆதரவு வழங்க தீர்மானித்துள்ளனர். ஜே.வி.பி இதுவரை இது குறித்து எந்த கருத்துக்களை வெளியிடவில்லை. (ற)

## தஞ்சாவூர் முள்ளிவாய்க்கால் முற்றத்தில் நினைவு தின நிகழ்வு



சென்னை, மே.20
தஞ்சாவூர் விளாரிலுள்ள முள்ளிவாய்க்கால் முற்றத்தில் முள்ளிவாய்க்கால் நினைவு தின நிகழ்வுகள் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது.
இதில் பழ.நெடுமாறன், இயக்குநர்வகௌதமன், ஜோ.பிரிட்டோ உட்பட மாணவர் அமைப்புகளிலிருந்து பலர் பங்கு கொண்டனர். இதில் முதல் நிகழ்வாக இலங்கையின் பத்திரிகையாளர் மகா. தமிழ்ப் பிரபாகரனின் 'இந்த நிலம் இராணுவத்துக்கு சொந்தமானது' ஆவணப்படம் திரையிடப்பட்டு கலந்துரையாடலும் நடை பெற்றது.
அதன் பின் வெளி மாநில மாணவர் பிரதிநிதிகள் தமிழினப் படுகொலையை கண்டித்து பேசினர். அதன் பின் மாணவர் போராட்டத்தை வைத்து வெற்றிவேல் இயக்கிய 'அறப்போர்' ஆவணப் படம் திரையிடப்பட்டது. பின் முள்ளிவாய்க்கால் படுகொலைகளை மையமாக வைத்து பல நிகழ்வுகள் நடைபெற்றன. 500 இற்கும் மேற்பட்டோர் இதில் பங்கேற்றனர். (வ-10)

## சென்னை மெரினாவை கலக்கிய முழக்கம் பெருந்திரளான மக்கள் தீப அஞ்சலி

சென்னை, மே.20
ஈழத் தமிழினப் படுகொலைக்கான நினைவேந்தல் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை சென்னை மெரினா கடற்கரையில், கண்ணகி சிலை அமைந்துள்ள பகுதிக்கு எதிராக நடைபெற்றது.
முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்த தமிழர்களுக்காக இந்த நிகழ்வை மே பதினேழு இயக்கம் ஏற்பாடு செய்திருந்தது.
நிகழ்வில் மறுமலர்ச்சி திராவிட கழக பொதுச் செயலாளர் வைகோ உள்ளிட்ட தமிழின உணர்வாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.
இனப் படுகொலைக்கு சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும். தனித் தமிழீழத்துக்கான பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.
தனித் தமிழ் ஈழமே ஈழத் தமிழர்களின் பிரச்சினைக்கு ஒரே தீர்வு என்று மே பதினேழு இயக்கம் தெரிவித்துள்ளது.



சென்னையில் நடைபெற்ற தமிழினப் படுகொலை நினைவேந்தல் சுடரை ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ ஏற்றி வைத்தார். நிகழ்வில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டதுடன் மெழுகுவர்த்திகளை ஏந்தி மண் மீட்பு போரில் உயிரிழந்தவர்களுக்கு தீப அஞ்சலி செலுத்தினர். (வ)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### வடமாகாண

மாணவர்களின் கல்வித் தேவைக்கான கணினி மற்றும் உபகரணக் கொள்வனவு, அதிபர், ஆசிரியர்களுக்கான பயிற்சிகளை வழங்குதல் போன்றவற்றுக்கு அந்த நிதி பயன்படுத்தப்படும். உலக வங்கியின் ரி.எஸ்.ஈ.பி. திட்டத்தில் இந்த நிதி வழங்கப்படுகிறது.
அந்த வகையில் இந்த ஆண்டுக்கான அபிவிருத்தி நிதியாக 310 மில்லியன் ரூபா நிதி வடக்கு மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. (ற-4)

### இந்தியாவின்

செய்துள்ளனர்.
இந்தியாவின் சென்னையில், இலங்கையைச் சேர்ந்த ஹுஸைன், பாகிஸ்தான் உளவாளி என்ற சந்தேகத்தில் கடந்த மாதம் கைது செய்யப்பட்டிருந்த நிலையிலேயே, இந்திய உளவாளி என்று சந்தேகிக்கப்படும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
கைது செய்யப்பட்டவரிடமிருந்து பல்வேறுபட்ட ஆவணங்கள், ஒளிப் படங்கள் மற்றும் அடையாள அட்டைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும், குறிப்பிட்ட நபர் யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்குப் பகுதிக்கு குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு தடவை சென்று வந்துள்ளார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.
44 வயதான சந்தேகநபர் இலங்கையில், ஹமாஸ் ஜமால்டீன் என்ற பெயரிலேயே தங்கியிருந்துள்ளார். இருப்பினும் குறித்த நபர், இந்தியாவில் கேரள மாநிலத்திலிருந்து 1995 ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்துள்ளார். இங்கு வந்து, வடக்கில், டெக்னிக்கல் சந்தி வவுனியா, அநுராதபுரம், யாழ்ப்பாணம் மற்றும் பரஸன்கஸ்வெள ஆகிய இடங்களில் உணவகங்களில் வேலை செய்துள்ளார்.
அத்துடன் குறித்த நபர் போலிக் கடவுச்சீட்டுடன் வெளிநாடுகளுக்கும் பல தடவைகள் சென்று வந்துள்ளார். தனது முன்னைய கடவுச் சீட்டு தொலைந்து போனது என்று கூறி இலங்கையிலிருந்து கடவுச் சீட்டைப் பெற்றுள்ளார்.
அத்துடன் கைது செய்யப்பட்ட நபர் தங்கியிருந்த இடத்தை சோதனையிட்ட பொலிஸார் பல்வேறு ஆவணங்களைக் கைப்பற்றியுள்ளனர். கைப்பற்றப்பட்ட ஆவணங்கள், கைது செய்யப்பட்ட நபர் வழங்கிய வாக்கு மூலங்கள் என்பவற்றின் அடிப்படையில், குறித்த சந்தேகநபர் இந்திய புலனாய்வு முகவர் நிலையத்தின் புலனாய்வு அதிகாரியாக கடமையாற்றியிருக்கலாம் என்று சந்தேகிப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற-5)

### வலி.வடக்கில்

குரிய மக்கள், இராணுவத்தினரின் நடவடிக்கையை எதிர்த்து வழக்குத் தாக்கல் செய்தனர். அந்த வழக்கின் தீர்ப்பு இன்னமும் வழங்கப்படவில்லை.
இந்த நிலையில் இந்த மாதத்தின் ஆரம்பத்தில் கீரிமலையில் ஜே/226 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 183 ஏக்கர், 3 ஏக்கரும் 2 பேர்ச் காணியைச் சுவீகரிப்பதற்கான அறிவித்தல் ஒட்டப்பட்டது. கடற்படையினரின் தேவைக்காகவே இந்தக் காணி சுவீகரிக்கப்படுகின்றது என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.
இந்த நிலையில் அவற்றுக்கு மேலதிகமாக ஜே/222 கிராம சேவையாளர் பிரிவில் 40 பேர்ச் தனியார் காணியைச் சுவீகரிப்பதற்கான அறிவித்தல் அண்மையில் ஒட்டப்பட்டுள்ளது. இந்தக் காணியும் கடற்படையினரின் தேவைக்காகவே எடுக்கப்படுகின்றது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-5)

### ஈழத் தமிழர்

வேண்டும் என்று வைகோ வலியுறுத்தினார்.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த வைகோ,
"ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் இந்த மே மாதம் தமிழர்களுக்குத் துயரமான மாதம் ஆகும். 2009 மே 17, 18 திகதிகளில் இலட்சக்கணக்கான ஈழத்தமிழர்கள் சிங்கள அரசால் கொன்று குவிக்கப்பட்டனர். அதற்கு முழுக்க முழுக்க ஆயுத உதவி செய்து, இனப்படுகொலை நடக்கக் காரணமாக சோனியா காந்தியும் அவர் இயக்கிய காங்கிரஸ் அரசும்தான் செயல்பட்டன.
நான் சென்னையில் ஒரு கூட்டத்தில் குறிப்பிட்டேன். காங்கிரஸ் அரசு செய்த துரோகத்தை, நரேந்திர மோடி அரசு ஒருபோதும் செய்யாது. சிங்கள அரசுக்கு உதவாது. ஈழத் தமிழர்கள் பாதுகாப்புக்கு மோடி அரசில் வழிபிறக்கும் என்று குறிப்பிட்டேன். இவற்றையெல்லாம் நரேந்திர மோடியுடனான சந்திப்பின்போது தெளிவாக எடுத்துரைத்தேன்"- என்று அவர் தெரிவித்தார்.
இருவருக்கும் இடையே கலந்துரையாடலின் முடிவில் "ஈழத் தமிழர்களின் பாதுகாப்பு தொடர்பில் நான் உரிய கவனம் செலுத்துவேன்" என்று நரேந்திர மோடி உறுதி வழங்கினார் என்று வைகோ தெரிவித்தார். (ற-5)

### ஜனாதிபதி

கைகள் தொடர்பான நம்பிக்கையை கட்டியெழுப்புவது" என்ற தொனிப்பொருளிலான மாநாட்டில் கலந்துகொள்ளவே அவர் இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.
ஜனாதிபதி இந்தப் பயணத்தின்போது, சீனாவின் உயர்மட்டத் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார் என்றும், ஜனாதிபதியுடன் உயர்மட்டக் குழு ஒன்று பயணமாகியுள்ளது என்றும் மொஹான் சமரநாயக மேலும் தெரிவித்துள்ளார். (ற-10)

### இராணுவத்துக்கு

வருடங்களாக தொடர்ச்சியாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கிளிநொச்சியில் முதல் கட்டமாக இராணுவத்திற்கு பெண்கள் இணைக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து ஏனைய மாவட்டங்களிலும் இராணுவத்திற்கு தமிழ்ப் பெண்களை இணைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
யாழ்ப்பாணத்திலும் இந்த நடவடிக்கை நேற்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இலங்கையின் இராணுவத்தில் இணைந்து கொள்வதற்கு தமிழ் பெண்கள் நேர்முகத் தேர்வில் நேற்றுத் தோற்றியுள்ளனர். துரையப்பா விளையாட்டரங்குக்கு அருகில் இந்த ஆள்சேர்ப்பு நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டுள்ளது.
பலாலி இராணுவ கட்டளைத் தலைமையக ஊடகப் பேச்சாளர் மல்லவராச்சி இந்த நேர்முகத் தேர்வுகளை நடத்தினார்.
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 32 தமிழ்ப் பெண்களுக்கு நேர்முகத் தேர்வுக்கான அழைப்பினை இராணுவத்தினர் விடுத்திருந்தனர்.
ஆனால் 30 பேரையே இராணுவத்தினர் தேர்ந்தெடுத்துள்ளனர். இவர்களுக்கான பயிற்சிகள் விரைவில் காங்கேசன்துறையில் ஆரம்பமாகவுள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். (ற-5)

### போதையில்

நீதிமன்றில் அவர் தன் மீதான குற்றச்சாட்டை ஒப்புக் கொண்டதையடுத்து அவருக்கு 2 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. ஆயினும் அதை அவர் செலுத்தத் தவறியதால் ஒருமாதம் சிறைத் தண்டனை விதித்து உத்தரவிட்டது நீதிமன்றம். (ற-4)

### படை அதிகாரி

விட்டு படுக்கைக்குச் சென்றிருந்தார். ஆயினும் நேற்றுக் காலையில் நீண்ட நேரமாக படுக்கையறையில் இருந்து வெளியே வராததால் பூட்டியிருந்த அறைக் கதவைத் தட்டி அழைத்தபோது அவர் எழுந்திருக்கவில்லை. கதவுத் திறப்பு துவாரத்தின் வழியாகப் பார்த்தபோது அவர் அசைவற்றுக் காணப்பட்டதால் கொடிகாமம் பொலிஸாருக்கு தகவல் அனுப்பப்பட்டது.
அங்கு சென்ற பொலிஸார் கதவைத் திறந்து உட்சென்று பார்த்தபோது அவர் இறந்த நிலையில் காணப்பட்டார். அதைத் தொடர்ந்து குறித்த சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி நீதிமன்றில் பொலிஸார் அறிக்கை தாக்கல் செய்தனர்.
படை அதிகாரியின் சாவு தொடர்பாக திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சி.சி.இளங்கீரன் மூலம் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.
வெலிபென்ன மெதகம இரங்கிரியவைச் சேர்ந்த கப்டன் கே.எஸ்.சுமித்ரநந்த பிரியந்தறுவான் ( வயது 50 ) என்பவரே உயிரிழந்தவரா வார். இவரது சடலத்தின் மீதான பிரேத பரிசோதனையில், இவருக்கு அதிகமாக புகை பிடிக்கும் பழக்கம் இருந்ததால் நுரையீரல் அழற்சி ஏற்பட்டதுடன் மாரடைப்பும் ஏற்பட்டு மரணம் சம்பவித்துள்ளது என்று அறிக்கையிடப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது. (ற-4-9)

### நிதி நியதி

மாகாணசபையின் நிதி விவகாரங்களைக் கையாள்வதற்காக நிதி நியதிச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் முத்திரை வரியினூடாக மத்திய அரசுக்குச் சென்ற பெருமளவான நிதி வடக்கு மாகாணசபைக்கு வருமானமாக வந்து சேரவுள்ளது.
ஏனைய 8 மாகாண சபைகளை விடவும் வேறுபட்டதாக புதிய விடயங்களை உள்ளடக்கி வடக்கு மாகாண சபையின் நிதி நியதிச் சட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.
வடக்கு மாகாணசபையின் 7 ஆவது அமர்விலேயே நிதி நியதிச் சட்டத்தின் முதலாம் வாசிப்பு வடக்கு முதலமைச்சரால் செய்யப்பட்டது. அடுத்த அமர்வில் இரண்டாம் வாசிப்புச் செய்யப்படும் என்று முதலமைச்சரால் தெரிவிக்கப்பட்டிருந்த போதும் எட்டாவது அமர்வில் நிதி நியதிச் சட்டம் சமர்ப்பிக்கப்படவில்லை.
இந்த நிலையில் நாளை மறுதினம் வியாழக்கிழமை இடம்பெறும் அமர்வில் நிதி நியதிச் சட்டம் சமர்ப்பிக்கப்படும் என்று அவைத்தலைவரினால் அமர்வு நிகழ்ச்சி நிரலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இன்று இடம்பெறும் அமைச்சரவைக் கூட்டத்திலேயே இது தொடர்பில் இறுதி முடிவு செய்யப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-5)

### கிளிநொச்சியில்

பாய்ந்து உயிர் தப்பித்தனர். 'ஹன்ரர்' வாகனம் சேதமானது.
உதயநகர் பகுதியில் பாதுகாப்பற்ற ரயில் கடவையை கடந்த செல்ல முற்பட்ட போது ரயில் வருவதை அவதானித்த வாகன சாரதி ஹன்ரரில் இருந்து குதித்து தப்பியதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதே வேளை இந்த ரயில் கடவையில் சில மாதங்களுக்கு முன்னர் ஒட்டோ ஒன்று சிக்கிக்கொண்டு ஆபத்தை எதிர்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-55-18)

### இசைப்பிரியா

பவர் முல்லைத்தீவு, மல்லாவி யோகபுரம் கிழக்கைச் சேர்ந்த குணலிங்கம் உஷாளினி என அவரது பெற்றோர் நேற்று உறுதிப்படுத்தினர்.
இது குறித்து அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:
"எமது மகள் 1990 ஆம் ஆண்டு பிறந்தவர். இறுதிப் போரில் நாம் முள்ளிவாய்க்காலை எட்டியிருந்தோம். அப்போது எமது மகள் உஷாளினி 2009 மே மாதம் முற்பகுதியில் காணாமற் போயிருந்தார். மீள்குடியேற்றத்தின் பின்னர் மகள் காணாமல் போனமை தொடர்பாக பல்வேறு தரப்பினரிடமும் முறைப்பாடு செய்திருந்தோம்.
அண்மையில் கிளிநொச்சியில் நடைபெற்ற காணாமற்போனோரை கண்டறியும் விசாரணை ஆணைக்குழுவிலும் சாட்சிகளை பதிவு செய்திருந்தோம். மகள் உயிருடன் இருக்கிறார் என் எம்மை ஏமாற்றி மல்லாவியைச் சேர்ந்த ஒருவர் எம்மிடமிருந்து ஒரு லட்சம் வரையான பணத்தையும் பெற்றிருந்தார். இது குறித்து பின்னர் இராணுவத்தினருக்கும் நாம் தெரியப்படுத்தியிருந்தோம்.
இந்த நிலையில் நேற்றுமுன்தினம் பத்திரிகைகளில் வெளியாகிய புகைப்படத்தில் இசைப்பிரியா என்பவருக்கு அருகில் எமது மகள் இருப்பதை நாம் அடையாளம் கண்டுள்ளோம். இது குறித்து நாளை (இன்று) சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் முறைப்பாடு செய்யவுள்ளோம்"- என்று உஷாளினியின் தந்தை குணலிங்கம் உதயனிடம் தெரிவித்தார். (ஜ-422)

# ஆண்களுக்கான ஹொக்கியில் சம்பியனானது உடுவில் அணி

வலி.வடக்கு. மே 20

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு யாழ். மாவட்டப் பிரதேச செயலகங்களின் அணிகளுக்கு இடையே நடத்திய ஆண்களுக்கான ஹொக்கிப் போட்டியில் உடுவில் பிரதேச செயலக அணி மாவட்டச் சம்பியனாகியது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் உடுவில் பிரதேச செயலக அணியும் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் சமபலம் கொண்ட அணிகளாக காணப்பட்டமையால் ஒரு அணி மற்றைய அணிக்குச் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் மோதிக் கொண்டன. முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறாத நிலையில் இரண்டாம் பாதி ஆட்டம் இரு அணிகளுக்கும் முக்கியமான தாக அமைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்திலும் இரு அணிகளும் கோல் பெற எடுத்த முயற்சிகள் கை கூடவில்லை. ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிக்க வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு அடிகளைத் தொடர்ந்து உடுவில் பிரதேச செயலக அணி 03:02 என்ற கோல் கணக்கில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியை வென்று மாவட்டச் சம்பியனாகியது. (த-86)


சம்பியனான உடுவில் பிரதேச செயலக அணியினர்



## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்.மே 20

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அராலி ஏ.ஏல்.விளையாட்டுக்கழகம்,அராலி ஏ.ஏல் இளைஞர் கழகம் ஆகியவை இணைந்து நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அராலி ஏ.ஏல். விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

அதில் இன்று செவ்வாய்கிழமை பி.ப 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் அராலி பாரதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக 'ஏ 'அணி மோதவுள்ளது.

பி.ப 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஈவினை கலைமகள் விளையாட்டக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், மே 20

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 9 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைப்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழக தைானத்தில் இடம்பெற்று வருகின்றன.

அதில் இன்று செவ்வாய்கிழமை பி.ப 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மைக்கல் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் குடத்தனை சென்.பீற்றஸ் விளையாட்டுக் கழகஅணியைஎதிர்த்துபொலிகை பாரதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த23)

# யாழ்.மத்திய கல்லூரி வெற்றி

வலி.வடக்கு. மே 20

யாழ்ப்பாணப்பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 17 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் போட்டி ஆட்டம் ஒன்றில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 03 இலக்குகளால் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி 33.5 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 137 ஓட்டங்களைப் பெற்றது. ஜெனி பிலோமன் 41 ஓட்டங்களையும், சோமஸ்கரன் 20 ஓட்டங்களையும், நிலோஜன் 17 ஓட்டங்களையும், ஹெரெட் 10 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 25 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த கௌதமன் 07 பந்துப் பரிமாற்றம் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற பரிமாற்றத்துடன் 17 ஓட்டங்களுக்கு 04 இலக்குளையும், திரேசன் 6.5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 17 ஓட்டங்களுக்கு 02 இலக்குகளையும், அலென்ராஜ் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற பந்துப் பரிமாற்றங்களுடன் 51 ஓட்டங்களுக்கு 02 இலக்குகளையும் தனுசன் 20 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 45.4 பந்துப்பரிமாற்றங்களில் 07 இலக்குகளை இழந்து 141 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது. கௌதமன் 33 ஓட்டங்களையும் பிரியலக்ஷன் 26 ஓட்டங்களையும், கோமேதகன் 21 ஓட்டங்களையும், அலென்ராஜ் 12 ஓட்டங்களையும், கார்த்தீபன் 11 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 26 ஓட்டங்களும் பெறப் பட்டன.

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த செலுமியன் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றங்களுடன் 27 ஓட்டங்களுக்கு 02 இலக்குகளையும் திலக்ஷன் 06 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 32 ஓட்டங்களுக்கு 02 இலக்குகளையும், நிலோஜன், நிரோஜன் முறையே 16, 20 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினார்கள். (த-86)

# பெண்கள் எல்லேயில் மோதவுள்ள அணிகள்

வலி வடக்கு மே 20

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்படும் இரண்டாம் கட்டப் பெரு விளையாட்டுப் போட்டிகள் தொடரில் பெண்களுக்கான எல்லே போட்டியில் இன்று செவ்வாய்க் கிழமை மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலயம் எதிர் மன்னார் புனித வளனார் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை. வவுனியா பூவரசங்குளம் மகா வித்தியாலயம் எதிர் யாழ்ப் பாணம் வட்டுக் கோட்டை இந்துக் கல்லூரி.

முல்லைத்தீவு குமிழமுனை மகா வித்தியாலயம் எதிர் யாழ்ப்பாணம் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்.

வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலயம் எதிர் மன்னார் பெரியகுஞ்சுக்குளம் மகாவித்தியாலயம்.

வவுனியா கணேசபுரம் மகா வித்தியாலயம் எதிர் கிளிநொச்சி கோணர்வில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை.

முல்லைத்தீவு மகா வித்தியாலயம் எதிர் மன்னார் உயிலங்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயம்.

கிளிநொச்சி ஜெயபுரம் மகா வித்தியாலயம் எதிர் முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம்.

இரண்டாம் சுற்றில் இருந்து சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மோதவுள்ளது. (த-86)

# மத்தியஸ்தர்களுக்கான வதிவிடப் பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம் மே 20

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம், இலங்கை உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் ஆகியவை இணைந்து நடத்தும் உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான வதிவிடப் பயிற்சி முகாம் எதிர்வரும் ஜீன் மாதம் 6ஆம்,7ஆம்,8ஆம் திகதிகளில் பரந்தன் இளைஞர் வட்டம் மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

ஆரம்ப நிகழ்வில் இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவர் றஞ்சித் றொட்றிக்கோ மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (த-23)

# முதலாம் கட்டப் போட்டிகள் இன்று முதல் முல்லைத்தீவில்

வலி.வடக்கு. மே 20

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்படும் இரண்டாம் கட்டப் பெரு விளையாட்டுப் போட்டிகள் இன்று செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு கல்வி வலயத்தில் ஆரம்பமாகவுள்ளன. இன்று ஆண்கள், பெண்களுக்கானஎல்லேபோட்டிகளுடன் ஆரம்பமாகும் பெரு விளையாட்டுப் போட்டிகள் புதுக்குடி யிருப்பு மத்திய கல்லூரி மைதா னம், புதுக்குடியிருப்பு பொதுவிளையாட்டுமைதானம் என்பவற்றில் இடம்பெறவுள்ளன. (த-86-23)


வவுனியா பிரதேச செயலகங்களுக்கு இடையிலான வடமாகாண மேசைப்பந்தாட்டப் போட்டியில் வவுனியா சித்திரபுரம் அ.த.க.பாடசாலை மகளிர் அணி வெற்றி பெற்று சம்பியனானது. சம்பியன் வென்ற வீராங்கனைகள் பாடசாலை அதிபர் செ.யேசுநேசன், உடற்கல்வி ஆசிரியர் ஜே.ஜெயகாந்தன், உப அதிபர் ம.சிவகொங்கை ஆகியோருடன் காணப்படுகின்றனர். (த-23)

# நல்லூர் பிரதேச இளைஞர் கழகம் கரம் தொடரில் சம்பியன் வென்றது

வலி.வடக்கு. மே 20

யாழ்.மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றத்தால் யாழ். மாவட்ட பிரதேச இளைஞர் சேவைகள் மன்றங்களுக்கு இடையே நடத்தப்பட்ட கரம் ஒற்றையர் சுற்றுத் தொடரில் நல்லூர் பிரதேச இளைஞர் கழக அணி வெற்றி பெற்று சம்பியனானது.

கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக் கழக மண்டபத்தில் நடைபெற்ற இந்தப் போட்டிகளில் நல்லூர் பிரதேச இளைஞர் கழக அணியும், யாழ்ப்பாணம் பிரதேசசெயலகஇளைஞர் கழக அணியும் மோதின.



வெற்றியீட்டிய வீரர் இளைஞர் சேவை மன்ற அதிகாரிகளுடன்

அதில்நல்லூர்பிரதேச இளைஞர் கழக அணி 25:00 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனானது.(ற-86)





# வருகிறார் புதிய லாரா

மேற்கிந்திய அணிக்கு பிரைன் லாராவைப் போல், அவரின் பள்ளிச் சாதனைகளையும் முறியடித்த இன்னொரு இளம் சாதனை வீரர் வரவுள்ளார்.
மேற்கிந்தியத் தீவு கிரிக்கெட்டில் பல பெரிய கிரிக்கெட் வீரர்களை உருவாக்கியுள்ளது. அதில் பிரையன் லாரா அளவுக்கு புகழ் பெற்றவர்கள் ஒருவரும் இல்லை.
இதே போல் கர்ஸ்டன் காளிசரண் என்ற 14 வயது இளம் வீரர் டிரினிடாட்-டொபாக்கோவின் 15 வயதுக்குட்பட்ட அணியின் தலைவராக உள்ளார்.
இவர் மே மாதம் 11 ஆம் திகதி போர்ட் ஒப் ஸ்பெயின் மைதானத்தில் 35 பந்துப்பரிமாற்றங்களில் 404 ஓட்டங்களை விளாசிப் புதிய சாதனை புரிந்துள்ளார்.
வாலென்சியா உயர் பாடசாலை அணிக்கெதிரான இந்தக் காலிறுதி ஆட்டத்தில் 44 பவுண்டரிகள்,31 சிக்சர்கள் விளாசிய இந்த இளம் அதிரடி வீரர் 35 பந்துகளிலேயே சதத்தைப் பூர்த்தி செய்தார்.
அது மட்டுமல்லாது இவர் ஏற்கனவே லாராவின் பள்ளிக் கிரிக்கெட் சாதனையையும் முறியடித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.
மேலும் முன்னாள் மேற்கிந்தியத் தீவு இடது கை வீரர் ஆல்வின் காளிச்சரண் பெயரை இந்த இளம் வீரர் பெயர் கொண்டிருப்பதால் ஆல்வின் காளிச்சரண் மற்றும் பிரையன் லாரா ஆகிய இருவரது கலவையாகவும் இவர் திகழ்வார் என்ற பெருத்த எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. (த)

# செரீனா சம்பியன்

இத்தாலியில் நடந்த ரோம் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில், நடப்புச் சம்பியனும் முதல்நிலை வீராங்கனையுமான செரீனா வில்லியம்ஸ் சம்பியன் பட்டம் வென்றார்.
செரீனா 6:3, 6:0 என்ற நேர் செற்களில் எர்ரானியை மிக எளிதாக வென்று கிண்ணத்தைத் தக்கவைத்துக் கொண்டார். எர்ரானியுடன் 7 முறை நேருக்கு நேர் மோதியுள்ள செரீனா, ஒரு போட்டியில் கூடத் தோற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.
(த)





# மக்கலம் மீது 100 வீத நம்பிக்கை

மக்கலம் மீதான சூதாட்டக் குற்றச்சாட்டு தவறானது என்றும், அவர் மீது 100 சதவீதம் நம்பிக்கை உள்ளதாகவும் நியூசிலாந்து கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.
நியூசிலாந்து அணியின் சிறந்த வீரராக மட்டுமல்லாமல், அந்த அணியின் தலைவராக உள்ளவர் பிரண்டன் மக்கலம்.
அவர் 2008 ஆம் ஆண்டு தன்னைச் சூதாட்டத் தரகர்கள் 2 முறை தொடர்பு கொண்டு மோசமாக விளையாடுமாறு கேட்டுள்ளதாகவும், இதற்காக ரூபா 1.08 கோடி பேரம் பேசப்பட்டது எனவும், மேலும் இந்தத் தகவலை மக்கலம் தெரிவித்ததாகவும் இங்கிலாந்துப் பத்திரிகை ஒன்று வெளியிட்டிருந்தது.
இதைத் தொடர்ந்து ஐ.சி.சி. அவரிடம் விசாரணை நடத்தியதாகவும், அவர் ஆட்டத்தை பிக்சிங் செய்ய மறுத்து விட்டதாகவும் மக்கலம் குறிப்பிட்டதாக அந்த பத்திரிகை தெரிவித்துள்ளது.
இது குறித்து நியூசிலாந்து கிரிக்கெட் சபை கூறுகையில், ஐ.சி.சி. ஊழல் தடுப்புக் குழுவிடம் மக்கலம் வாக்கு மூலம் கொடுத்திருப்பதாக இங்கிலாந்துப் பத்திரிக்கை தெரிவித்திருப்பது குழப்பத்தை ஏற்படுத்துவதாகும்.
மேலும் மக்கலமிடம் ஐ.சி.சி. விசாரணை நடத்தவில்லை என்றும், அணித் தலைவரான அவர் மீது 100 சதவீதம் நம்பிக்கை உள்ளதாகவும் கூறியுள்ளது. (த)



# சசெக்ஸை வீழ்த்திய இலங்கை அணி


இங்கிலாந்தின் சசெக்ஸ் அணியை இலங்கை அணி 10 இலக்குகளால் வென்றது.
இங்கிலாந்து மற்றும் அயர்லாந்துக்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி, நேற்று முன்தினம் இடம்பெற்ற 20/20 போட்டியில் இங்கிலாந்தின் பிராந்திய அணியான சசெக்ஸ் அணியை எதிர்கொண்டது.
இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சசெக்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தது.
இதன்படி களமிறங்கிய சசெக்ஸ் அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகள் இழப்புக்கு 126 ஓட்டங்களை பெற்றது.
சசெக்ஸ் அணிக்காக மச்சென் அதிகபட்சமாக 63 ஓட்டங்கள் எடுத்தார்.
இலங்கை அணியில் பெரேரா, மலிங்க தலா 2 இலக்குகளை கைப்பற்றினர்.
127 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்குடன் இலங்கை அணி களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர்களாக இறங்கிய விதானகே, டில்ஷான் அதிரடியாக விளையாட 65 பந்துகள் மீதமுள்ள நிலையில், 10 இலக்குகளால் அபார வெற்றி பெற்றது.
விதானகே 24 பந்துகளில் 52 ஓட்டங்களையும் டில்ஷான் 31 பந்துகளில் 73 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.
(த)

# மலிங்க வருத்தம்



ஐ.பி.எல். போட்டிகளில் விளையாடி வரும் இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் மலிங்கா, மும்பை அணியை விட்டுப் பிரிவது வருத்தமளிப்பதாக கூறியுள்ளார்.
தொடர் தோல்விகளால் ஐ.பி.எல். போட்டிகளில் இருந்து வெளியேறும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது மும்பை அணி. இதைத் தொடர்ந்து இங்கிலாந்தில் விளையாடி வரும் இலங்கை அணிக்காக களமிறங்க கிளம்பிவிட்டார் மலிங்க.
மும்பை அணியை விட்டுப் பிரிவது மிக மன வருத்தமாக உள்ளது என்று அவர் கூறியுள்ளார். (த)

# காதலியை மாற்றினார் கலிஸ்



தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரர் கலிஸ் மொடல் அழகி ஷமோன் ஜார்டிமுடன் பிரிவு ஏற்பட்ட நிலையில், நான்காவது முறையாகத் தனது காதலியை மாற்றியுள்ளார்.
கலிஸ், உலகின் சிறந்த வீரர்களில் ஒருவராகவும், அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்கும் வீரர்களில் முதலிடத்திலும் உள்ளார். இவர் கடந்த ஆண்டு டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றார்.
கலிஸின் முதல் காதலி கிளிண்டி நெல். 2002 இல் மிஸ் தென்னாபிரிக்கா போட்டியில் தேர்வானவர். அதன் பின், 2003 இல், மிஸ் தென்னாபிரிக்கா போட்டியில் இரண்டாவது இடம் பெற்ற மரிசா எக்லியுடன் சேர்ந்தார்.
அடுத்து மொடல் அழகி ஷமோன் ஜார்டிமுடன் சுற்றித் திரிந்தார். ஆனால் கடந்த ஆண்டு இவர்களுக்குள் பிரிவு ஏற்பட்ட நிலையில், நான்காவது முறையாக கிம் ரிவாலாண்டுவுடன் இணைந்துள்ளார். இவரும் 2011 இல், தென்னாபிரிக்காவின் அழகிப் போட்டியில் வெற்றி பெற்றவர் தான்.
இந்த ஆண்டு தொடக்கத்தில் தென்னாபிரிக்காவில் நடந்த விளையாட்டு விருது வழங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்க, இருவரும் முதன் முறையாக இணைந்து வந்தனர். மேலும் ஏழாவது ஐ.பி.எல் தொடரில் கொல்கத்தா அணிக்காக விளையாடி வரும் இவர் கிம்மையும் அழைத்து வந்துள்ளார். (த)

# ஆடுகளத்தில் மோதல் தவறு



ஐ.பி.எல். தொடரில் பொல்லார்ட்டும், ஸ்டார்க்கும் மோதலில் ஈடுபட்டது தவறானது என்று பெங்களூர் அணியின் தலைமைப் பயிற்சியாளரான டானியல் வெற்றோரி கூறியுள்ளார். ஐ.பி.எல். போட்டிகள் வந்துவிட்டாலே போட்டிகளில் மட்டுமல்ல, வீரர்களின் மோதலுக்கும் குறைவிருக்காது. அந்த வகையில் கடந்த தொடரில் கொல்கத்தா அணித் தலைவர் கம்பீர், பெங்களூர் அணித் தலைவர் கோஹ்லி வார்த்தை போரில் ஈடுபட்டனர்.
இதைத் தொடர்ந்து, இந்தத் தொடரில் அனைவராலும் பேசப்பட்டது மும்பை இந்தியன்ஸ் துடுப்பாட்டக்காரர் பொல்லார்ட்டுக்கும், பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் பந்து வீச்சாளர் ஸ்டார்க்குக்கும் இடையே நடந்த மோதல்.
இது குறித்து பெங்களூர் அணியின் தலைமைப் பயிற்சியாளரான நியூசிலாந்தின் வெற்றோரி கூறுகையில்,
பொல்லார்ட்டு, ஸ்டார்க் நடந்து கொண்டவிதம் தவறானது. ஆனால் இது குறித்து ஸ்டார்க்கிடம் என்னால் பேச முடியவில்லை. இந்த மோதலின் காரணமாக இருவருக்கும் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இது போன்ற சம்பவங்கள் கிரிக்கெட் அரங்கில் இனி நடக்கக்கூடாது என்று கூறியுள்ளார்.
(த)

# இறுதிவரை போராடித் தோற்றது டெல்லி



பஞ்சாப் அணிக்கு எதிரான ஆட்டத்தில் போராடித் தோற்றது டெல்லி டேர்டெவில்ஸ் அணி.

ஏழாவது ஐ.பி.எல். கிரிக்கெட் சுற்றுப் போட்டி இந்தியாவில் இடம்பெற்று வருகின்றது. இதில் நேற்று இடம்பெற்ற 45 ஆவது ஆட்டத்தில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் - டெல்லிடேர்டெவில்ஸ் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற டெல்லி டேர்டெவில்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. அவ்வணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக முரளி விஜய், கெவின் பீற்றர்சன் ஜோடி களமிறங்கியது. ஆட்டத்தின் மூன்றாவது பந்துப்பரிமாற்றத்தில் அணி 13 ஓட்டங்கங்களைப் பெற்றிருந்த போது 5ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார் முரளி விஜய்.

தொடர்ந்து இரண்டாவது இலக்குக்காக பீற்றர்சனுடன் இணைந்தார் தினேஸ் கார்த்திக் . இருவரும் ஆரம்பம் முதல் பஞ்சாப் அணியின் பந்து வீச்சைப் போட்டுத் தாக்கினர். இருவரும் களத்தில் இருக்கும் வரை பஞ்சாப் பந்து வீச்சாளர்கள் பஞ்சாகினார்கள். 10.3 பந்துப்பரிமாற்றங்களில் 84 ஓட்டங்கள் பெற்றிருந்த போது பீற்றர்சன் 32 பந்துகளில் 49 ஓட்டங்கள் பெற்று ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய டுமினி ஒத்துழைப்பு வழங்க தினேஸ் கார்த்திக் வெளுத்து வாங்கினார். இருவரும் இணைப்பாட்டமாக 64 ஓட்டங்கள் பெற்ற போது டுமினி 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேற அவரைத் தொடர்ந்து களமிறங்கிய கெதன் ஓட்டம் எதனையும் பெறாமலும் அகர்வால் 6 ஓட்டங்களுடனும் களத்தை விட்டு வெளியேற. வாண வேடிக்கை காட்டிய தினேஸ் கார்த்திக்கும் 44 பந்துகளில் 7நான்கு ஓட்டங்கள், 3 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 69 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

இறுதியில் 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 164 ஓட்டங்களைப் பெற்றது டெல்லி டெர்டேவில்ஸ் அணி. மனோஜ் திவாரி 10 ஓட்டங்களுடனும், மொகமட் சமி ஒரு ஓட்டத்துடனும் களத்திலிருந்தனர்.

பந்து வீச்சில் சண்டீப் சர்மா, பௌரன் ஹெற்றிக்ஸ் தலா 3 இலக்குகளையும் அக்சர் பட்டேல் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

பலமான துடுப்பாட்ட வரிசையைக் கொண்ட பஞ்சாப் அணிக்கு 165 என்ற வெற்றி இலக்கு தூசு மாதிரி என்றே அனைவரும் கருதினர். ஆனால் நிலை வேறுமாதிரி அமைந்து விட்டது. அவ்வணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான விரேந்திர சேவாக், மனன் வோரா ஆகியோர் களமிறங்கினர். ஒரு புறம் சேவாக் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்த மறு முனையில் எதிர் அணியின் பந்து வீச்சுக்களை போட்டுத் தாக்கினர் வோரா. இவர்கள் அதிடியில் 6.2 பந்துப்பரிமாற்றங்களில் 67 ஓட்டங்கள் பெற்றிருந்த போது வோரா 19 பந்துகளில் 4 நான்கு ஓட்டங்கள், 3 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 42 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்து வெளியேறினார்.

அடுத்து சேவாக்குடன் களமிறங்கினார் அதிரடி மன்னன் மக்ஸ் வெல். இவர்கள் இருவரும் மாறிமாறி 6 ஓட்டங்களை விளாசிக் கொண்டிருந்த சமயம் சேவாக் 23 ஓட்டங்களுடன் நடையைக் கட்டினார். அதே பந்துப்பரிமாற்றத்தில் மக்ஸ்வெல்லும் 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து களமிறங்கிய மில்லரும் 2 ஓட்டங்களுடன் வெளியேற பஞ்சாப்பின் நிலை கவலைக்கிடமானது. இருந்த போதும் அடுத்து இணைந்த அக்ஸர் பட்டேல் - வரிட்கி மன் ஷா ஆகியோர் நம்பிக்கை தரும் விதத்தில் துடுப்பெடுத்தாடி அணியின் வெற்றியை இலகுபடுத்தினர். ஆனாலும் ஷா 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார்.

அடுத்து பட்டேலுடன் இணைந்த கிரேக் பெய்லி 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். ஒருபுறம் இலக்குகள் சீரான இடைவெளியில் சரிக்கப்பட்டாலும் இறுதிவரை ஆட்டமிழக்காது இருந்து அணியை வெற்றி பெறச் செய்தார் பட்டேல். இறுதியில் 19.4 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 165 ஓட்டங்களைப் பெற்று நான்கு இலக்குகளால் வெற்றி பெற்றது பஞ்சாப் அணி. அஸ்கார் பட்டேல் 42 ஓட்டங்களுடனும் ரிஷி தவான் 8 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்திலிருந்தனர்.

பந்து வீச்சில் அம்ரான் தஹிர் 3 இலக்குகளையும், டுமினி 2 இலக்குகளையும், மொஹமட் சபி ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக அக்ஸர் பட்டேல் தெரிவு செய்யப்பட்டார். (400)



# ஹசி, சிமன்ஸ் அதிரடி ஆட்டத்தால் ராஜஸ்தானை வென்றது மும்பை

மைக்கல் ஹசி, சிமன்ஸ் அதிரடியில் 25 ஓட்டங்களால் ராஜஸ்தானைத் தோற்கடித்தது மும்பை இந்தியன்ஸ் அணி.

நேற்று அகமதபாத்தில் இடம்பெற்ற ஐ.பி.எல். போட்டியின் 44 ஆவது லீக் ஆட்டத்தில் ராஜஸ்தான் - மும்பை அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மும்பை அணித் தலைவர் றோகித் சர்மா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இதனை அடுத்து மைக்கல் ஹசியும் - சிம்மென்ஸூம் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கினார். இருவரும் ஆரம்பம் முதலே அதிடியாக விளையாட இலக்குகள் இழப்பின்றி 100 ஓட்டங்கள் கடந்தது மும்பை அணி.

14.3 பந்துப்பரிமாற்றங்களில் இணைப்பாட்டமாக 120 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது 51 பந்துகளில் 2 ஆறு ஓட்டங்கள், 6 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 62 ஓட்டங்கள் பெற்றிருந்த போது சிமன்ஸ் ஆட்டமிழந் தார். அதே பந்துப்பரிமாற்றத்திலேயே ஹசியும் 39 பந்துகளில் 2ஆறு ஓட்டங்கள், 3 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 56 ஓட்டங்களுடன் வெளியேற்றப்பட்டார்.

மூன்றாவது இலக்குக்காக இணைந்த கெரோன் பொலாா்ட்- ரோகித் சர்மா இருவரும் அதிரடியாக ஆட மும்பை அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை மட்டும் இழந்து 178 ஓட்டங்களைச் சேர்த்தது.

பந்து வீச்சில் அங்கித் ஷர்மா 2 இலக்குகளை வீழ்த்தினார்.

இதனை அடுத்து 179 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய ராஜஸ்தான் அணி ஆரம்பத்திலிருந்தே தடுமாறியது. ஆரம்ப வீரர் கருண் நாயர் ஒரு முனையில் அதிரடியாகத் துடுப்பெடுத்தாட மறுமுனையில் இலக்குகள் சரிந்த வண்ணம் இருந்தன.

உன்முக்சந்த் (2), வோட்சன் (5) ஆகியோரை ஓஜா விரைவாக வெளியேற்றினார். அதன் பின் வந்த சாம்சன் (2), கூப்பர் (5),அங்கித் சர்மா (4), பின்னி (2) ஆகியோர் ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் நடையைக் கட்டினர். பொறுப்புடன் ஆடிய நாயர் 24 பந்துகளில் 4 நான்கு ஓட்டங்கள் 3 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 48 ஓட்டங்களைக் குவித்து அரைச் சதம் வாய்ப்பை தவறவிட்டு ஆட்டமிழந்து வெளியேறினார்.

75 ஓட்டங்களுக்கு 7 இலக்குகளை இழந்து தடுமாறிய ராஜஸ்தான் அணிக்குப் பிரட் ஹொக் - பல்கினர் ஜோடி ஆறுதல் அளித்தது. இவர்கள் இருவரும் அதிரடியாக ஆடிய போதும் இலக்கை எட்ட இவர்களால் முடியவில்லை. அதிரடியாக ஆடிய ஹொக் 30 பந்துகளில் 3 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 40 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க ராஜஸ்தான் அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகள் இழப்பிற்கு 153 ஓட்டங்களைப் பெற்றது. இதனால் 25 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மும்பை அணி வெற்றி பெற்றது. பல்கினர் 31 ஓட்டங்களுடனும் - பாட்டிய 6 ஓட்டங்களுடனும் களத்திலிருந்தனர்.

பந்து வீச்சில் மும்பை அணி சார்பாக கரிஸ்மர் சன்ரோகி, பிறக்யன் ஓஜா, ஹர்பஜன் சிங் மற்றும் ஷிரியஸ் கோபல் ஆகியோர் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக மைக்கல் ஹசி தெரிவு செய்யப்பட்டார்.

(த-400)



# கடும் வெப்பமான காலத்தில் கட்டாரில் உலகக் கிண்ணமா?

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளை 2022 ஆம் ஆண்டில் கட்டாரில் நடத்துவது என்பது தவறாக எடுக்கப்பட்ட முடிவு என்று உலக உதைபந்தாட்டப் போட்டிகளின் நிர்வாக அமைப்பான பிபாவின் தலைவர் மீண்டும் தெரிவித்துள்ளார்.

பாரம்பரியமாக ஜூன் –ஜூலை மாதங்களில் நடத்தப்படும் உலகக் கிண்ணப் போட்டிகளை, அந்த மாதங்களில் 50 செல்சியஸ் வரை வெயில் கொளுத்தும் கட்டாரில் நடத்துவதற்கு பிபா ஏற்கனவே தீர்மானித்துள்ளது.

இந்த முடிவு தவறானதா என்று பிபாவின் தலைவர் ஸெப் பிளாட்டரிடம் சுவிஸ் தொலைக்காட்சி ஒன்று கேள்வி எழுப்பியது.

'ஆம் நிச்சயமாக' என்று அதற்குப் பதிலளித்த அவர், எல்லோரும் வாழ்க்கையில் தவறு இழைத்திருக்கிறார்கள் என்று கூறினார்.

அதேநேரம் வளைகுடா நாடான கட்டார், 2022ஆம் ஆண்டு உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளை விலைக்கு வாங்கியுள்ளதாகக் கூறப்படும் விமர்சனங்களை ஸெப் பிளாட்டர் நிராகரித்தார்.

கட்டாரில் வெப்பம் மிக அதிகமாக இருக்கும் என்று சுட்டிக்காட்டிய அறிக்கையை பெற்றிருந்த நிலையிலும், பிபாவின் நிறைவேற்றுக் குழு கட்டாரின் போட்டிக் கோரிக்கையை அங்கீகரித்துவிட்டதாக அவர் கூறினார்.

இதேவேளை, கட்டாரில் குளிரான காலநிலை நிலவக்கூடிய ஆண்டின் இறுதிக் கட்டத்துக்குப் போட்டி நகர்த்தப்படுவதற்கான வாய்ப்பு உள்ளதாகவும் பிபா தலைவர் தெரிவித்தார்.

(த)



# உதைபந்தில் எனக்கு காதல் மிக அதிகம்

கிரிக்கெட்டில் அரங்கத்தை அதிரடியால் உறைய வைக்கும் மேற்கிந்திய அணியின் அதிரடி வீரர் கெய்ல். கிரிக்கெட்டை விட உதைபந்தின் மீது அதிக காதல் இருப்பதாக கூறியுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் தலைசிறந்த வீரராக விளங்கும் கெய்ல், ஐ.பி.எல் போட்டிகளில் பெங்களூர் அணிக்காக விளையாடி வருகிறார்.

இவர் தன் உதைபந்துக் காதல் பற்றி கூறுகையில்,

சிறு வயதிலிருந்தே உதைபந்து விளையாட்டில் ஆர்வத்துடன் இருப்பேன். பாடசாலையில் 14 வயதுக்குட்பட்டோருக்கான அணியை நான் வழி நடத்தியிருக்கிறேன். அப்போதெல்லாம், கிரிக்கெட் பற்றிய எண்ணமே என்னிடம் இருந்தது கிடையாது.

இதன் பின் 19 வயதுக்குட்பட்டோருக்கான தொடரில் பங்கேற்க இருந்தேன். ஆனால், பயிற்சியில் அதிக நேரம் ஓட வேண்டியிருந்தது. இதற்காகவே, அதில் கலந்து கொள்ளவில்லை. பின்னர் ஆர்வமும் குறைந்துவிட்டது.

நான் பிரேசில் அணியின் ரசிகன். ஆனால் தனிப்பட்ட முறையில் போர்த்துக்கல் அணியின் கிறிஸ்டியானோ றொனால்டினோவை எனக்குப் பிடிக்கும்-என்றார். (த)


தற்போது அமோக விற்பனையில்
ஐரோப்பிய நாடுகளுக்கான செங்கன் விசா வெறும் 14 இலட்சங்களுடன்
100 % சட்ட ரீதியான பயண ஆலோசனை
இத்தாலி, ஜேர்மனி, சுவிஸ், பிரான்ஸ்.... போன்ற நாடுகளுக்கான விசா வெறும் 14 இலட்சங்களுடன்
இன்னும் 7பேருக்கே அரியவாய்ப்பு !
7 நாள்களும் திறந்திருப்போம்
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090





பொருளியல் புள்ளி விவரங்கள்
A/L 2014, 2015 & போட்டிப் பரீட்சைகளுக்குரியது
வே. கருணாகரன்
ரூபா 90
பூபாலசிங்கம் புத்தகசாலை
அன்னை புத்தகசாலை



புதிய முறையிலான
தேசிய ஆங்கில டிப்ளோமா
அடிப்படை ஆங்கில அறிவற்றவர்களும் ஆங்கிலத்தை முழுமையாக பேசக் கற்கும் வகையில் ஷாம்சனினால் உருவாக்கப்பட்ட 20 புத்தகங்களைக்கொண்ட இப் பயிற்சியில் இப்போது வயது வேறுபாடின்றி எவரும் இணையமுடியும்!
வீட்டிலிருந்தபடியே புத்தகங்களை கற்று ஒவ்வொரு புத்தகங்களிலுமுள்ள 250 பயிற்சிகளை செய்து எம்மிடம் ஒப்படைத்தால் போதுமானது.
பாடசாலை மாணவர்கள், வீட்டுப்பெண்கள் வகுப்புகளுக்கவர நேரமற்றோர், ஆங்கிலம் பேச விரும்புவோர் இணையமுடியும்.
இலவசம் 20 புத்தகங்கள்
26.05.2014 இற்குமுன் பயிற்சியில் இணையும் அனைவருக்கும் பயிற்சிக்கட்டணம் 8000.00 3000.00 மட்டுமே!
பயிற்சிநெறி முடிவில் சர்வதேச தரத்திலான Diploma Certificate வழங்கப்படும்.
SAAMSON LANGUAGE SCHOOL
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 33 13
077 621 4567




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.05.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.